Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | கார்த்திகை 13 | ரமழான் 28 | ( 28—11—70 ) | சனிக்கிழமை | இதழ் 289

**முக்கிய அறிவித்தல்**

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்ட படியால் மேற்கொண்டு விளம்பரம் எது காரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபட.மாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# யாழ். எம். பி. யாக மார்ட்டின் தொடர்ந்து பதவி வகிப்பார்

## தேர்தல் ஆட்சேபமனு செலவு தொகையுடன் தள்ளுபடி

(நமது நீதிமன்ற நிருபர் கா. யோகநாதன்)



**யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப மனு செலவு தொகையுடன் நேற்று தள்ளுபடிசெய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தொகுதி ஆட்சிமன்றஉறுப்பினராக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. சி. எக்ஸ் மார்ட்டின் தொடர்ந்து இருப்பார்.**



நேற்று நண்பகல் 12 மணிக்கு நீதியரசர் வி. ரி. பண்டித குணவர்த்தன தேர்தல் நீதிமன்றத்தில் தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தார் சுமார் 30 நிமிடங்கள் வாசித்தபின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதிமன்றத்தின் உள்ளேயும்; வெளியேயும் பெருந்திரளானோர் திரண்டிருந்தனர். திருமதி மார்ட்டினும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார், திரு மார்ட்டின் எம் பி நீதிமன்றத்துக்கு வெளியே வந்தபோது அவரது ஆதரவாளர்கள் வெடி கொழுத்தி ஆரவாரம் செய்தனர். மலர்மாலைகள் சூட்டி தங்கள்ஆனந்தத்தைத் தெரிவித்தனர்,

யாழ்ப்பாணம் ஆட்சி மன்ற உறுப்பினராக திரு. ஸி. எக்ஸ். மார்ட்டின் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. துரையப்பா இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

வாக்குச்சீட்டுகள் திருப்பி எண்ணப்பட வேண்டுமென்றும். பெயர் பிரசுரிக்கப்படாத துண்டுப் பிரசுரங்களை திரு மார்ட்டின் விநியோகித்ததாகவும் இம்மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தீர்ப்பைஆட்சேபித்து மனுதார் அப்பீல்செய்ய விருப்பதாகத் தெரிகிறது

1-வது 'டெஸ்ட்'

## ஆஸ்: 308—2

பிரிஸ்பேண், நவ. 27 இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையில் ஆரம்பமான 1-வது டெஸ்ட் போட்டியில், இன்றைய ஆட்டம் முடிவடையும் போது ஆஸ்திரேலியா இரண்டு விக்கெட்டுகளை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது. சக்புல்-175, வோல்டர்-59 ஓட்டங்களுடன் தொடர்ந்து ஆடுகிறார்கள். லோறி (காப்டன்)-04, சப்பில்-59 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்கள்.

# பாப்பரசர் மயிரிழையில் உயிர் தப்பினர்!

## மணிலா விமான நிலையத்தில் கத்தியுடன் ஒருவர் கைது

மணிலா, நவ. 27 பாப்பரசர் ஆறுவதுசின்னப்பர் கத்திக்குத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினர். நேற்று மணிலா விமானநிலையத்தில் விமானத்திலிருந்து இறங்கும்போது ஒருவர் பாப்பரசரை 6அங்குலக்கத்தியால் குத்த முயன்றபோது, பாதுகாவலர்கள் அந்த நபரைத் தடுத்து நிறுத்தினர். அப்போது ஒருவருக்கு விரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பாப்பரசருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை.

பாப்பரசரின் காரியதரிசி கத்தியால் குத்தவந்த நபரைத் தள்ளி விழுத்தினர் என்றும் பாப்பரசரின் அருகில் நின்ற பிலிப்பைன்ஸ் அதிபர் மார்க்கோ கத்தியுடன் வந்த நபரை அடித்து கத்தியை விழுத்தினர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

கத்தியுடன் கைதுசெய்யப்பட்ட நபர் ஒரு ஓவியர்என்றும் விசாரணையில் தெரிய வந்தது. மக்களை மூடநம்பிக்கையிலிருந்து மீட்கவே இச்செயலைச் செய்யத் துணிந்தேன் என்று கைதுசெய்யப்பட்டபோது அந்தநபர் கூறினர். 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாப்பரசரைத் தரிசிக்க மணிலா விமான நிலையத்தில் காத்திருந்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்குபாகிஸ்தானில் உள்ள இடங்களைப் பார்வையிட்டபின்னர், பாப்பரசர் போல் டாக்காவிலிருந்து புறப்பட்டு பிலிப்பைன்ஸ் செல்வதற்காக மணிலா போய்ச்சேர்ந்தார். விமான நிலையத்தில் சொற்பநேரம் உரையாற்றிவிட்டு அதிபர் மார்க்கோவுடன் காரில் ஏறிச்சென்றார்.

### பாப்பரசர் மன்னித்தார்

மணிலாவிற்கு விஜயம் செய்த பாப்பரசர் ஆறுவது சின்னப்பர் மணிலா விமான நிலையத்தில் வந்திறங்கிய பொழுது அவரை கத்தியால் குத்த முயன்ற வாலிபருக்கு பாப்பரசர் மன்னிப்பு அளித்துவிட்டதாக பிலிப்பைன்ஸ் வானொலி அறிவித்தது.

பாப்பரசரைத் தாக்க முயன்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், இத்தாலிய அதிபர் தன் அதிர்ச்சியைத் தெரிவித்தார். இச்செயலை அவர் மிகவும் வன்மையாகக் கண்டித்தார். அவர் தனது அனுதாபத்தை பாப்பரசருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### யாழ் நகரில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் சோதனை

யாழ்ப்பாணம், சனி நேற்று யாழ்நகரில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது பெருந்தொகையான வெங்காயம் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்பட்டது.

வெங்காயத்தைறாத்தல்31 சதத்துக்கு விற்கவேண்டுமென அதிகாரிகள் உத்தரவிட்டபோது அங்கு நின்ற பொதுமக்கள் வெங்காயத்தை 31 சதப்படி வாங்கினர்.

விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களான திருவாளர்கள் ஏ. மார்க்கண்டு, ஆர். சண்முகலிங்கம், எம். கனகரட்னம் ஆகியோர் இத்திடீர்பரிசோதனையைநேற்று நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கு

# இந்திய அரசியல் பிரிந்தவர் கூடினர் கூடியவர் பிரிந்தனர்

தமிழக அரசியலில் பிரிந்தவர் கூடினர். கூடியவர் பிரிந்தனர். சுதந்தராக் கட்சி ஸ்தாபகர் ராஜாஜியும், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த காமராஜரும் பல வருட காலமாக அரசியலில் பிரிந்திருந்தனர். அவர்களும் அவர்களது கட்சிகளும் இனி ஒத்துழைக்கத் தீர்மானித்துள்ளனர். தி. மு. க. வுடன் கூட்டாக ஒத்துழைத்த ராஜாஜியும் சுதந்தராக்கட்சியும் அந்தக்கூட்டிலிருந்து பிரிந்துவிட்டனர்.

தி. மு. க. கூட்டிலிருந்து ராஜாஜி விலக நேரிட்ட காரணமென்ன? பிரதமர் இந்திரா காந்தியையும் அவரது அரசாங்கத்தையும் தி. மு. க. ஆதரிப்பதுதான் இதற்கு முக்கியகாரணமென்பது ராஜாஜி தெரிவிக்கும் காரணம். அதாவது தி மு க. மீது தனிப்பட்டமுறையில் ராஜாஜிக்கு எவ்வித கசப்புமில்லை. பிரதமர் இந்திரா காந்தி கம்யூனிஸ்ட் பக்கமாகச் சாய்ந்து வருவதாயும் வங்கிகளை தேசிய மயமாக்கி சமஸ்தான மன்னர்களின் பென்ஷன்களைப் பறிமுதல் செய்ததையும் ராஜாஜி வன்மையாகக் கண்டித்துள்ளார். தி. மு. க. கூட்டிலிருந்து பிரிவதால் அடுத்த தேர்தலில் தமது கட்சிக்கே பாதகமேற்படுமென்பதைத் தாம் உணர்ந்துள்ளதாகவும் என்றாலும் தேர்தல் வெற்றியைவிடக் கொள்கையைக் கடைப்பிடிப்பதே முக்கியமென்றும் ராஜாஜி கருதுகிறார்.

கஷ்டகாலத்திலே கூடாதவர்களின் கூட்டுறவும் கிடைக்குமென்றும் ஆங்கிலத்தில் ஒரு வசனமுண்டு. பழைய காங்கிரஸுக்கும், சுதந்தராவுக்கும் இப்போது ஆட்சி அதிகாரமில்லை. தமிழகத்தில் பல்லாண்டுகள் ஆட்சி நடத்திய காமராஜரோ அவரது காங்கிரஸோ இப்போது ஆட்சியிலில்லை.

''நாங்கள் சுதந்தராவுடன் கூட்டுச் சேர்ந்தது பிற்போக்கு நடவடிக்கையல்ல, அவர்களுக்கு தேசாபிமானமுண்டு இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் அவர்களில் பலர் காங்கிரஸிலிருந்தனர். அவ்வித தலைவருடன் ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காகக் கூட்டுச் சேர்வதை எப்படி பிற்போக்கு என்று கூறலாம்?'' என்று கேட்கிறார் காமராஜர். இதற்கு மாறாக தி. மு. கா. வுடனும், கம்யூனிஸ்டுகளுடனும் புது காங்கிரஸ் (பிரதமர் இந்திரா) கூட்டு சேர்ந்துள்ளதுதான் திட்டமாகப் பிற்போக்கானதென்கிறார் அவர்.

''தி. மு. க. முன்னர் இந்திய சுதந்திரத்துக்கு விரோதமாக இருந்தது. இந்திராவின் கூட்டுக் கட்சிகளில் மற்றொன்று (கம்யூனிஸ்ட்) இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஓர் அரசுக்கு விசுவாசமுள்ளது. இந்தக் கூட்டு பிற்போக்கல்லாவிடில் பிற்போக்கென்பதுதான் என்ன?'' என்பது காமராஜின் வாதம். பிற்போக்கு எது, முற்போக்கு எது என்பதுபற்றி தீர்மானிப்பது யார்? பொதுமக்கள்தான் என்றால், அவர்கள் கேரளத்திலும், இவ்வாரம் ஹைதராபாத்திலும் இந்திரா காங்கிரஸையே ஆதரித்துள்ளனர்.

— பராசரன் —

ஹைதராபாத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான இடைத் தேர்தலில் புதுகாங்கிரஸ் கட்சி அபேட்சகர் 30,749 வாக்குகள் பெற்றிருக்கையில், பழைய காங்கிரஸின் ஆதரவைப் பெற்றவர் 7542 வாக்குகளும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர் 9008 வாக்குகளுமே பெற்றுள்ளனர். மொத்தம் பதிவான வாக்குகள் சுமார் 49 ஆயிரமாகும். இத்தேர்தல் முடிவு மூலம் இரு முக்கிய விஷயங்கள் தெரிகின்றன. ஒன்று இந்திரா காங்கிரஸ் கம்யூனிஸ்ட் அல்ல என்பது. கம்யூனிஸ்ட் ஆயின் கம்யூனிஸ்ட் ஆதரவாளர், இந்திரா கட்சியின் அபேட்சகருக்கு எதிராகப் போட்டியிட்டிருக்கமாட்டார். மற்றொன்று, இந்திரா காங்கிரஸ்மீது பொதுமக்களுக்கு அதிக நம்பிக்கை இருக்கிறதென்பது. பழைய காங்கிரஸும் சுதந்தராவும் வேறு கட்சிகளும் சேர்ந்து எதிர்ப்பினும், இந்திரா காங்கிரஸை வெல்ல முடியுமா என்பது மிகச்சந்தேகமே.

0 0 0

பிரதமர் இந்திரா செய்த அரசியல் பாவமென்ன? இந்திய ஜனாதிபதி தேர்தலில் கிரியை ஆதரித்து வெற்றி பெற்றதுதான் கட்சியின் தலைமை பீடத்தின் முடிவுக்கு மாறாகத் தாம் நடந்துகொண்டதற்காக இந்திரா வருத்தம் தெரிவித்தால் அவரைச் சேர்த்துக்கொள்ள சிண்டிகேட் இன்னும் தயாராகவுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இதற்கு பிரதமர் இந்திரா சம்மதிக்கவில்லை. தலைமைப்பீடம் என்றுசொல்லி ஒரு கோஷ்டியினர் காங்கிரஸையும், அரசாங்கத்தையும் ஆட்டிவைப்பதைத் தாம் ஆதரிக்கமுடியாதென்கிறார் அவர். கிரி அவர்களின் வெற்றி உண்மையில் பொதுமக்களின் தீர்ப்பாகும். இந்திராவுக்கும், சிண்டிகேட்டுக்கும் ஏற்பட்ட தகராறில், பொதுமக்கள் இந்திராவையே ஆதரித்து தீர்ப்பு வழங்கியுள்ளனர். ஜனநாயகக் கொள்கையை ஆதரிப்பவர்களும் மக்கள் தீர்ப்பை மறைமுகமாகவும் எதிர்க்க முடியுமா? ஜனாதிபதி தேர்தல் விஷயத்துல் சிண்டிகேட் தவறு செய்துவிட்டதென்பதே பொதுமக்களின் முடிவு. ஆகவே வீண்கௌரவங்களைப் பாராமல், நாட்டில் அமைதியையும், ஒற்றுமையையும் முன்னிட்டு, பழைய காங்கிரஸ், மனமாற்றங்கொண்டு, பிரதமர் இந்திராமீது சாட்டிய குற்றத்தை வாபஸ் பெற்றால் அது பலவிதங்களிலும் மேலான பலனைத் தரக்கூடும். கம்யூனிஸ்ட், தி. மு. க. முதலிய கட்சிகளின் உதவியை பிரதமர் இந்திரா நாடவேண்டிய அவசியமும் இராது. தங்கள் மனப்போக்கின் காரணமாகவே, காங்கிரஸ் பிளவுபட்டதுடன், பிரதமர் இந்திரா மற்ற கட்சிகளின் ஆதரவையும் நாடவேண்டியேற்பட்டது. இதையுணர்ந்தே பொதுமக்களின் ஆதரவு பிரதமர் இந்திராவுக்குக் கிடைத்துவருகிறது. சுதந்தரா கட்சியில், தேசாபிமானிகள் உள்ளனர்தான் ஆனால் இந்திரா காங்கிரஸ் கட்சியிலும் அவ்வளவு தேசாபிமானிகள் இருக்கின்றனர்தானே. நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் ஆபத்துகள் உருவாகியிருக்கையில் அற்ப காரணங்களுக்காக வேற்றுமைகளை வளர்ப்பதும், பிடிவாதம் காட்டுவதும் அரசியல் ஞானமோ தேசாபிமானமோ ஆகுமா?

# ஆலய தர்ம பரிபாலன சட்டம் அவசியம்தானா?

## ஜயாறன் எழுதுவது:

கேரளத்திலே கோட்டையம் எனும் ஊரிலுள்ள சிவாலயத்தில் சென்றகார்த்திகை சோமவாரத்தன்று வழிபட வந்தவர்களுக்கிடையே அடிதடி சண்டை ஏற்பட்டு, பொலிஸ் வந்து கலைக்கவேண்டியேற்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

சண்டைக்குக் காரணம் என்ன தெரியுமா? வழிபட வந்தவரில் சிலர் சட்டை அணிந்திருந்தனர். சிலர் அணியவில்லை. திருநக்கார மகாதேவர் ஆலயத்தில் வழிபட வருபவர்யாரும்சட்டை அணியப் படாதென்பதே இதுவரை இருந்த நியதி.

ஆனால் கேரளத்திலே 'இந்து தர்மபரிபாலன' சபையினர், இம்மாதம் முதல் யாரும் சட்டை அணிந்தும் கோவிலில் தரிசிக்கலாமென்று உத்தரவு போட்டதால், சிலர் சட்டை அணிந்து வந்தனர்.

தீபாராதனை முடிந்ததும் இருசார்பினருக்கும் சந்நிதானத்திலேயே பேச்சுதடித்தது. சட்டை அணிந்தவரை அணியாதபக்தர் அழைத்து, 'ஒன்றுசட்டையைக்கழற்று, அல்லது வெளியே போ' என்று கேட்டனர். இருசார்பினருக்கும் பேச்சு தடித்து அடிதடியில் முடிந்தது. பொலிசார் விரைந்து வந்து இரு சாராரையும் கலைத்தனராம்.

தமிழகத்தில் பல கோயில்களிலும் சட்டை அணிந்து தரிசனம் செய்கிறார்கள்; ஆனால் மலையாளத்தில் அந்த வழக்கமில்லை. வழக்கத்தை மாற்ற, 'பரிபாலனசபையார்' உத்தரவிட்டதன் பயனே இந்தக் கலவரம். இந்த உத்தரவால்இனிவழக்கம் மாறுமா, அல்லது உத்தரவுதான் மாறுமா? என்பது இனித்தான் தெரியவேண்டும்.

இலங்கையிலே, ஆலய, தர்ம பரிபாலனத்துக்கான சபையை அமைக்க புதிய சட்டம் வரலாமென்று ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இதைப்பற்றி ஓர் அன்பர் டெலிபோன் செய்து கவலை தெரிவித்தார். இன்று [illegible] கோயில்கள் நன்கு நடக்கின்றன. சிலவற்றில் பூசைகள் ஒழுங்காக நடக்கவில்லை.

ஆலயச்சட்டம் வந்தால் கோவில்வழிபாடுகள் சரிவர நடக்குமா? இது நல்லதா? என்பதைப்பற்றி சைவமக்களுக்குள்ளாக இன்று கருத்து வேற்றுமையுண்டு. இது பற்றிய உங்கள் கருத்துக்களை தயவுசெய்து தெரிவியுங்கள்.

0 0 0

இந்திய ஜனாதிபதி கிரி அடுத்த 25 நாட்களுக்கு, கேரளத்திலே கோட்டக்கல் எனும் ஊரில்இருந்து பூரண ஓய்வெடுத்துக் கொள்ளுகிறார். ''எனக்குநல்ல சுகம்தான். ஆனாலும் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை இவ்விதம் காயகல்பம் செய்து கொள்ளுகிறேன். பத்து ஆண்டுகளாக இவ்விதம் செய்கிறேன். இங்கிருந்து, வயதில் 10வருடம் குறைந்து, 20 வருட அதிக உழைப்புடன் திரும்புவேன்'' என்று பத்திரிகைக்காரரிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி என்ற முறையில் அவருக்குப் பல பெரிய டாக்டர்கள் இருப்பர். என்றாலும் அவரே ஆயுர்வேத சிகிச்சை பெறுவது குறிப்பிடத்தக்கது. அந்த ஆங்கில டாக்டர்கள் இதுபற்றி என்ன கருதுகிறார்களோ?

யோகர் சுவாமிகள் நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னை யெனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி யென் தனைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதாக்குருவானான் எங்கள் குருநாதன்
அவனி யெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறிய வொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்

தேகம் நீயல்ல வென்றான் எங்கள் குருநாதன்
சித்தத்தில் திகழுகின்றான் எங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்றான் எங்கள் குருநாதன்
முத்திக்கு வித்தென்றான் எங்கள் குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டான் எங்கள் குருநாதன்
விண்ணும் மண்ணும் ஆகிநின்றான் எங்கள் குருநாதன்
தாகத்தை ஆக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
சத்தியத்தைக் காணவைத்தான் எங்கள் குருநாதன்

வாசி யோகத்தே ரென்றான் எங்கள் குருநாதன்
வகார நிலை அறியென்றான் எங்கள் குருநாதன்
காசி தேசம் போவென்றான் எங்கள் குருநாதன்
கங்குல் பகல் இல்லையென்றான் எங்கள் குருநாதன்
நாசி நுனி நோக்கென்றான் எங்கள் குருநாதன்
நடனம் தெரியுமென்றான் எங்கள் குருநாதன்
மாசிலோசை கேட்குமென்றான் எங்கள் குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றான் எங்கள் குருநாதன்

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, வியாளவாலை கிழக்கு அன்னையர் கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி பெர்ணடேத் குருசுமுத்து. உபதலைவர்: திருமதி சுவானப்பிள்ளை ஆசிர்வாதம், காரியதரிசி: திருமதி பிலோமினா ஆபிரகாம், உபகாரியதரிசி திருமதி செபமாலையம்மா அன்ரனி. எட்டுப்பேரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

— —

## இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பிரதமஎழுதுவினைஞர் திரு. இ. யத்தினநாதன் இம்மாதம் 25-ம் திகதி தொடக்கம் சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் கல்விக்கந்தோரிற் கடமையாற்றும் திரு. ஏ. விஜயசுந்தரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இல்லக விளக்கது
இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது
சோதியுள்ளது
பல்லக விளக்கது
பலருங் காண்பது
நல்லக விளக்கது
நமச்சிவாயவே

—அப்பர் அடிகள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமாதானத் திருத் தூதுவனை கிழக்கே வரும் ஞானப் பரிதி

## ஆறுவது சின்னப்ப பாப்பரசர்

அகில உலக கத்தோலிக்க மத பீடத்தின் தலைவரும், கிறீஸ்து பெருமானின் பிரதிநிதியும், சமாதானத்தின் சின்னமாக வையகத்தில் விளங்குபவருமான பாப்பரசர் சின்னப்பர் தென் கிழக்காசிய தரிசனத்துக்காகவும், அவுஸ்திரேலிய தரிசனத்துக்காகவும் செய்யும் விஜயத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

புனித உரோமைவிட்டு அகலாது அங்கிருந்து மறையாட்சி புரிவதையே பாப்பரசர்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். இந்த நியதிக்குப் புதுமையாகவும் சகல உலக மக்களது நல்லெண்ணத்தை தெய்வீக வழியில் வழிப்படுத்தவும் சித்தமுற்ற பாப்பரசர் போல் தென்கிழக்காசியாவை நோக்கிப் பயணப்படுவது மக்கள்குலம்செய்த பாக்கியமேயாகும்.

நமது பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா மக்கள் பாப்புவாம் 6-ம் சின்னப்பரை அழைத்ததும், வரவேற்பதும் ஈழச் சரித்திரத்திலே பொன் நிகழ்ச்சியாகும். புனித பாப்பரசர் இரு மணி நேரம் இலங்கையில் தங்கும் நிகழ்ச்சியானது ஈழம் வாழ்மக்களின் பெரும் பேறேயன்றிப் பிறிதொன்றல்ல. மக்களோடு நேரடித் தொடர்புகொள்ளும் பாப்பிறை இவரேயன்றி வேறெவரும் இல்லை. முன்னாளில் பணவசதி உள்ளவர்கள் மட்டுமே உரோமை சென்று பாப்புவின் திருமுக தரிசனத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுவந்தனர். வேறு சிலர் கடன்பட்டுக் கஷ்டப்பட்டு கப்பலேறிக் கடல் கடந்து புனித பாப்பரசரைக் கண்டு நிறைவுற்றனர்.

பாப்பரசரே கடல்கடந்து கண்டம் கடந்து கஷ்டப்படும் மக்களை காண நேரில் வருகிறார்.

முன்னைய பாப்பரசர்கள் உரோமைவிட்டு அகலாது அங்கிருந்தே மறையாட்சி புரிந்தார்கள். தமது மாளிகையே உலகமாக இருந்து கொண்டு செயல்பட்டார்கள். மதபோதகத்திலும், மதச் சார்பான அலுவல்களிலும்மட்டுமே ஈடுபட்டனர். இன்றைய பாப்பரசரோ தென்கிழக்காசியப் பயணத்தின்மூலமும் அவுஸ்திரேலியப் பயணத்தின்மூலமும் நீண்டதூரப் பயணத்தைச் செய்த பாப்பரசர் என்றதோடுமட்டுமல்லாது ஐந்துகண்டங்களையும் கண்ட பாப்பு என்ற பெயருக்கும் பெருமைக்கும் உரித்தாகிறார்.

ஐக்கிய நாடு சபையைக் கண்டவர் இவர். ஐக்கியத்தின் முக்கியத்தை அங்கு எடுத்துரைத்தார். உலகமன்றத்திலே உலக மக்களுக்காக அமைதிக் குரல் கொடுத்தார். போர் தொடுத்த எல்லோருக்காகவும் அமைதிக் குரல் கொடுத்தார். ''அமைதி அமைதி'' என்பதே அவரது அமுத வாக்காகும். அண்மையிலே ஐ.நா. சபையில் செஞ்சீனாவுக்கும் இடம்கொடுக்கவேண்டும் என்று குரல் கொடுத்தார். சீனா வெளியில் இருப்பதைவிட உள்ளே இருப்பது நலமாகும் என்றார் இவ்வறைகூவல் உலகில் நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கக்கூடியதாக உள்ளது. பாரிலே துயருறும் மக்களுக்கும் போரிலே துன்புறும் மக்களுக்கும் தம் நேசக்கரத்தை நீட்டினார் நலிவுறும்மக்களுள்ளத்தைத் தம் பொலிவுறும் புன்னகையாலும் பொன்னகையாலும் தெளிவுறச் செய்தார்.



எளிமையின் சின்னமாய் ஏழைகளின் சிகரமாய் வாழ்கிறார் இவர். இவர் தன் பொன் முடியைக்கூட பசியால்வாடும் பாலர்சபைக்கு அன்பளிப்பாக அளித்தார். ஆடம்பரங்களைக் குறைத்தார். படாடோபங்களை ஒழித்தார். தம்மைப் போல் தமக்குக்கீழ் உள்ள கருதினால்மார் அதிமேற்றிராணிமார். துணை மேற்றிராணிமார் மேற்றிராணிமார், குருக்கள் முதலியோரையும் ஒழுகும்படி பணித்துளார். இவற்றினால் அபயக்குரல் எழுப்பும் மக்களுக்கு கைகொடுத்து உதவினார். வியட்நாம் போரில் அழிவுற்றபோதும் பையாவ்ரு பசியில் வாடியபோதும் சில வருடங்களின்முன் இலங்கை

### எம். தார்சீசியஸ்

வெள்ளத்தினால் பாதிக்கப் படடபோதும் அண்மையில் பாகிஸ்தான் இயற்கையின் கொடுமையினால் அழிக்கப் பட்டபோதும் பாப்புவின் நேசக்கரம் அங்கெல்லாம் நீண்டது. சாதி, மத, இன நிற நாட்டுப் பேதமின்றி எல்லோரும் மக்களே என்ற கோட்பாட்டிற்கிணங்க சேவை புரிகிறார்.

பன்னிரண்டாம் பத்திநாதர் பாப்பரசராக இருந்தவேளை அவரின் அந்தரங்கக்காரியதரிசியாக இருந்து பெற்ற ஆற்றலும் அனுபவமும்தான் பாப்பரசர் சின்னப்பரை இவ்வுன்னத நிலைக்கு ஆளாக்கியது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் அதன்முடிவும் நடைமுறைகளுக்கு இவரை அறியாத ஏனையவர்களும் அறியவும் தெரியவும் வைத்தன. கத்தோலிக்கம் என்றால் நான்கு சுவர்களினால் ஆன ஓர் அறை என்ற முந்திய நிலையை மாற்றியமைத்தார் ஏனைய மக்களோடு இரண்டறக்கலந்து உறவாடி அவர்களும் இறைவன் மக்கள் தான் என்பதை உணரவைத்தார். பிறசமய மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் தாழ்விலும் வாழ்விலும் பங்குகொண்டு மனிதாபிமானத்தோடு வாழச்செய்தார். இதன்மூலம் கத்தோலிக்கத்தை மற்றவர்களும் அறியவும் உணரவும் வைத்தார்.

லத்தீன் மொழியில் இடம் பெற்ற பூசை முறைகளை அவ்வவ் நாட்டுச் சுய மொழிகளில் நடாத்துவதற்கு வழிவகுத்துப் புதுமை செய்தார். அதிகாரத்தினாலல்ல அன்பினாலே மக்கள் மனதை மாற்றவேண்டும் என்பதே இவரது இலட்சிய போதனை.

''எல்லாப் பாதைகளும் உரோமைநோக்கிச்செல்கின்றன'' என்ற முதுமொழி இன்று மாறி ''எல்லாப் பாதைகளும் கட்டுநாயக்கா நோக்கிச் செல்கின்றன''. இங்குதான் மார்கழிமாதம் 4-ந்திகதிஇரவு 7-55மணிக்கு வந்து இறங்குகிறார் பாப்பரசர். இக்கண்கொள்ளாக் காட்சியைக்காண இலட்சோப இலட்சம் மக்கள் சாதி, மத, நிறபேதமின்றித் திரள இருக்கிறார்கள். தம் வாழ்நாளிலே காணமுடியாத, நடக்கமுடியாத, நினைக்கமுடியாத மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியாக மக்கள் எண்ணுகிறார்கள். கஷ்டப்பட்டாகிலும் பாப்பரசரைக்காணவும், அவர் உரை கேட்கவும், அவர் பலிபூசையில் கலந்து கொள்ளவும் அவர் ஆசியை வேண்டவும் மக்கள் இப்பொழுதுமுதலே ஆயத்தங்கள் செய்கிறார்கள். இலங்கை இதுவரையில் காணாத சனசமுத்திரத்தைக் கண்டுகொள்ள இருக்கும் அதேவேளை அவற்றை எல்லாம் சமாளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டுள்ளது, மக்கள் அரசாங்கம். மக்கள் பாப்புவைக்காணவும் கேட்கவும் வைத்ததையிட்டும் அதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை முன்னேற்பாடாக எடுப்பதையிட்டும் கத்தோலிக்க மக்கள்பாராட்டுகிறார்கள்.

புனித பாப்பரசரின் வருகை சர்வஉலகிலும்சமாதானத்தையும் ஆன்மநேயத்தையும் வளர்க்கப் பிரார்த்திப்போமாக.

---

## நித்தியனின் நேசா வருக!

**இ. நாகராஜன்**

வருக வருக வையகத்தில்
  வாழும் மக்கள் மனமெல்லாம்
அருளைக் கொள்ள நெறிகாட்டும்
  ஆன்மீ கத்தின் உயர்தலைவ!

அலைகள் கூடி உன்புகழை
  அருமை யோடு பாடிற்றும்
மலைகள் நீங்கி வரும்நதிகள்
  வருக வென்றே வாழ்த்தினவாம்!

கத்தும் குயில்கள் கிளியினங்கள்
  கானம் காட்ட மனிதரெலாம்
புத்தம் புதிய உணர்வுற்றுன்
  பூங்கழல் போற்றி நிற்கின்றார்.

ஆளும் சின்னப் பர்என்றே
  ஆன்ம நெறியால் ஆளுமுயர்
பேறே பெற்ற அருட்சுடர்நாம்
  பெருமை பெறவே வருகவிங்கே.

உன்றன் வரவால் உண்மைஒன்ற
  ஒற்றுமை நேர்மை உயர்வுற்றே
நின்றே ஆளும் நித்தயனின்
  நேசா! வருக நிலைதருக!

ஞானச் சுடரே எழுந்தருள்க!
  நந்தா விளக்கே மமதைதரும்
ஊனம் போக்க எழுந்தருள்க!
  ஊக்க ஆக்கம் தந்தருள்க!

வருக! வருக! மாதலைவ!
  மண்ணோர் மனத்தில் நித்தியமாம்
அருளைத் தருக! ஆன்மீக
  ஆக்கம் உறவே வருகவிங்கே!


---

## தேளின் மது மயக்கம்!

நமது வீடுகளில் நம்முடன் வசித்துக் கொண்டு ஆனால் நமது கண்ணுக்குத் தெரியாமல் சந்து பொந்துகளில் ஒதுங்கிப் பதுங்கிக் காத்திருந்து நாம் பொருள்களை எடுக்கும்போது நம்மைத் திடீரென்று தேள் கொட்டிவிடுகிறது 'ஐயோ' என்று அலறுகிறோம். 'அப்பப்பா' என்று துடிக்கிறோம். எவ்வளவு சிகிச்சை செய்தாலும் பலமணி நேரத்திற்கு நோவு நம்மைவிட்டு அகலுவதில்லை. இத்தகைய கொடிய பிறரைச் சமயம் பார்த்துக் கொட்டுவதற்குத் தெரிந்துகொண்டிருக்கும் தேள் தன்னையே கொட்டிக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தத்தை நாம் உண்டுபண்ண முடியும். விஸ்கி மதுபானத்தை அதன் மீது ஒரு சொட்டு விட்டால் போதுமாம். அது தன்னைத்தானே கொட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொள்ளுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிரேகை இருதய ரேகையுடன் நின்றால் ஏற்படும் பலன்!



படத்தில் தெரிவதுபோல் விதிரேகை புத்திரேகையுடன் நிற்கும்பொழுது ஒருவர் தொழில் செய்பவரானால் தொழிலில் பலவிதமான தொந்தரவுகள் ஏற்படும். தொழில் செய்கின்ற இடம் சிறப்பாக இருக்காது. முதலாளி சரியில்லை, வேதனம் கட்டுமானதாயில்லை. சுகவீனம், தொழில் செய்யும் ஏனைய சகபாடிகளுடன் ஒத்துழைப்பு இல்லை என்ற காரணங்கள் கொண்டு தொழிலை விட்டு விலகுவார்.

## கைரேகை அனுபவம் — 3

விதிரேகை புத்திரேகையோடு நின்று புத்திரேகையும் நன்றாயமைந்து இதரகிரகங்களின் நிலைமைகளும் சிறப்பாகவிருந்தால் மேல்படிப்பிற்காகவும் தொழிலிற்காகவும், தொழிலபிவிருத்திக்காகவும் இன்னும் வாழ்வின் முன்னேற்றத்துக்குமான வழிவகைகள் கிடைக்கும். இடமாற்றமும் சிறப்பும் பொருந்தும்.

படத்தில் தெரிவதுபோல் விதிரேகை இருதயரேகையுடன் நின்றுவிடுமாயின் ஏக்கம், மனத்தளர்வு இவைகளைக் குறிப்பதாகும். விதிரேகை இருதயரேகைக்கும் புத்திரேகைக்குமிடையில் இருக்குமானால் அன்னார் அவமானம், பொருள் நஷ்டம், அமைதியற்ற தன்மை ஆகிய இவைகளினால் பெரிதும் துன்பமடைவர். இவ்வாறு ரேகை அமைந்த ஒருவர் அனுபவித்த துன்பத்தை உதாரணமாகப் பார்ப்போமேயானால் ரேகையினால் ஏற்படும் சில தன்மைகளைப்பற்றியறியலாம்.

ஒரு தொழிலில் இருந்து விலகிய ஒருவர் வேறு தொழில் கிடைக்காத காரணத்தால் மன வேதனையடைந்தார், தனது வீட்டை விட்டு விலகி உறவினரொருவரின் வீட்டில் தங்கினார். இதனால் தாய் தந்தையருடனும் ஏனைய சகோதரிகளுடனும் வெறுப்புற்றார், உணவு உண்பதில்லை. உறக்கம் கொள்வதில்லை. மன அமைதியில்லாததால் தொழிலுக்காகப் பிரயாணம் செய்யவேண்டி ஏற்பட்டது. பிரயாணம் செய்தார்: பிரயாணத்தில் பணத்தையும் இழந்தார். தொழிலும் கிடைக்கவில்லை. இவ்வாறு சில காலத்தைக் கழித்தார்.

இயந்திரம்சம்பந்தமான அல்லது வாகனம் ஓட்டும் வேலைகளில் ஈடுபடுபவர்கள் இந்தக் காலத்தில் பெரிதும் அல்லற்பட்டது என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும். ஏதோ மனக்கிலேசமுற்று பதட்டமடைந்து செய்வதறியாது வழிப்போக்கர்களை காயத்துக்குள்ளாக்குகிறார்கள். சூழ்நிலைக்கேற்றவாறு அவருடைய இல்லத்திலும் வீண் பேச்சு வார்த்தை, சண்டை சச்சரவு நிகழ்கிறது. வெளித் தோற்றத்தில் 'பிஸ்டன்' சரியில்லையென்றுதான் தீர்ப்பு. ஆனால் அந்த வாகனத்தைச் செலுத்தியவரோ நாவிலும் தண்ணியின்றி பொலிஸ் நிலையத்தில் நின்று அவதியுற்றார்.

எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் சென்ற ஒருவர் பதில் எப்போ வரும், என்ன மாதிரி முடிவு இருக்கும் என்றெல்லாம் ஏக்கம் அடைவார். மனத்திலே ஏக்கம், துக்கம் இவைகள் குடியிருக்கும். தமாஸாகப் பொழுதைக் களிப்பதற்காகத் துவிச்சக்கர வண்டியிலே ஒரு சுற்றுலா. சினிமாக் கொட்டகையில் சில மணித்தியாலங்கள். நண்பனுக்கு ஏதோ சுகயீனம் ஏற்பட்டது, பார்ப்போம் என வைத்தியசாலையில் ஒரு பார்வை. இவைகள்தான் இப்படியான ஒரு காலத்தில் நிகழ்கின்றன.

படத்தில் தெரிவதுபோல் விதிரேகை உள்ளங் கையில் புத்திரேகையைத் தாண்டி இருதயரேகையையும் தாண்டிசனிமேட்டில் ஏறியிருந்தால் நல்லது. ஆனால் அத்தகைய ரேகை இலேசானதாகச் சனிமேட்டில் தோன்றினால் மனம் ஊசலாட்டமடையும். அதாவது ஒரு தொழிலில் இருப்பவர் வேறு தொழிலில் சேர்வதற்கு மனத்தைப் போட்டடித்துக்கொண்டு மனச்சஞ்சலம் அடைவர். வேலையில்லாதிருந்தவராயின் பயிற்சி பெறும் பொருட்டுச் செல்வார். பயிற்சி செய்பவராயின் வேலை கிடைக்குமா? என்ன வகையில் தொழிலில் முன்னேற்றமடையலாம் என்றெல்லாம் எண்ணுவார். இன்னும் சிலர் தங்களுடைய இருப்பிடத்தில் இருக்கும் நிம்மதியின்மை காரணமாக இடத்தை மாற்றிக்கொள்வர். இன்னும் சிலர் அழகான மனையை அமைத்து அங்கே வாழ்வதற்கான வழியைத் தேடுவர். ஆனால் விதிரேகை தடித்து மாறுங் காலத்தில் மிகுந்த பலனைக் கொடுக்கும். ஆரம்பகாலத்தில் மிகவும் கஷ்டமான பகுதியாக வாழ்க்கையமையும். ஆனால் சாதாரண தொழிலாளியாக இருந்தவர் பிற்காலத்தில் முதலாளியாக மாறுவதுண்டு, பதவி உயர்வு பெறுவதுண்டு. சாதாரணமானஒருதொழில் நிலையத்தில் தொழிலாளியாகவிருந்தவர் பங்காளனாக வருவதும் உண்டு அது மட்டுமல்ல அவர் நிர்வாகப் பொறுப்பாளியாகக் கூடக் கடமையாற்ற நேரிடுகின்றது. சனிமேட்டில் ஒருதனி ரேகை அமைந்திருந்தால் மிகவும் அதிஷ்டமானதாகும். அத்துடன் சூரியமேட்டில் ஒன்றும் அமைந்திருந்தால் மிகவும் கூடிய அளவு சிறந்த பலனைக் கொடுக்கும்.

(படத்தைப் பார்க்கவும்) விதிரேகையில் வெட்டு அல்லது துண்டு ஏற்பட்டிருக்கக் கூடாது. இவ்வாறு வெட்டு அல்லது துண்டு ஏற்பட்டதாக அமைந்திருந்தால் அவர்தொழிலில் நட்டமடைவார். அன்னார் தமது உத்தியோகத்திலிருந்து விலகுவார். எல்லாச் செல்வச் செழிப்பையும் இழப்பார். இதற்கு ஏற்றாற்போல அவருக்குப் பல சூழ்நிலை சந்தர்ப்பங்கள் ஏற்படும் இப்படிப் பட்ட ஒருவரை அவருடைய மேலதிகாரிகள் வெறுப்புடன் நடத்துவார்கள். தொழில் முறையான பணக் கொடுக்கல்வாங்கல்களில் நட்டம் ஏற்படும். இது தவறுதலாகவோ அல்லது தடுமாற்றமாகவோ நடந்ததொன்றாகும். இவ்வாறே விதிரேகையில் துண்டுபட்டு, தாரரேகை, புத்திரேகை, இருதய ரேகை, ஆயுள் ரேகை ஆகிய ரேகைகளும் வெட்டப்பட்டோ அல்லது துண்டுபட்டோவிருந்தால் அப்படியிருப்பவர் தொழிலையிழந்து, குடும்பத்தைப் பிரிந்து, அவமானத்துக்குட்பட்டு வைத்திய சிகிச்சையும் பெறுவர். நோயினால் துன்புறுவர்.

விதிரேகையில் தீவுக்குறி காணப்படின் அந்தக் காலத்தில் அவர் நோய்காரணமாகவோ, வேறு குற்றச்சாட்டின் காரணமாகவோ அல்லது தீயஒழுக்கம் காரணமாகவோ வேலையிலிருந்து விலக்கப்படுவர், தீவுக்குறி அழிந்தபின்பு அல்லது இணைந்தபின்புதான் மீண்டும் தொழிலில் சேர்க்கப்படுவர்: விதிரேகையில் ஒருபொழுதும் துண்டோ, வெட்டோ, தீவுக்குறியோ ஏற்படக்கூடாது. ஏற்பட்டால் இவற்றினால் அனுபவிக்கும் துன்பம் அளப்பரியது. ஆனால் இவற்றிற்கு ஆண்டவனின் அருள்தான் அனுகூலமாயிருக்கவேண்டும். மனிதர்களாகிய நாம் ஒருபொழுதும் தெய்வசக்தியை வென்றுவிட முடியாது.

— மு. குணரத்தினம் —

# அப்பிள் அனுபவம் - 2

திரு. மார்ட்டின்தான் அப்பிள் தோட்டச் சொந்தக்காரர். ஏழு, எட்டு வருடங்களுக்கு முன்னர் இத்தோட்டத்தை ஒரு தமிழரிடமிருந்துதான் மார்ட்டின் வாங்கியிருந்தார். நிலத்தைத் திருத்தித் தோட்டமாக்கி இந்த அப்பிள் மரங்களையெல்லாம் வைத்தவர் அந்தத் தமிழர்தான். அப்பொழுது அப்பிள் தேடுவாரற்றுக் கிடந்தகாலம்: அதிக பலன் கிடைக்காததால் அந்தத் தமிழர் தோட்டத்தை விற்றுவிட்டார். இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து அப்பிள் வரத்தில்லை. நம்பி வாங்கியவர் நல்ல நயத்தை அனுபவிக்கின்றார்.

இது நண்பர் குணநாயகம் கூறிய வரலாற்றின் இரதித்னச் சுருக்கம்:

கூப்பிட்ட குரலுக்கு யாருங் காதுகொடுப்பதாகத் தெரியவில்லை. நாங்களும் அசைய நாய்களும் அசைகின்றன. 'திரும்புவோமா' என்றார் நண்பரின் நண்பர். மூன்று பேரும் முடிவுகட்டித் திரும்பும்வேளை திரும்பிப் பார்த்தோம்.

தோட்டத்தின் உச்சியிலிருந்து ஒருவர் தோன்றுகின்றார். அவர் எமது குரலைக் கேட்டுத்தான் வருகின்றார் என்று எதிர்பார்த்து நிற்கின்றோம். வந்தவர் வலப் பக்கமாகத் திரும்பிச் சென்று சிறு குடிசை ஒன்றுள் நுழைந்துவிட்டார். நுழைந்தவர் நுழைந்தவர்தான். கூப்பிட்டுப்பார்த்தோம் கேட்க[illegible]. கைதட்டிப்பார்த்தோம் கவனிக்கவில்லை. ஆளுக்குக் கொஞ்சம் செவிடு என்பது தெளிவாகிவிட்டது. அத்துடன் நின்று புறப்படும்போது வாய்த்த 'முழிவியள்'மும் படால் என்பதும் வெளிச்சமாகிவிட்டது.

'பின்னை ஏன் நிற்பான்' என்றார் நண்பரின் நண்பர்.

'ஓ! ஓ, பேந்தேன் மினைக்கெடுவான். பொழுதும் படுகுதல்லோ; என்றேன் நான்.

தோட்டத்தின் வேலியோரமாகச் செல்லும் ஒற்றையடிப்பாதையால் திரும்பிக்கொண்டிருக்கின்றோம். தோட்டத்தை அடுத்துள்ள காணி ஒன்றில் ஒரு சிறு குடிசை. சிரிப்பொலி குடிசையின் கூரையைப் பிய்த்துக்கொண்டு வருகிறது. வெடித்து வெடித்துக் கேட்கிறது. விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். நிகரற்ற நிம்மதிச் சிரிப்பு. வாழ்க்கையின் மகிழ்ச்சியை-நிறைவை வடித்துக் காட்டுகின்றது. பட்டணத்து ஆட்களுக்கு இப்படிச் சிரிக்கவராது. ஒன்று இப்படிச் சிரித்துக் கொண்டிருகக நேரமில்லை. மற்றது இப்படி வாய்விட்டுச் சிரிப்பின் ஒடியல் முறிவதுபோல் ஒடிந்தாலும் ஒடிவார்கள்-வலுவில்லை

அந்தச் சிரிப்பொலியை வெல்லும் ஒலியில் தமிழா[illegible] அதாவது கூப்பிட்டோம். ஒரு பெண்மணி சடாரென்று உதயமானாள். வாய் நிறைந்த சிரிப்போடுதான் வருகிறாள். சிங்களப் பெண்.

'பக்கத்துத் தோட்டத் துரையைப் பார்க்கவேண்டும்'

'படலை அந்தப் பக்கத்திலே இருக்கு':

'அந்தப் பக்கத்திலே நின்று இதுவரை நேரமும் கூப்பிட்டுப் பார்த்தோம்'

'அப்ப ஒருவரும் இல்லைப் போலை இருக்கு'.

மனுசி விட்ட சிரிப்பைப் போய்த் தொடரவேண்டுமென்ற ஆசையில் வேண்டா வெறுப்பாய் மறுமொழி சொல்லுகுது என்பதை உணர்ந்து மாறி மாறி மன்றாடத் தொடங்கினோம்: நாம் தூரத்திலிருந்து வந்தவர்களென்றும் அந்தத் தோட்டத்துரையை எப்படியாவது பார்க்கவேண்டும் என்றும் கூறி, தோட்டத்துக் குடிசையில் இருப்பவரிடம் இந்தச் செய்தியை ஒருக்கால் தெரிவிக்கும்படி அந்தப் பெண்ணை வேண்டு வேண்டென்று வேண்டினோம்.

பெண்மணி பெருமனங் கொண்டாள்.

மெனிக்கா! மெனிக்கா! என்று கூப்பிட்டவாறே சிட்டாய்ப் பறக்கின்றாள், சூ! என்னமாதிரி நடக்குதுகளப்பா இந்தப் பெண்கள். அன்ன நடையன்று. இது அருவிநடை. மலையிலே ஏறவும் இறங்கவும் பயிற்சி வேண்டும். இமை வெட்டமுன் குடிசைக்கருகில் நிற்கின்றாளே.

நாங்கள் மீண்டும் அப்பிள் தோட்டப் படலையை முற்றுகையிடுகிறோம். இந்த நாய்களைப் பாருங்கள். எவ்வளவு புத்தியுள்ளவையென்று நடக்கின்ற அலுவல்களைக் கவனித்துவிட்டு அவை விலகிக் கொண்டன.

மெனிக்காவுடன் திரும்பி வருகின்றாள் அந்தப்பெண். நண்பர் சிங்களத்தில் தொடங்குகின்றார்,

'மிஸ்டர்மாட்டின் நிற்கின்றாரா?'

'இல்லை.'

'இப்போ வருவாரா?'

'அது சொல்ல முடியாது.'

'நாங்கள் அப்பிள் பழம் வாங்க வந்திருக்கிறோம்.'

'அப்பிள் சில்லறைக்கு இல்லையே.'

'தேவையாயின் வரும்படி முன்பு சொல்லியிருந்தார். முன்பு ஒருமுறை வந்து வாங்கியுமிருக்கிறேன்.'

'அப்படியா? எதற்கும் துரைதான் வரவேணும்.

'நாங்கள் நுவரெலியாவிலிருந்து வந்திருக்கிறோம்.'

... ... ... ...

'சரி அப்ப நாங்கள் வாறம்.'

'நல்லது!'

'மிஸ்டர் மாட்டினிடம் குணநாயகம் என்பவர் வந்து விசாரித்ததாகச் சொல்லவும்.'

மெனிக்கா குடுகுடென்று குடிசை நோக்கி நடக்கலானாள். நாமும் விறுவிறென்று திரும்பலானோம். இனி நிற்கக் கட்டாது. பொழுது படப் போகின்றது.

(14-ம் பக்கம் பார்க்க)

— கவிஞர் வி. கந்தவனம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பரதேசித் தம்பதிகள்!

— இ. என். ராசா —

நானும் நண்பன் விக்னராசாவும் கோவிலுக்குச் சென்றபோது மத்தியானப் பூசை முடிந்து கோவில் வெறிச் சோடிக்கிடந்தது. இருவரும் கோவிலை வலம் வந்துசுற்றிக்கும்பிட்டோம்.

தலைக்குமேல் கைகுவித்து முருகா! முருகா! என்றுமனம் உருகிக்கண்ணீர் சிந்தி வழி வழிபட்டான் விக்னு அவன் ஒரு பக்திப்பழம் முன்பெல்லாம் கயமைமயக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கட்டற்ற காளையாகத் திரிந்த காலத்தில் திருவிழாக் காலங்களிலன்றி மறுநாட்களில் கோவிலுக்கு வந்து வழிபட்டது இடையாது. இப்போதுவிக்னு மூலமும் அவனுக்குப்பழக்கமான பேராசிரியர் யேசுதாசர்மூலமும்என்னிடத்தே எவ்வளவோ நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

வழிபாடு முடிந்ததும், முதல்நாள் தவறிப்போயிருந்த என்பேனா தற்செயலாக கண்களுக்குத்தென்படாதா என்னும் எண்ணத்தில் அதனைத்தேட ஆரம்பித்தேன். விக்னுவும் சேர்ந்து தேடிவிட்டு ''இனி நம் தேடுதல் பிரயோசனபபடாது யார் கையிலாவது அது கிடைத்திருக்கும்போகலாம் வா'' என்ருன்.

இருவரும் புறப்பட்டோம். 'தம்பி' என்ற குரல் பின்னால்கேட்டபோது திடுக்குற்றவர்களாய்த் திரும்பிப் பார்த்துநின்ரேம்.

கந்தல்துணியும் தொங்கிய தாடியுமாக ஒருவன் கோயிலின் தூண் ஓரமாக உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவன் உடை சுத்தமாயிருந்தாலும் ஆளின்தோற்றம் போதிய நாகரிக வளர்ச்சியற்ற காட்டுமிராண்டிஆசாமியாகப் பார்ப்பதற்கு அருவருப்பாகவிருந்தது.

இதற்குமுன்னரும்நாங்கள் கோவிலுக்கு வரும்போதெல்லாம் அந்தப் பரதேசியைக் கண்டிருக்கிரேம், இதே கோலத்தில்.

''யாரோ பைத்தியக்காரன். ஆளைப் பார்க்கவே தெரியவில்லையா? வா, வீட்டிற்குப் போகலாம்'' என்றேன்.

''யாராயிருந்தாலும், என்னவென்று கேட்டு விட்டுத்தான் போவமே'' என்ருன் விக்னு. அவ்வாறு கூறியவன் திரும்பி நடந்தான். நானோ அசையாமல் நின்ற இடத்திலேயே நின்றேன்.

''ஐயா ஐயா!'' என்று பல்வரிசை முழுக்கவும்வெளியே தெரிய ஒரு பிச்சைக்காரன் என் முன்னால் வந்து இரந்து நின்ருன்.

''போ போ உனக்கிருக்கும் உடல்கட்டுக்கு உழைத்துச் சாப்பிடலாமே'' என்று கடிந்து கொண்டதும் அவன் அப்பாலே நகர்ந்தான்,

விக்னு என்னைக்கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''இவனுற்பெரும் தொல்லையாய்ப் போச்சே! யார் கொஞ்சம் அன்பாகப்பேசினுலும அவர்களுடன் பசை மாதிரி ஒட்டிக்கொண்டு விடுகிருன். போதாக்குறைக்கு என்னையும் கூப்பிடுகிருன்!'' என்று எனக்குள்ளாக எண்ணிமனப்புழுக்கமடைந்தவனாய் விக்னுவை நோக்கி நகர்ந்தேன்.

''ஐயா!'' - இதுஒருபெண் குரல. இப்பொழுது ஒரு பிச்சைக்காரி என்முன் நின்ருள்,

''ஒன்றுமில்லை போ!'' என்று அரட்டிவிட்டு வீதியைப் பார்த்தேன். வீதியில் சனநடமாட்டம். ஆட்கள் போய்வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள்எங்களைத் திரும்பிப்பார்த்துக் கொண்டே போனூர்கள். மளமளவென்று ஐம்பது சதம் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்தேன். காசைப்பெற்றதும் தலைசாய்த்து வணங்கிவிட்டுப் போனுள் அவள். இன்னமும் அங்கு நின்ருல் மேலும் எத்தனைபேர் வருவார்களோ என்ற பயம் எனக்கு.

''ஏன் இன்னும் திரும்புவதற்கு எண்ணம்இல்லையா?'' என்றேன், விக்னுவிடம் மன எரிச்சலோடு.

-அந்தப் பரதேசி. ''கோபப்படாதீர்கள் தம்பி, கொஞ்ச நேரத்திற்கு முன்னால் எதையோ தேடினீர்களே, எதைத்தேடினீர்கள்?'' என்ருன்.

''நேற்றுக் கோவிலுக்கு வந்த சமயம் இவன் தன் பேனாவை இங்கே தவறவிட்டுவிட்டான்'' என்று விக்னு கூறினுன்.

''அந்தப்பேனுதானு இது பாருங்கள்'' -ஒரு பேனாவை மடியிலிருந்து எடுத்து என்னிடம்கொடுத்தான் அவன்.

அவன்மேல் எனக்குச் சந்தேகமாயிருந்தது. ஒருவேளை...? ஒரு நொடிக்குள் என்னென்னவோ எண்ணினேன், எவ்வளவோ எண்ணிவிட்டேன்.

''இது என்னுடைய பேனுதான், இது எப்படி உனக்குக் கிடைத்தது?'' -பேனுவைக் கையில் வாங்கிக் கொண்டே கேட்டேன்.

''கோவிலைச்சுற்றி குப்பை பெருக்கும்போது நிலத்திற்கிடந்து கண்டெடுத்துப் பத்திரமாக வைத்திருந்தேன்'' என்ருன்.

''சரிபோகலாமே!'' என்று விக்னுவை நான்துரிதப்படுத்தினேன்.

கையில் என்ன பத்திரிகையா? தம்பி கொஞ்சம் தருகிறீர்களா?'' என்ருன் பரதேசி. எனக்கு ஏளனமானசிரிப்புத்தான் வந்தது. இவன் கெட்டகேட்டுக்குப் பத்திரிகை வேறையா...

''இது யாருக்கும் கொடுப்பதற்காக வாங்கவில்லை. நான் படிப்பதற்சாக வாங்கியது; தவிரவும் நீ நினைக்கிற மாதிரிசினிமாப்பத்திரிகையுமல்ல, தமிழ்ப்பத்திரிகையுமல்ல'' என்றேன்.

''அப்படி நானும் நினைத்துக் கேட்கவில்லைத் தம்பி'' என்ற அவன் உடனே யாராவது பெண்கள் கேட்டால் ஒருவேளை கொடுப்பீர்கள்-என்ருன், வாய்க்குள் ஒருசிரிப்புடன். பிறகும் அவனுகவே பேசினுன். ''எப்போதும் பெண்களுக்கு ஆண்களைக் கவர்ந்து இழுத்துக் கொள்ளும் சக்தியுண்டு. இது இயற்கையானது. இல்லாது போனுல் உயிர் நண்பன் ஒருவனுக்கு ஒருவாரம் வைத்துச் சாப்பாடுகொடுக்கச் சலிப்படையும் ஒருவன் ஒருபெண்ணுக்கு ஆயுள் முழுவதும் வைத்துச் சாப்பாடுகொடுப்பானு? வாழ்வே ஒரு மாயை'' என்ருன்.

எனக்கோ கோபம் கோபமாக வந்தது. என் கையிலிருந்தபத்திரிகைகளைப் பறித்து அவனிடம் கொடுத்த விக்னு அவன் பக்கத்தில்உட்கார்ந்துகொண்டு என்னைப் பார்த்தான். தொலைந்திருந்த பேனுவையே எடுத்துக்கொடுத்த ஒருவரை இப்படி நன்றியுணர்ச்சியில்லாமல் அவமதிக்கலாமா, என்று என்னை அப்பொழுதுகேட்பதுபோலிருந்தது அவன் பார்வை. அவன் கண்கள் பத்திரிகையின் தலைப்புகளைநோக்கவாய் பேசிற்று. 'ஆண் உழைத்துச் சாப்பிடக் கூடியவன். பெண்ணால் அப்படி முடியுமா? தனக்கு உதவி கிடைக்காதபோது தான் ஒரு பெண் தன் கற்பையே விற்கத் துணிகிருள். பெண் தவறு செய்வதற்கு அவள் வறுமையும் ஒரு காரணமாகிறது.

யார் யாரிடத்தே இரக்கம் பாவம் பார்க்கிறது? நாம் என்ன கடவுளா? அவனவன் செய்த நன்மை தீமையின் பலனை அவனவனே அனுபவிக்கிருன். ஒருவனைப் பாரீத்துப் பாவம் என்று சொன்னுலே நமக்குப் பாவம் கிட்டுகிறது. ஒருவனுக்கு நாம் பாவம் பார்க்கின்ற போது அங்கே ஓராயிரம் பிச்சைக்காரர்கள் உருவாகிருர்கள். அத்தனைபேரையும் சோம்பேறிகளாக்கி நாட்டிற்கு நஷ்டத்தையே உண்டாக்கிக் கொண்டிருக்கிரேம்...

ஒருவன் ஓடினுல் ஏன் என்று யாரும் கேட்கமாட்டார்கள்: பத்துப்பேர் சேர்ந்து ஓடினுல் ஏன் என்று கேட்காமலே கண்ணைமூடிக் கொண்டு எல்லோரும் சேர்ந்து ஓடுவார்கள். இன்றைய உலகம் இப்படி. பெரியவர்கள் என்று போற்றப்படுபவர்களில் கொடுத்து உயர்ந்தவர்கள் எத்தனை பேர்? குணத்தாலும் கொள்கையாலும் உயர்ந்தார்கள், அந்தக் காலத்தில் சோதிட ஆராய்ச்சி முன்னணியில் இருந்தது. இறைபக்தி ஒழுக்கத்தோடு இருந்தது' இந்தக்காலம் அப்படியில்லை. வெறும் மேல் மினுக்கைக் கண்டு ஏமாறுகிருர்கள். வெற்றிலை போடுகிறவர்களைவிட சிகரெட் புகைப்பவர்கள் அநேகம் பேர். பத்திரிகைப் புதினம்கூட இதைத்தானே சொல்கிறது. சற்றுநேரத்துக்கு முன்னுல் ஒரு பிச்சைக்காரிக்கு காசு கொடுத்தீர்களே அவள் யார் தெரியுமா? அவள் என் மனைவி, தம்பி என் மனைவி' தன் பேச்சை சற்றே நிறுத்தினுர், பரதேசி யார். முதலில் பிச்சைக்காரனுக வேலையற்ற தடியனுக. தாடிவாலாவாக ஏகனுய் அநேகனுய் நம்முன் நின்ற அவன் தான் இத்தருணம் பரதேசியாராக உயர் மதிப்புப் பெற்று தோன்றுகின்ருன்.

ஒரே சமயத்தில் எனக்கும் விக்னுவுக்கும் ஆச்சரியம் மேலிட்டு விட்டது.

பரதேசியாரின் கண்கள் கலங்கியிருந்தன. கண்ணீரைக் கைகளாற் துடைத்துக் கொண்டே தொடர்ந்து கூறலானுர். 'இப்போது அவளுக்காக நான் கண்கலங்க வேண்டிய அவசியமும் இல்லை; நான் கலங்கவுமில்லை; கலையுள்ளம் உணர்ச்சிவசப்படுவது அதனுல் என்னையறியாமலே என் கண்கள் கலங்கி விட்டன. நான் சொல்வதெல்லாம் உங்களுக்கு விசித்திரமாகவும் வேதனையாகவும் இருக்கலாம். நனைந்த உடலோடு நான் தைரியமாயிருப்பது மற்றவர்களுக்கு வேதனையாக இருந்தாலும் நனைந்து தோய்ந்துபோன எனக்குக் குளிரவேயில்லை. சைக்கிள் விடப் பழகாதவன் சைக்கிள் சவாரி போகிறவனைப் பார்த்து ஆச்சரியப்படுவது இயற்கைதான். ஆனுல் பழகியவனுக்கோ அது இலகுவான காரியம்.

(12-ம் பக்கம் பார்க்க)

# புன்செய் நெற்கமங்களில் புரட்சி வேண்டும்!

விவசாயப் புலம்

'கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை, கர்ணனுக்கு மிஞ்சின கொடையுமில்லை' என்ற பழமொழியை இக் கார்த்திகைமாதம் நாலாம், ஐந்தாம் திகதிகளில் பெய்த கடுமையான அடைமழை மெய்ப்பித்துவிட்டது. இப்பதான் நெல்வயல்களில் தண்ணீர் நிரம்பிநிற்கிறது. ஐப்பசி பதினைந்தில் வெள்ளம் போடுமென்பது பரம்பரையான நம்பிக்கை. இந்த நம்பிக்கை, இவ்வருடம் பொய்த்துவிட்டது. ஐப்பசி மாதத்தில் ஆனமழையே பெய்யவில்லை. முளைத்த பயிர்கள் காற்றிலும் வெயிலிலும் வாடிவதங்கிய பின்னரே இந்த அடைமழை பெய்திருக்கிறது.

ஏற்கனவே இந்த மழை பெய்திருந்தால்பயிர்களுக்கு நல்ல வாசியாயிருக்கும். அவை பால்யத்தின் வேகமும் முறுக்கும் இழந்து ஊக்கம் குறைந்த பின்னரே தாராளமான மழைபெய்தது. இந்தமழையினுல பயிர்கள் முற்ருகக்கருகி அழிந்து போகாமல் நிற்கின்றனவேயன்றி அவற்றின் மூச்சு கெட்டுப் போய்விட்டதென்றே கூறவேண்டும்.

ஐப்பசி மழையில்லாமல் பயிர்கள் செழிப்பாக வளராதகாரணத்தினுல்பலகமக்காரர்கள் நாற்றுப்பயிர் வாங்கி நடவேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டது. நெருக்கமாக வீசி விதைத்தவர்களிடம் நாற்றுக்கள் கிடைக்கத்தான் செய்தது ஆனுல் நாற்றைப் பார்த்து பயிரின் தன்மையை அறிந்துகொள்வது கடினம். பலருக்கு மழையின்மையால் வளர்ச்சிகுன்றிப்போன நொய்தலான பயிர்களேகிடைத்திருக்கும். இதையெல்லாம் அவர்கள் கவனிக்க மாட்டார்கள். ஏதோ நாற்றை வாங்கி வயல்களிலிருந்த இடைவெளிகளை மறைத்து விட்டோமென்று அவர்களுக்கு ஒரு மனதிருப்தி. பயிர்கள் நல்ல மகசூல் கொடுக்குமோ என்பது வேறு விவகாரம்.

நாற்றுப்பயிர் எல்லா இடங்களிலும் நூறுபிடி இருபது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எவரும் கூடவோ குறையவோவிற்கமாட்டார்கள். கமக்காரர்கள் கூட்டம் கூடி யோசிக்காமல், பிரசித்தங்கள் போடாமல், நாற்றுப் பயிரின் விலை எப்படியோ ஊரெங்கும் ஒரே சமமாக நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. இது விஷயத்தில் கொள்ளைலாபம் அடிப்பதற்கும் பொதுவாக கமக்காரர் விரும்புவதில்லை. பயிர் நிறைய உள்ளவர்கள் அந்தரப்பட்டு வருகிறவர்களிடம் முப்பது நாற்பது என்றும் வாங்கலாம். ஆனுல் இந்த ஒரு காரியத்தில் மட்டும் அவர்கள் தயாள சிந்தையுடன் நடந்து கொள்வார்கள். அடுத்த வருடம் எனக்கும் இக்கதி நேரலாம் என்ற எண்ணம் ஒருபுறமும் மற்றக் கமக்காரனும் பயிர் செய்தால் தான் ஊரிலே பொதுவாக நெல்லுத் தட்டுப்பாடு ஏற்படாதென்ற ஒருவித சமதர்ம நோக்கு ஒருபுறமும் அவர்களைக் கொள்ளைலாபம் அடிக்காதவாறு தடுத்து விடுகின்றன.

நாற்று நடுகைக் கூலி நாளொன்றுக்கு ஆறுரூபாய் மற்றும் நாட்கூலி வேலைகளுக்கும் ஆறுரூபாய் தான், ஆனுல் மற்ற வேலை செய்பவர்கள் பொழுது படும்வரை வேலை செய்ய வேண்டும். நாற்று நடுபவர்கள் காலை எட்டரை, ஒன்பது மணி தொடக்கம் பிற்பகல் ஒன்றரை இரண்டு மணி வரை வேலை செய்தால் போதுமானது. குனிந்த குனிவில் நின்றுகொண்டே ஒரு பகல் முழுவதும் நாற்று நடுவது மிகவும் கடினமான வேலை என்று இதிலும் ஒரு மனிதாபிமானம்.

முன் மழை பெய்யாத காரணத்தால் புல் பூண்டு முதலிய களைகள் வளருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இனிமேல் இந்த மழையுடன் களைகளும் வளரத் தொடங்கும். வயல்களில் போதிய வெள்ளம் நிற்குமாகில் களைகள் அடங்கிவிடும். தண்ணீர் போதாவிட்டால் புல்லும் பயிரோடுகூட நீயோநானே என்று எழுந்துவிடும். புல்லுப் பிடுங்குவதற்கு வேறு கூலி கொடுக்க வேண்டும். கிருமிநாசினிகள் வாங்கியடிக்க வேறு பணம் வேண்டும். உரம் வாங்கிப் போடுவதற்கு இன்னும் கொஞ்சம் பணம் வேண்டும்; இப்படிய தொட்டுத் தொட்டு அநேகம் செலவுகள் வந்து கொண்டேயிருக்கும்.

இதற்கஞ்சிச் சிலர் வயல்களில் செய்யவேண்டியவற்றைச் செய்யாது வாளாவிருந்து விடுகிருர்கள். இவ்வளவும் செய்தும் என்ன பயனைக் கண்டோம் என்று ஒருவித விரக்தி குடிகொண்டு விடுகிறது. ஏதோ நாமும் கமம் செய்கிருேம் என்ற போலித் திருப்திக்காகவே பல யாழ்ப்பாணத்தவர் கமம் செய்கிருர்கள். செலவுக்கேற்ற பயன் கிடைக்காவிட்டால்.....?

புன்செய் நிலங்களில் நெற்பயிர் செய்வதில் ஒரு புரட்சிகரமான மாறுதல் உண்டாக வேண்டும். அப்பொழுதுதான் செலவுக்கேற்ற வருவாய் கிடைக்கும். கமம் செய்வதில் ஆர்வமும் பிறக்கும்.

—கலப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவே!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 8. ஒளிஏறும் வாழ்வு

ஐந்து பத்து ரூபா வாக
அழிந்து வந்து கட னெலாம்
சொந்த மாகும் வண்ணம் வீடு
தொலைந்த தீற்றில் ஈடுமே!

சாவ டைந்து கிடந்த ஆன்மா
தாவி ஓங்கித் தழைத்திட
நோவ டைந்து வேட்கை யாவும்
நுனிம முங்கி வந்தன.

பொன்ம றப்பு, மண்ம றப்பு
பூவை யர்கள் மறப்பு போல்
தன்ம றப்பில் நச்சி ஈசற்
சார்ந்தவ் வண்ண மாயினுன்!

பொடியின் மேனிச் சுடலை யாடி
பொற்ச தங்கை ஒலி யிட
அடியின் பின்னர் அடியெ டுத்தங்
காடும் நச்சி கனவிலே!

வாழ்வில் மனதில் தூய்மை பொங்க
வாட்டுந் துயர்கள் குறைந்தன!
தாழ்வில் வீழ்த்துஞ் சம்ப வங்கள்
தளர்ந்து தேய்ந்து மறைந்தன!

கெடுக்கும் மழைகள் குறைந்தவ் வூரில்
கேட்ட போது வந்தன!
இடித்து மின்னி மேகங் கறுத்து
எடுக்கும் மழைகள் பொழிந்தன!

வாவி யாவும் நீர்நி ரம்பி
மலர்கள் மண்டிக் கிடந்தன!
ஓவி யஞ்செய் காவி யஞ்செய்
உணர்வு மூரில் மலிந்தது!

நச்சி தெய்வ முகத்தைக் கண்டு
நஞ்சு நெஞ்சுந் திருந்தின!
பச்சை வெள்ளைப் பால்ம ணத்துப்
பால கர்பின் திரிந்தனர்!

துன்ப இரும்புப் பிடியில் பட்டு
சோரும் இதயங் கொண்டவர்
இன்ப நச்சி பார்வை மூழ்கி
எழுச்சி நண்ணி நிமிர்ந்தனர்!

நச்சி கைகள் பட்டு நஞ்சும்
நறிய அமிழ்த மாயின!
பச்சை மண்ணும் ஒளிது லங்கும்
பசிய செம்பொன் னுயின!

தூய கால்கள் பட்டு நரகும்
சொர்க்க மாக மாறின!
பேயு லாவும் பாலை கூட
பெருகு தன்மை மருவின!

மைந்த னென்று முன்பி ரண்டு
மனங்கள் போற்ற வந்தவன்
அந்த வூரே பிள்ளை போல
அன்பு கொள்ள நின்றனன்!

அடிக்க அன்று நீண்ட கைகள்
அணைக்க நீளும் இன்றெலாம்!
துடிக்க அன்று வைக்க நின்றோர்
தொழுது நிற்பர் இன்றெலாம்!

வளர்ந்து வந்த தனது புகழும்
வணங்கு வோருங் கண்டுமே
கிளர்ந்து துள்ளி மகிழ்ந்திடாமல்
கிட்டச் சென்றான் இறையிடம்!

காட்டுப் பூனை காட்டுக் கோழி
காட்ட ணில்கள் போலவே
வீட்டுப் பூனை வீட்டுக் கோழி
வீட்ட ணில்கள் இருத்தல் போல

வீட்டு மிருக மாக முன்பு
விளங்கி நின்றோன் இன்றெல்லாம்
வீட்டுத் துறவி யாகி ஆசை
வென்று மேரு வென்றனன்!

'எனது தம்பி! எனது 'மச்சான்'
எனது சீடன்' இவனெனத்
'தனது' 'தான்'இ லாத நச்சி
தழுவப் பட்டான் ஊரினுல்!

படித்து முடித்துப் பத்தாம் வகுப்புப்
பதறி டாமல் தேறினுன்!
எடுத்துக் கொள்ள மரும கனுய்
எண்ணம் பலருள் எழுந்தது!

தரகர் மார்கள் அவனைத் 'தம்பி!
தம்பி!' என்று சுற்றினர்
தருக சாத கத்தை என்று
தந்தை தாயைக் கெஞ்சினர்!

பின்னை மனத்தை அறிந்து கொள்ளப்
பேச்சை எடுத்த போது தான்
'உள்ள வரையும் இந்தப் பேச்சை
ஒழிக!' என்றான் நச்சியோ!

'பிள்ளைப் பித்தில் பட்ட பின்னும்
பேரப் பிள்ளை பாசமோ'—
எள்ளிச் சிரித்த நச்சி 'எனையும்
இன்னல் படுத்தேல்!' என்றனன்!

பிள்ளை சொன்ன நற்க ருத்தில்
பெற்ற நெஞ்சம் திருந்திட
பள்ள மென்ற இறையை நாடிப்
பாய்ந்து செல்லும் வெள்ளமாய்!

தீன்கு றைத்துத் தின்று தேகத்
திமிர்கு றைத்து வருவதால்
ஊன் வெறிக்கும் நெஞ்சை யாட்டும்
உரங் குறைந்து நின்றது!

(வளரும்)

மன வியாதி — 5

# மன வியாதியை மாற்றும் மாத்திரை என்ன?

கூ. க. க. என்ற கவலை, கரைச்சல், கஷ்டம் ஆகியவற்ருல் தாக்குண்டு மனவியாதிக் குட்பட்டவர்களை எங்கும் சந்திக்கலாம். மற்றும் நோயாளிகளைப்போல அவர்கள் முக்கிமுனகிக் கொண்டு திரியமாட்டார்கள். சாதாரணமனிதர்களைப் போலவே அவர்கள் காணப்பட்டபோதிலும், மூன்று காணுக்களும் அவர்களுடைய உள்ளத்தையும் உடலையும் குடைந்து சதா உள்வேதனையைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

வியாதி முற்றியவர்கள் ஆஸ்பத்திரிகளில் கிடப்பார்கள். பலர்வீடுகளில் கிடந்து வேலையொன்றும் செய்ய முடியாமல் வேதனைப்படுவார்கள். ஆஸ்பத்திரிகளில் மாதக்கணக்காய் கிடந்தாலும் நோய் தீராதென்று டாக்டருக்குத்தெரிந்தாலும் அதை அவர் நோயாளிக்கு சொல்லமாட்டார். சொன்னுலும் நோயாளி நம்பமாட்டார். மருந்து நோயாளியிடம் இருக்கும்போது டாக்டர் என்ன செய்யமுடியும்?

எனக்குத் தெரிந்த ஒருவர் இப்படி பல காலமாய் ஆஸ்பத்திரி வார்ட்டில் கிடந்தார். அவருக்கு நெஞ்சுக்குத்து. டாக்டர் சிலகாலம் மருந்துகளைக் கொடுத்துப் பார்த்துவிட்டு, 'உங்களுடைய உடம்பில் ஒரு வருத்தமுமில்லை. நீங்கள் வீணுக மனசைஅலட்டிக்கொள்ளுகிறீர்கள்'' என்ருர். நோயாளி அதைக் காதில்வாங்கிக் கொள்ளவில்லை. டாக்டர் வார்ட்டை விட்டுப் போனதும் தமது மகளின் விவாகத்தைப் பற்றியும், தமதுநூறுஏக்கர்காணியைப் பற்றியும், தமது கடைசிப் பையனின் படிப்பைப்பற்றியும் பலருக்கு கடிதங்கள் எழுதித்தள்ளுவார். அடுத்த நாள் அவருக்கு மறுபடியும் நெஞ்சுக்குத்து வந்துவிடும்!

மன வியாதியைக் குணப்படுத்தும் மருந்தும் மார்க்கமும் தங்கள் சொந்தக் கையிலேயே உள்ளதென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். பூவுலகவாழ்க்கையிலுள்ள இன்பதுன்பங்களையும், மேடுபள்ளங்களையும், லாப நட்டங்களையும் நன்குணர்ந்து அவற்றிற்கேற்ப வாழ்வதற்கு முயல வேண்டும். பிறமனிதரோடு பழகப்பயில வேண்டும். சுருங்கச் சொன்னுல் வாழ்க்கைக்கலையை நன்ருகப்பயின்றிருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எந்த விதமான கஷ்டம் நேரினும் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் மற்றவர்களோடு கலகலப்பாக புழங்கவேண்டும். சிலருக்கு கடவுள் இயற்கையாகவே இந்த வரப்பிரசாதத்தை வழங்கியுள்ளார். வேறு சிலருக்கு கொடுக்கப்படவில்லை.

தலைக்குமேலே வெள்ளம் வந்துவிட்டதுபோல சிலர் க. க. கவில் மூழ்கியிருக்கக்கூடும். 'எங்களைப்பிடித்து எப்பொழுதும் கல கலகலப்பாயிரு என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தனம்; நாங்கள் எப்படி கலகலப்பாயிருக்கமுடியும்' என்று இவர்கள் கேட்பார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு வழிகாட்டியாக சில யோசனைகளை தெரிவிக்கலாம்.

முதலாவது, வாழ்க்கையிலே இன்று என்ன சம்பவிக்குமோ, எந்தக் கடன்காரன் முன்னே எதிர்ப்படப் போகிருனே என்றுசிந்தித்து மனதைஅலட்டிக்கொண்டேயிருக்கவேண்டாம். அவன் வந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம். அவன் வந்து போனபின்பு அட, இதற்குத்தானு இவ்வளவு கவலைப் பட்டோம்' என்று நினைக்கத் தோன்றும். வாழ்க்கைப் பாதையில் எங்கே பொறிக் கிடங்கு வருமோ என்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கவேண்டாம்.

இரண்டாவது. நீங்கள் செய்யும்வேலை எதுவாயிருந்தாலும் அதில்உண்மையான பற்றுவைக்கப் பழகிக்கொள்ளுங்கள். இன்றைக்கு எப்படியாவது வேலைக்குப் போய்த்தொலையவேண்டுமே என்றுநினைப்பவனுக்கு மனதில் ஒருபோதும் நிம்மதியிராது.

மூன்ருவது, ஏதாவதொரு பொழுதுபோக்கு அவசியமாக வைத்துக்கொள்ளுங்கள். வீட்டுத் தோட்டம்; புத்தகம் வாசித்தல், ஊர்த்தொண்டு ஏதாவதுபொழுதுபோக்கில் லயிப்பவனுக்கு வேறு சிந்தனைக்கும் கவலைக்கும் நேரமிராது.

நான்காவது, பிறமனிதரோடு பழகக் கற்றுக்கொள்ளுங்கள். 'அவற்றை பேச்சு எனக்குப்பிடிக்கவில்லை, அவற்றை சிரிப்பு எனக்குப் பிடிக்கவில்லை, அவர் எந்த நேரமும் பல்லைக் குத்திக் கொளளுகிருர்' என்று சினத்து உள்ளே குமுறிக் கொள்ளாதீர்கள். உலகத்திலே எத்தனையோ விசித்திரமான பேர்வழிகள் இருக்கிருர்கள். அவர்களோடு பழகத்தானே வேண்டும். இல்லாவிட்டால் நாம் எப்படி வாழ்வது?

ஐந்தாவது, இதற்குமேல் கிடைப்பது கடினம் என்று உணர்ந்தால்கிடைத்ததோடு திருப்தியடையப்பழகிக்கொள்ளவேண்டும்: வாழ்க்கை ஒரு வண்டிச்சக்கரத்தை ஒத்தது. வாழ்வும் தாழ்வும் சகஜம். தன்னுல் இயலுமானவரை தெண்டித்துவிட்டு, எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டால் கிடைத்தது அவ்வளவும் போதும் என்று ஆறுதலடையவேண்டும்.

ஆருவது, பிறரோடு பேசும்போது அழகான, மகிழ்ச்சியான வார்த்தைகளைப் பேசவேண்டும். உங்கள் மகிழ்ச்சி மற்றவரிலும் தோற்றும். இருவரும் கவலைகளை மறந்து இன்பமாக உரையாடலாம். காலையில் தெருவில் ஒருவரைச் சந்திக்கும்போது 'ஏனப்பா, நல்லாய் மெலிந்துபோனுய்?' என்று ஒருபோதும் கேட்கப்படாது. இதனுல் இரண்டு பேருக்கும் கவலையேயொழிய மகிழ்ச்சி ஏற்படாது. இதற்காக அவர் உண்மையில் மெலிந்துபோயிருந்தால் 'ஏனப்பா, நன்ருய் கொழுத்துப்போனுய்?' என்று கேட்டால், கிண்டல் செய்கிறீர்கள் என்று நினைத்துக் கோபம் கொள்வார்; கொழுப்பையும் மெலிவையும் விட்டுவிட்டு வேறேதாவது நல்ல காரியமாகச் சொல்லலாம். 'இன்றைக்கு கட்டாயம் மழை வரும்' என்று கூறுவது சரி. 'இனி எங்கே மழை வரப்போகிறது' என்பது பிழை

மேலே சொன்ன சுலபமான முறைகளை ஒவ்வொருவரும் பின்பற்றி வந்தால் மனவியாதிகள் எவ்வளவோ குறைந்துவிடும்.

— சுநாதன் —

## காற்றிலே வந்த அதிர்ஷ்டம்

நியூயார்க் நகரில் பல வருடங்களுக்கு முன்பு ஒரு விநோத சம்பவம் நிகழ்ந்தது. பிராங்க் வாஸ்டர் ஸூப்ஸ் என்பவர் மிகவும் கவலையுடன் தனது வீட்டில் உட்கார்ந்திருந்தார். சில மணிநேரத்தில் ஒரு கம்பெனிக்கு அவர் 10 டொலர் செலுத்த வேண்டும். கையிலே காசு இல்லை. கடன் கொடுப்பவர் யாருமில்லை. என்ன செய்வதென்று புரியாமல் அவர் கையைப் பிசைந்து கொண்டிருந்தார். அப்போது திடீரென்று வீசிய காற்று அவருடைய மடிமீது ஒரு காகிதத் துண்டைக் கொண்டுவந்து தள்ளியது. அந்தக் காகிதத்தை அவர் அலட்சியமாகவும் வெறுப்புடனும் எடுத்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம். அவருக்குத் தேவைப்பட்ட 10 டொலர் நோட்டுத்தான் அது. ஆகவே அவருக்கு அதிர்ஷ்டம்காற்றிலே வந்தது. அவருடைய கவலை தீர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருளினுல் நமக்குக் கிடைத்தவர் நாவலர் பெருமான்

**கடவுளை நம்புகிறவர்கள் முழுமூடர்கள் என்று கூறுகின்ற நாஸ்திகர் காலம். இப்படிப்பட்டகாலத்தில், நாவலருக்குக் குருபூசையா?' என்ற குரல் எழுமானால் அதில் நூதனமே யில்லை. அக்குரலுக்கு எதிரொலியாக,**

**—ஆம்: நாவலருக்குக் குருபூசை,'**



நாயனார் நாற்குரவர்
நாவலர்தென் ஞாலமிசை
மேயினார் ஈசனருண் மேல்'

என்று பாடுகின்றார். சி. வை. தாமோதரம் பிள்ளை. நாயன்மார் சமயகுரவர் சந்தான குரவர் போலவே, திருவருளினாலே நமக்குக் கிடைத்தவர் நாவலர் பெருமான் என்பது சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கருத்து.

'நிழலின் அருமை வெயிலிலே தெரியும்' என்பது பழமொழி.

அப்பர் சுவாமிகள் சமண சமயத்தில் அகப்பட்டு ஒருவாறு தப்பிப்பிழைத்து விம்மல் பொருமலுடன் பழைய படி சைவத்துக்கு வந்தவர்.

தாமோதரம்பிள்ளை கிறிஸ்தவராய் மாறி. ஒருவாறு தப்பிப்பிழைத்து, நாவலர் என்ற தெப்பத்தை இறுகப் பற்றிக்கொண்டு பழைய படி சைவத்துறையை வந்து சேர்ந்தவர்.

நாவலர் பெருமான் பிறவாதிருந்தால் தாமோதரம் பிள்ளை கொழுத்த கின்ஸ் பரிப்பாதிரியாராயிருந்திருப்பார். தொல்காப்பியம் பதித்துத் தமிழ்த்தாமோதரம்பிள்ளையாதல் நினைக்க முடியாததாகும்?

'நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்' என்று பிள்ளை பாடியபிரசித்திபாடல், நாவலர் பெருமானின் அருமையறிந்து உள்ளம் நெகிழ்ந்து உருகிய உருக்கமேயாம்.

0 0 0

நாவலர் பெருமான் தம்மை நாயனார் வரிசையில் -குரவர்கள் வரிசையில்- வைத்துப்பாடியதற்குத் தப்பாது கோபம்கொள்ளலாம்: ஆனால் பிள்ளையின் நன்றிக் கடனை ஏற்காமலிருத்தல் இயலாமலேயிருக்கும்.

0 0 0

இக்காலம் 'கடவுளை நம்புகிறவர்கள் முழுமூடர்கள்' என்று கூறுகின்ற நாஸ்திக காலம். இப்படிப்பட்ட காலத்தில்,

நாவலருக்குக்
குருபூசையா?

**- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை -**

என்றகுரல் எழுமானால் அதில் நூதனமேயில்லை. அக்குரலுக்கு எதிரொலியாக

ஆம்.

நாவலருக்குக் குருபூசை. அது நாம் தொடங்கிய பூசையன்று, நாவலர் காலத்திலேயே தொடங்கியபூசை: பீற்றர் பேர்சிவல் என்கின்ற வெள்ளைக் குருக்கள் நடத்தியபூசை' அந்தப் பூசையை நாம் தொடர்ந்து நடத்துகின்றோம் என்போமாக!

0 0 0

பதினன்குவருடம் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரோடு ஒன்றியிருந்த நாவலர் 1848-ம் ஆண்டில் அவரைப் பிரிந்தார். பாதிரியார் பிரிவாற்ருதவர் போன்று, ஒரு சில மாதங்களின்பின், தமது பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகம் செய்துவிட்டுச் சென்னைக்குச் சென்று அங்கே ஒரு கல்லூரியில்பண்டிதராயமர்ந்து, தினவர்த்தமானி என்கின்ற தமிழ்ப் பத்திரிகையை நடத்திக் கொண்டுமிருந்தார். அவ்வாறு அவர் அங்கே இருக்கின்ற காலத்திலே சில வருடங்களின்பின், நாவலர் பெருமான் தமிழ்நாட்டில் திக்குவிஜயஞ்செய்து சைவப் பிரசங்கமழை பொழிவாராயினர்.

பாதிரியார் பிரசங்கம் நடக்கும் இடங்களுக்குப் போய், நாவலர் எதிரில் எழுந்துநின்று 'மம குரு' என்று வாயாரக்கூறிக் கை கூப்பி வணங்கி வருவதுண்டு; மமகுரு சமஸ்கிருத வார்த்தை. எனது குருஎன்பது அதன் கருத்து. கை கூப்பி வணங்கும்வணக்கமே பூசை 'மமகுரு' மந்திரம்.

பேர்சிவல்பாதிரியார் முன்னமே நாவலருக்குக் குருபூசை நேரில் நடத்திவிட்டார்.

யாழ்ப்பாணச் சமயநிலை என்ற துண்டுப்புத்தகத்தில் சாக்கிய நாயனார்போற் காலங்கழிக்கின்ற பாதிரிமாரும் உண்டு என்று நாவலர் குறிப்பிடுவது, பேர்சிவல் பாதிரியார் ஆகலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

0 0 0

நாவலர்சபை பேர்சிவல் பாதிரியார் நடத்திய குருவழிபாட்டை - அதாவதுகுருபூசையை - இன்று நடத்துகின்றது. பல இடங்களில் நாவலர் குருபூசை நடக்கின்றதாயினும், இவ்விடத்தில் நடப்பதில் ஒரு விசேடமுண்டு.

0 0 0

இற்றைக்கு 96 வருடங்களுக்கு முன் 1874-ம் ஆண்டில் இதேயிடத்தில் நாவலர் அவர்கள் மாகேசுர பூசை நடத்திக் கோயில் விழாவில் தேவாரபாராயணம் செய்வித்தார்கள்.

இச்சம்பவத்தைக் கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய நாவலர் சரித்திரம்

(11-ம் பக்கம் பார்க்க)




நூல்: சோதிடவாசகம் (இரண்டாம்புத்தகம்) ஆசிரியர்கள்: த. கணபதிப் பிள்ளை, மு. சின்னப்பு, அளவெட்டி. விலை: ரூபா 2-25.

சோதிடம் என்பது ஒரு சாகரம். அதன் எல்லைகளையும் ஆழத்தையும் சித்தர்களும் முனிவர்களுமன்றி சாதாரணமனிதர்கள்கண்டு கொள்வதரிது. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்தாலும் மாசற, கசடறக்கற்றுஉணர முடியாத ஒரு மாபெரும் கலை சோதிடம்.

ஆம், சங்கீதத்தைப்போல சோதிடமும் ஒரு கலையே. அறுபத்துநான்குகலைஞானங்களில் அதுவும் ஒன்று. சங்கீதத்துக்கும் சோதிடத்துக்குமிடையே சில ஒற்றுமைகள் இருக்கின்றன. சோதிடத்தில் ஏழு கிரகங்கள். (ராகுவும் கேதுவும்கிரகங்களல்ல) சங்கீதத்திலும் ஏழு ஸ்வரங்களே இருக்கின்றன. ஏழு கிரகங்களும் பன்னிரண்டு ராசிகளில் சஞ்சரிப்பது போல, ஏழு ஸ்வரங்களுக்கும் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களிருக்கின்றன. பன்னிரண்டு ராசிகளை 24 ஹோரைகளாகப் பிரிக்கிறார்கள். பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களும் 24 ஸ்ருதிகளாகப் பிரிக்கப்படும். சோதிடத்தில் முதலாம்இடமாகிய லக்கினமும் எட்டாம் இடமாகிய அட்டமமும் சரீரத்தையும் ஜீவனையும் ஆளுவது போல, சங்கீதத்தில் முதல் ஸ்வரஸ்தானமாகிய ஷட்ஜமமும் (ஸ)எட்டாம் ஸ்தானமாகிய பஞ்சமமும் (ப) சரீரத்தையும் ஜீவனையும்போல்வன. இவ்வொற்றுமைகளின் விளைவாகத்தான் போலும் ஒன்று இருக்குமிடத்தில் மற்றதையும்பொதுவாகக்காண முடிகிறது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். சங்கீதத்தின் இலக்கணங்களை ஒருவர் புத்தகங்களைப் படித்து ஒருவாறு அறிந்து கொள்ளலாம். அதைப் பயிலத்தெரியாவிட்டால் இது ஏட்டுச்சுரைக்காயாகவே முடியும். சங்கீதம் செய்யவல்ல பாண்டித்தியம் தேவகடாட்சத்தால்கிடைப்பது. சோதிடம் அப்படியன்று. போதிய ஆர்வமும் ஊக்கமும் உள்ளவர் எவரும் இதைக்கற்றுத்தெரிந்து கொள்ளலாம். சிறிதளவு வாய்வன்மையும்லோகாயத அறிவும் இருந்துவிட்டால் சோதிட விற்பன்னராகவும் வந்துவிடலாம்.

சோதிடக் கலையின் அடிப்படையான இலக்கணங்களை சுலபமாக விளக்கி அதன் பிரதானமான கோட்பாடுகளை தெளிவுற எடுத்துக் காட்டும் இந்நூல் சோதிட மாணவருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக வெளிவந்திருக்கிறது.

பூமியைச் சுற்றியுள்ள வட்ட வடிவமான மண்டலத்தை 12 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் வான சாஸ்திரிகள். இவையே மேடம் இடபம் முதலான இராசிகளாகும். பூமி 24 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை தன்னைத்தானே சுற்றி வருவதால் இரண்டு மணித்தியாலயத்துக்கொரு தடவை ஓர் இராசி உதயமாகும். ஒரு குழந்தை பிறக்கும் நேரத்தில் எந்த இராசி கிழக்கில் உதயமாகி நிற்கிறதோ அதுவே அக்குழந்தையின் உதய லக்கினமாகும். அச்சமயம் சந்திரன் நின்ற இராசி சந்திர லக்கினம் எனப்படும்.

உதய லக்கினத்தை முதலாம் வீடு, இடம், அல்லது பாவம் என்று பரிபாஷையில் குறிப்பிடுகிறார்கள். உதய லக்கினம் எதுவாயிருந்தாலும் அது முதல் வரும் பன்னிரண்டு வீடுகள் அல்லது பாவங்களுக்கு வெவ்வேறு பலன்கள் சோதிடத்தில் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக ஏழாம்வீடு களத்திர பாவம்எனப்படும். இதைக்கொண்டே ஒருவரின் மனைவி, இல்வாழ்க்கை, விவாகம் முதலியவற்றிற்கு பலன் கூறப்படுகிறது. மேடம் உதய லக்கினமாயிருந்தால் அதிலிருந்து ஏழாம் வீடாகிய துலாம் களத்திர பாவமாகும். சிங்கமாயின் கும்பம் களத்திர பாவமாகும்.

பன்னிரண்டு வீடுகளும் முறையே லக்கின பாவம், தன பாவம், சகோதர பாவம், மாதுரு பாவம், புத்திர பாவம், சத்துரு பாவம், களத்திர பாவம், ஆயுட் பாவம், கன்ம பாவம், தின்ம பாவம், லாபபாவம், விரய பாவம் என்று அழைக்கப்படும்.

இந்தப் பாவங்களின் பலனையே இந்த நூல் தெளிவாகவும் பொழிப்பாகவும் எடுத்துக் கூறுகிறது. பாவ பலன் எப்படிப் பார்த்தறிய வேண்டுமென்பதும் கூறப்பட்டுள்ளது.

இதைத் தவிர, கிரகங்களின் ஆறுவித பலன்களைப் பற்றி ஓர் அத்தியாயத்திலும் சுபயோகங்கள் அசுபயோகங்கள் பற்றி இன்னோர் அத்தியாயத்திலும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. பஞ்சாங்க பரிபாஷையில் வரும் அபசித்து, அக்கினி நாள், கரிநாள், ராகுகாலம் அவமா முதலிய பலசொற்களுக்கு அர்த்தம் கூறி விளக்குகிறது. இன்னோர் அத்தியாயம்.

பிறந்த நேரத்தைக் கொண்டு இராசிநிலை, நவாம்சநிலை தசாபுத்தி ஆகியவற்றைக் கொண்டு ஜாதகக் குறிப்பு கணிக்கும் முறை சோதிட வாசகம் முதலாம் புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதாக இந்நூலின் பாயிரத்தில்காணப்படுகிறது. ஆகை

(14-ம் பக்கம் பார்க்க)

## நாவலந்தீவின் நற்குரவர்

—மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி—

நாவலர் பெரியார் அறியீரோ
நற்றமிழ் வல்லார் தெரியீரோ!
நாவலந் தீவின் நற்குரவர்
நமக்கிறை அறிவு தந்தாரே!

நல்லை நகர்தரு நல்லறிஞர்
நாவலர் தான்அவர்க் கானபெயர்
பிள்ளைப் பெயரோ ஆறுமுகம்
பெற்றவர் கந்தர் சிவகாமி,

ஆங்கிலத் துடன்தமிழ் கற்றாரே
அவர்திறன் கண்டார் 'பேர்சிவலார்'
ஈங்கிருந் தெழுத்தறி வித்திடுமே
என்றவர் கேட்டார் இவரேற்றார்.

ஆங்கிலம் கண்ட விவிலியத்தை
அழகு தமிழினில் செய்தாரே!
வீங்கிய புகழும் பெற்றாரே
வித்தகர் என்றிட வாழ்ந்தாரே!

ஆங்கில மொழியும் அவர்மதமும்
அரசென ஓங்க மக்களெல்லாம்
தாங்கிய தமிழும் சைவமுமே
தளர்வது கண்டு துடித்தெழுந்தார்!

ஏங்கிய மனங்கள் இதங்காண
எழிற் பிரசங்கம் செய்தாரே:
தூங்கிய ஏடுகள் துடைத்தெடுத்துத்
துரிதமாய் நூலாய் வெளியிட்டார்.

பதைக்கச் செய்த பாட்டெல்லாம்
பக்குவ வசன நடையாக்கி
கதையாய்த் தந்த கொடைவள்ளல்
கற்பவர் நெஞ்சம் கடன் காட்டும்!

சைவம் தமிழே இரு கண்கள்
சாலையில் சிறுவர் பெறவேண்டும்
செய்யும் அறமே அதுவென்று
செய்தார் சாலைகள், நிதிசேர்த்தார்.

குற்றம் இன்றிப் பதிப்பித்தார்
குறிகள் சேர்த்துப் பொருள்செய்தார்
முற்றும் இனிய வசனநடை
முனிவர் என்னும் முடிகொண்டார்.

போற்றும் நாவே போற்றட்டும்!
போதும் தூவிப் புகழட்டும்
சாற்றும் தமிழும் சைவமுமே
சரித்திரம் சொல்லி வாழ்த்தட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொழில் துறை வளர்ச்சிக்கு

"தொழிலாளர்களே தொழிற்சாலையின் உரிமையாளர்களாக இருக்கவேண்டும்.''

ஈழத்துத் தொழில் துறைவளர்ச்சிக்கு நல்ல பல திட்டங்களை வைத்திருக்கும் உடும்பராய் பி. வைரவநாதன் இப்படிக் கூறினுர் லட்சம் ரூபாய் முதலீட்டுடன் இவர் ஆரம்பிக்கப்போவதாகக் கூறும் பழங்களை டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் 'கானிங்' தொழிற்சாலை இந்த முறையில்தான் இயங்கப்போவதாகச் சொன்னுர்.

மேல்நாடுகளுக்குஇவர் நேரில்சென்று வராவிட்டாலும், முன்னேறிய பல சோஷலிச நாடுகளின் தொழில்துறை வளர்ச்சியை நன்கு தெரிந்துவைத்திருக்கிருர்.

தான் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கும் 'கானிங்' தொழிற்சாலைக்கு ஏற்கனவே அரசு அனுமதி வழங்கிவிட்டதாகக் கூறிய திரு. வைரவநாதன் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை திட்டம் பூர்த்தியாகும் நாளை எதிர்பார்த்து கொண்டிருக்கிருர்.

அந்தத் திட்டம் பூர்த்தியாகும்வரை தற்காலிகமாக உடும்பராய் 'கானிங்' தொழிற்சாலையை இயங்கவைக்க இவர் ஏற்பாடுகளைச் செய்துவருகிருர்.

இந்தியாவுக்குச் சென்று சில 'கானிங்' தொழிற்சாலைகளை நேரில் பார்வையிட்டு வந்திருக்கிருர்.

இங்குள்ள பழவகைகளை துண்டுதுண்டாக வெட்டி தகரங்களில் அடைத்து அனுப்பும் தனது திட்டத்துக்கு வெளிநாடுகளிலிருந்து நல்ல வரவேற்புக் கிடைக்குமென இவர் நம்புகிருர்.

"தொழிலாளர்கள் தொழிற்சாலையின் முதலாளிகளாக இருந்தால்தான், அத்தொழிற்சாலை சுயநலக் கலப்பில்லாது முன்னேறும்' என்கிருர் இவர்.

புதுமையான, அதே நேரத்தில் முற்போக்கான இவரது திட்டங்கள் வெற்றிபெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

—'வினி'

# தமிழ்நாட்டுக் கோவில் ... நிற்கும் உணர்வு!

**எங்கள் கிராமம் - 5**

## மாவிட்டபுரம்

சோழ அரசகுமாரி கட்டியதாகத் தல வரலாறு கூறும் மாவிட்டபுரம் முருகன் ஆலயத்துக்கு ஒருதினம் சென்று கோவிலைச் சுற்றியுள்ள சத்திரங்கள் ஒன்றில் தங்கினேன். இக்கோவிலின் கோபுரம் கோவில் வரலாற்றைப் போலவே தனிப் பெருமையும் தனிச் சிறப்பும் கொண்டு தன்னிகரற்றுத் திகழ்வது. கோபுரத்தின் உச்சியில் ஏறிநின்று பார்த்தால் தென்னை, பனை எல்லாம் வாழைமரங்களைப் போலச் சிறுத்துப் பச்சைப் பசேலென மிக அழகாகத் தோன்றும். தூரத்தேயுள்ள சமுத்திரம்கூட நீலவானத்தைப்போலக் காட்சியளிக்கிறது. ஒரே வெட்டவெளியும் கரட்டு நிலமும் பற்றையும் புதருமாக கோவிலுக்கு அணித்தாகவுள்ள நிலப் பரப்புமேலே நின்று பார்க்கும்போது அழகு பூமியாகத் தோன்றுகிறது.

கோவிலில் கல்பொழியும் சிற்றுளிகளின் ஒலி கலீரிட கோவிலுள் சென்று பார்த்தேன் இரண்டாம்வீதி முன் மண்டபத்தில் பாரிய கருங்கற்களை நாலு பக்கத்திலும் பரப்பிப் போட்டு விட்டுப் பத்துப் பன்னிரண்டு பேருக்கு குறைவில்லாமலே சிற்பிகள கூடியிருந்து ஆளுக்கொரு வேலை பார்க்கிருர்கள். நவமானதொரு கற்கோவிலும் சிற்ப கூடமும் அந்த கல்லுளி ஓசையுடனே அவர்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிருக்கிறது நான் தங்கிய சத்திரத்தில் குடியிருக்கும் சிற்பாசாரி ஒருவர் சிற்ப சித்திரகூடம் உருவாகும் கோவிலின் உள் மண்டபத்திற்கு என்னை அழைத்துச்சென்று காண்பித்தார். பாதிவேலை பூர்த்தியாகியிருந்தது. மறுபாதியும் பூர்த்தியாகி விட்டதானல் குலவு சித்திரம் கோபுரம் கோவில் ஈதனைத்தின் எழிலிடையுற்ற தெய்வம் அங்கு தோன்றி நம்முடனே பேசும். சிற்பாலங்காரமான சித்திரகூட மணிமண்டபம் ஒன்று கோவிலின் நெடிதுயர்ந்த கோபுரம் போல கோவிலுக்குத் தனிப் பெருமை அளித்து நிற்கப் போகிறது என்பதை எண்ணினல் அது நமக்குப் பெருமையாகத்தானிருக்கிறது. பாதி பூர்த்தியான மண்டபத்தைப் பார்த்தபோது தமிழ் நாட்டுக் கோவில் ஒன்றனுள் நிற்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. கற்றூண்களின் மத்தியில் அதிநுட்ப வேலைப்பாடாக அமைந்த கருங்கல் சங்கிலி, சோழ அரசகுமாரத்தியின் குதிரை முக வடிவம் என்பன நமது கவனத்தைக் கவருகின்றன.

மாலை கோவிலில் பூசையாயிற்று. முருகனை வழிபட்டுக்கொண்டு சத்திரத்துக்குத் திரும்பினேன். அன்றிரவு வெகுநேரம் சிற்பாசாரியாருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு கண்ணுறங்கினேன். பொழுது விடிய என்னைத் துயிலெழுப்பிய சிற்பாசாரி என்னருகில் தானும் அமர்ந்தார்.

'அண்ணே இராத்திரி வெகுநேரமாக நாங்கள் பேசிக்கொண்டிருந்து விட்டு கண்ணுறங்கினேமா இராவெல்லாம் அதே கனவாகப் போச்சு' என்ருர்.

'என்ன பேசினேம். எதைப்பற்றியெல்லாம் பேசினேம்?'- நான் கேட்டேன்.

'கோவிலின் பழைய சரித்திரகால வரலாறுகள் பற்றிப் பேசினேம் அல்லவா?

'ஓ அதுவா? அதையெல்லாமா கனவு கண்டீர்கள்? யார் யாரையெல்லாம் பார்த்தீர்கள்? மாருதப்புரவீகவல்லி ஆடகசவுந்தரி, சங்கமித்தை ...நாக...'

'முதல் மூவருமே கனவில் தோன்றி என் உறக்கத்தைக் குழப்பி விட்டார்கள்.'

'எப்படி அதைச் சொல்லுங்கள் ஆசாரியாரே. சிற்பி கண்ட கனவு சிற்ப ஓவியமாகத் தானிருக்கும். ஆதலால் அதுபற்றி அவசியம் சொல்லுங்கள்' என்று நானும் தூண்டி உஷார் படுத்தவே, மகனைக் கூப்பிட்டுத் தண்ணீர்ச் செம்பும் காப்பிக்கூஜாவும் எடுத்து வரப்பணித்துவிட்டு கனவுலகத்தை அவிழ்த்தார் சிற்பாசாரி குமரேசன்.

'அந்த மூன்று பெண்களுமே கனவில் தோன்றி என்னை மிரட்டினர்கள். சாமி என்ன சிற்பாசாரியாரே கல்லிலே கலை வடிவம் படைத்துவிட்டு நிம்மதியாகப் படுத்துறங்குகிறீரா? என்னைத் தெரியவில்லையா? நான்தான் நீர் கற்பனை உலகிலே தேடிய சோழகுமாரி. என்கூட வந்திருப்பவர்களைத் தெரிகிறதா? அவர்களும் சரித்திர காலத்துப் பெண்ணரசுகள் தாம். ஒருவர் ஆடகசவுந்தரி. மற்றவர் சாதுசங்கமித்தி. உம்மை வரலாற்றுக் குழப்பத்தில் ஆழ்த்திய வெண்ணிலவுப் பெண்ணரசிகள்...' என் முன் நின்ற பெண் பேசினள். 'அடடே நீங்களிருபேரும் ஒருவர், இரண்டு பெயரில் உள்ள ஒரே பெண்என்று சொல்லக் கேட்டிருக்கிறேனே — என்று கூறியதற்கு இரண்டு பெண்களும் கலீரெனச் சிரித்தார்கள்.

''ஏன் சிரிக்கிறீர்கள் அம்மணிகாள்?''

'எங்கள் இரண்டுபேரையும் உமது கலையிலும் ஒன்ருகக் காட்டிவிடப்போகிறீர் அதுபற்றியே எண்ணிச் சிரித்தோம். உஷார் சிற்பியாரே! நான் வேறு அவள் வேறு. நான் சோழகுமாரி. அவள் கலிங்கத்துக் கன்னி. ஈழத்தின் வடபாகம் என் வசமாயிற்று. ஈழத்தின் கீழ்ப்பாகத்தை அவள் அரசாண்டாள். இதை நினைவில் வைத்துக்கொள்ளும். அது மட்டுந்தானு? என் முகம் உமது சிற்பவடிவத்தில் கண்டிருப்பதுபோல் அத்தனை குரூபமாக இருந்ததே இல்லை.''

'நானென்ன செய்வேன், இராசகுமாரி. கோவில் கட்டளை. தலவரலாறு அப்படிக் கூறுகிறதாம். அதனுலென்ன, குதிரைமுகம் நீங்கிய தோற்றத்திலும் மற்ருெரு அழகுசிலை அமைத்து சிற்ப கூடத்துக் கற்தூண்களில் ஒன்ருக நாட்டிவிடுகிறேன்.'

'அப்புறம் அதனையே ஆடகசவுந்தரியாக்கி குழப்பம்பண்ணிவிடப் போகிருர்கள்.'

'ஓ உங்கள் குரலா. வணக்கம் செலுத்துகிறேன். அந்த சாமி அம்மா...'

''அவர் எங்களிருபேருக்கும் மூத்த சங்கமித்தை. அசோகச் சக்கரவர்த்தியின் குமாரத்தி. அறிந்திருப்பீரே. கலிங்கத்துப்போரிலே மனம் பேதலித்த மௌரியச்சக்கரவர்த்தி அதன்பின் புத்தமதத்தைத் தழுவி அகிம்சாதர்மத்தை உலகெங்கும் பரப்பியதும்...'

'வணக்கம் தாயே, உங்கள் [illegible] இன்னமும் எவ்வளவு ஈடுபாடு!

'என் ஆசிகள், குமரேசா. ஆனல் நான் உன்னிடம் பேசுவதற்கு ஏதுமில்லை. என் உருவத்தை எக்கோலத்தில் அமைத்தாலும் அது எனக்குச் சம்மதமே.''

'ஆகா, தோற்றத்தில் மட்டுமன்றி உள்ளத்திலும் கூட அப்படி மெய்த்துறவியாக இருக்கிறீர்கள் தாயே.'

0 0 0

நான் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. சிற்பி கண்ட கனவு நல்லதொரு கற்பனை. ஓவியமாகத்தான் அமைந்துவிட்டது. இராத்திரியெல்லாம் கோவில் சிற்பகூடத்துக்குள்ளே ஒரேரகளைதான் — என்று எனக்குள்ளாக எண்ணிச் சிரித்துக்கொண்டே எழுந்தேன்.

வெயில் ஏறிவிட்டது. சால்வைத்துண்டைத் தலையில் போட்டுக்கொண்டு ஒழுங்கைப் பக்கமாக இறங்கினேன். ஊரைச் சுற்றிப் பார்த்துவரலாமென்ற எண்ணத்துடனே நடந்தேன், 'ஒடுமின் என்றலும் அவ்வுரை கேளாது, நீடுமகிழ் வெய்தி அவண் நின்ற குமரேசன்' - ஏனே இந்தப் பாடலை என் வாய் மெல்லப் பாடிற்று. வேடர்குலப் பெண்ணிடம் உரையாடி மகிழ்ந்த குமரேசன் நிலையைக் கச்சியப்பர் இவ்வாறு வருணிக்கிருர்— கந்தபுராணத்தில். சிற்பாசாரி குமரேசனை நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது பாவம், சரித்திர வரலாற்றுக் கதைகளைக் கேட்டுவிட்டு மனத்தைக் குழப்பிக்கொண்டு விடிய விடிய நித்திரையிலும் கனவிலும்கூட அதே குழப்பம்!

வெற்றிலை, வாழை இலைக்கும் புகழ்பெற்றது இவ்வூர். ஒழுங்கைக்கு இரண்டு பக்கமுமிருந்தவெற்றிலைத்தோட்டங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தேன். சில தோட்டங்களில் கிணற்றுக்கு இயந்திரம் பூட்டி இறைக்கிருர்கள். புதுச புதுசாக கட்டிடங்கள் எழுந்து மண் குடிசைகள் இருந்த இடமே தெரியாமல் போயிருக்கிறது. இது தவிர வேறு பெரும் மாற்றங்கள் என்பார்வைக்குத் தோன்றவில்லை. அந்தநாளில்

பாலத்தரன் அதே முருக்கமரத்தில் வெற்றி[லைக்] கொடி படருகிறது வா[ழை]கள் நூறு ஆயிரமாக [குலை]களையும் குட்டிகளையும் [பெ]றுக்கொடுத்து ந[ன்கு] வாழ் இனிச்சுவை கண்டு சாய் மடிகின்றன. இந்த இயற் நியதி அன்று போல [இன்]றைக்கும்வழுவாமல் வா[ழை] யடி வாழையாக ந... பெற்றுக் கொண்டேயிரு[க்கி]றது. வெற்றிலைக்கொழு[ந்து]களைப் பார்த்தால் கை... டிப் பறித்து, அப்படி[யே] வாய்க்குள் சுருட்டிவை[த்து] விடலாம்போலிருக்கிற[து]. இலைகளிலே பசுமை செ... கிறது. அதோ அ... கொழுந்து பறிக்கும் க... யின் முகத்திலும்கூட [அ]தக் கொழுந்துச் சி... படிந்துவிடுகிறதே!

இவ்வூர் வெற்றி[லை] வாழைக் குலைக்காக [அந்த] காலத்தில் அக்கரைஊர்...

**என் கால்களுக்... பசுந்துளிர்...**


# கிருமிப் பீ...

# ஒழி...

உங்கள் தாவரங்களைத் தாக்க ஆவ...
மூறியடிக்க முழுநிவாரண, சிக்கன...






என்ட்ரெக்ஸ்'20 – நெல், புகையிலை, காய்க...
ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் முற்ற...
நம்பகரமானதென நிலையான, வெளாள...
(1 திரவ அவுன்ஸ் என்ட்ரெக்ஸ் 20 ஐ 2—4 க...
கலந்து இலைத்தொகுதியில், 3—4 வாரத்...
முறை நன்கு தெ...

நெல் புகையிலை, அல்லது காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு...
வன்மை மிகு கிருமிநாசினிகள் 'என்ட்ரெக்ஸ் 20.ம், 'அசோ...
கொண்டு அவற்றை ஒழுங்காகத் தெளித்து கிருமிப்பீடைகளுக முற்றழி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல் ஒன்றினுள்
# ...வு!

அதே முள் ...ல் வெற்றிலைக் ...கிறது. வாழை ...பிரமாக குலை ...களையும் பெற் ...ந வாழ்வில் ...ண்டு சாய்ந்து ...இந்த இயற்கை ...போல இன் ...வாமல் வாழை ...ாக நடை ...ண்டேயிருக்கி ...லைக்கொழுந்து ...தால் கைநீட் ... அப்படியே ...சுருட்டிவைத்து ...லிருக்கிற து- ...பசுமை சொட் ...தா அதோ ...றிக்கும் கன்னி ...திலும்கூட அந் ...ந்துச் சிவப்பு ...றதே!

...வெற்றிலை, ...லைக்காக ஒரு ...க்கரைஊர்களி

விருந்து தோணிப் பயணம் செய்துகொண்டுவந்தார்களாமே! இங்கெல்லாம்நீண்ட பெரிய புல்வெளிகள் இருந்திருப்பதால் ஒரு காலத்தில் இவ்வூர் குதிரைகளுக்குப் புகழ்பெற்றதாயிருக்குமென்றும் ஊகித்தறிவோர் உளர். ஆகவே சோழநாட்டுக் கல்யாணங்களுக்கு வெற்றிலை, வாழைக்குலை வாங்க வந்த

டால் 'சோழகுமாரி எதற்காகவந்தாளோ அதை யார் கண்டார்கள்? இவ்வூருக்கு குதிரை வாங்க வந்த இராச பரிவாரத்துடனே கூடிக் கொண்டுஊர்சுற்றிப்பார்க்க கிளம்பியிருப்பா இங்கே வந்து தீர்த்தமாடினுப்புறம் அவா குதிரைமுகமே நீங்கி, குதிரை முகாமே துறந்து மாணிக்கவாசக சுவாமிகளா

கள். எத்தனைபேர் மனநோய் மருத்துவ மனையில் தஞ்சம்புகுந்து இருக்கிறார்கள், இந்தவகையில் நமது வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கும் சர்வ வல்லமை படைத்த நவீன அசுவமேதப் புரவிகள் உட்கொள்வது ஒரு பிடி புல்லும்ஒருபடிகொள்ளும் மாத்திரமேயானலும் நூறு மல்லர்கள் ஒன்றுதிரண்டாலும் ஆற்றில் அதனைத் தண்ணீர் குடிக்கப்பண்ண முடியாதாம். தனி ஒரு தென்னாலிராமன் காயப்போட்ட குதிரையோபசும்புல் என்று நினைத்து வளர்த்தவனின்

## முருக்க மரத்தில் படரும்
## வெற்றிலைக் கொடிகள்,
## வாழைகள் நூறு ஆயிரம்!

வர்களை அப்பொழுது மறக்காமல் 'குதிரை முட்டை' யும் வாங்கிச் சென்றிருப்பார்கள் என்று நாமும் ஊகித்து தெரிந்துகொள்வோம்.

'என்ன சார்' எங்க தஞ்சாவூர் ஜில்லாவிலே இல்லாத வெற்றிலையும் வாழையுமா இங்கெல்லாம்?' என்கிறார் ஒரு சோழவேந்தர்.

'கோவிலும் குளமும்கூட அங்கில்லாததா இங்கெல்லாம்? அப்புறம் உங்கள் நாட்டு இராசகுமாரி எதற்காக இங்கு வந்து தீர்த்தமாடினள்?' என்று நாம் அவரிடம் திருப்பிக்கேட்

யிட்டா' —என்று மேலும் ஒரே போடாகப் போட்டு விடுகிறார்.

குதிரைகளுக்கு இன்றைக்கும் கூட மனிதர் அளித்து வரும் பெருமை பிரதாபங்களைப் பார்க்கும்போது குதிரைகளுக்காக (சிலசமயம் 'குதிரை முட்டை'களுக்காகவும் கூட) கடல்கடந்து வந்த கதை நம்பக்கூடியது தான். இன்றைக்கெல்லாம் உள்ள பந்தயஓட்டக்குதிரைகளாலே எத்தனை பேர் இருந்தாற்போலிருந்து கோடி சீமான்களாகியிருக்கிறார்கள். எத்தனைபேர் ஓட்டாண்டிகளாகியிருக்கிறார்

தாடியையே பிடுங்கிவிட்டதே!

இங்குவந்த சோழ குமாரத்திகூடபின்பெல்லாம்ஒரு குதிரைப் படைக்குத்தளபதியாகி கிழக்கிலங்கைக்கு ஏன் படை எடுத்துச்சென்றிருக்கமாட்டார், ஏன் ஆடகசவுந்தரியாகியிருக்கமாட்டார்?

'மாருதப்புரவி' என்பது வாயுவேகமாகப்பாயும் குதிரைகள் ஒன்றினது பெயராக ஏன் இருந்திருக்காது?

ஒழுங்கை சுற்றி வளைந்து மறுகரையில் கீரிமலையாத்திரைப் பாதையைத்தொட்டுப்பிணைக்கிறது: தெருவுக்கு அந்தப்பக்கமாக 'வண்

**அ. செ. முருகானந்தன்**

ணன் குளம்' என்று ஒரு பள்ளம் இருக்கிறது. கிராமச் சபை, பள்ளத்தின் நடுவே கிணறுகள் தோண்டி தொட்டிகளும் கட்டிக் கொடுத்து தற்காலப்பெயரை நிலைவரப்படுத்தியிருக்கிறது. வெகு காலத்துக்குமுன் 'வளவர் கோன் பள்ளம்'' என்று இப்பள்ளம் பெயர் பெற்றிருந்ததாம். பள்ளமோ பாளையமோ? பெரும்மாளிகையும் மண்டபமும் இருந்ததன் அடையாளமாக இடிபாடுகள் இன்றைக்கும் காணப்படுகின்றன. சோழ பாளையமாக- சோழ குமாரத்தியின் பாளையக் கோட்டையாக இருந்திருக்கும். 'மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை' நாயனர் தேவாரம் நினைவிருக்கிறதல்லவா? 'வளவர்' என்ற சொல் சோழரைக்குறிக்கும். தேவாரம் கூறும் வளவர்கோன் பாவை பாண்டிமாதேவி ஆனதுபோல், தலவரலாறு கூறும வளவர்கோன்பாவை ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சாவழியில் தோன்றிய உக்கிரசிங்கனின் தேவி ஆனதாகவும் ஒரு கதை - கட்டுக்கதையோ, கர்ண - பரம்பரைக் கதையோ அல்லது ஏட்டில் எழுதிவைத்ததோ அது விஷயம் கற்பனை கடந்து ஆராய்ச்சி வரம்புக்குஅப்பாற்பட்டு நிற்கிறது. உக்கிரசிங்கன் சோழகுமாரத்தியை அவள் பாளையத்திற்குள் புகுந்து களவாகத் தூக்கிப்போனதாகக் கூடத்தான் சொல்கிறார்கள்.

அநேகமாய்ஐம்பதுஆண்டுகளுக்கு முன்னதாக கோயில் திருவிழாக்களில் ஒன்றான

வேட்டைத் திருவிழாவுக்கு சுவாமியை இங்கு கொண்டு வருவார்களாம். அப்பொழுதிருந்த வேட்டை இளைப்பாறு மண்டபம், வள்ளியம்மன் மண்டபம் எல்லாம் வேட்டைத் திருவிழா கோவில்வீதியில் நடைபெறத் தொடங்கியபின்பும் நெடுங்காலமாக இந்தப் பள்ளத்துக்கு முன்னதாகஉள்ள கோவில் காணியிலேயே அப்படியே வைத்து அழியாமல் பாதுகாக்கப்பட்டன. இன்றைக்கு அது ஒன்றையும் கண்ணிலும் காணும்.

''யாரது வள்ளிப்பிள்ளை அக்காவா? எப்படி சுகமாயிருக்கிறாயா.' '- தலையிலே கடகச் சுமையுடனே வந்த வள்ளிப்பிள்ளையிடம்தான் கேட்டேன். கிராமத்து மண்ணிலே கால்வைத்து நான் பேசிய முதற்பெண் வள்ளிப்பிள்ளைதான். ஊரிலே எனக்குத் தெரிந்த கமக்காரக் குடும்பங்களில் வள்ளிப்பிள்ளையின் குடும்பமும் ஒன்று. நான் பள்ளிக்கூடம் போன நாளிலே தவழும் குழந்தை. என்கூடப்படித்த அவள் அண்ணனின்தோளிலேதாவிக்கொண்டுஅந்தப் வம் முதலே என் வீட்டுக்கு வந்து பழகியவள். அதனால், சட்டென்று ஆளை அடையாளம் கண்டு கொண்டேன். எல்லாம் தெரிந்த முகம், பார்த்த மாத்திரத்தே சட்டென அடையாளம் கண்டு கொள்கிறேன். எல்லோரையும் எனக்குத்தெரிந்திருக்கிறது. ஆனல் யாருக்கும் என்னைச்சரியாகத் தெரிந்து

(12- பக்கம் பார்க்க)

...ள்ளுக்கு

...துளிர்


# ...ப் பீடைகள் ஒன்றும் அனைத்தும்
# ...ழிந்திட இரு வழிகள்

...க ஆவலோடு காத்திருக்கின்றன நூற்றுக்கணக்கான புழுக்கள், பூச்சிகள். இத்திட்டத்தை
...ன, சிக்கனமான, வன்மைமிகு கிருமிநாசினிகள் இரண்டு இன்று நம் கைகளில் உள்ளன.













...கையிலை, காய்கறி பருத்தி ...பீடைகள் முற்றழிப்பிற்கு ...ான, வேளாளர் தெரிவு. ...20 ஐ, 2—4 கலன் நீரில் ...ல், 3—4 வாரத்திற்கொரு ...றை நன்கு தெளிக்கவும்.

அசோட்றின் 60— ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத கிருமிப்பீடைகளின் முற்றழிப்பிற்கு ஏதுவான ஓர் வன்மைமிகு புதிய, படிமுறை கிருமிநாசினியாகும். நெல், புகையிலை, காய்கறி, பருத்தி ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் ஒழிப்பிற்கும் சிபார்சு செய்யப்படுகிறது. (1 திரவ. அவுன்ஸ் அசோட்றின் 60 ஐ. 3–5 கலன் நீரில் கலந்து 2–3 வாரத்திற்கொருமுறை தாவரத்தின் இலைத்தொகுதியில் நன்கு தெளிக்கவும்.

...விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா? ...ரெக்ஸ்' 20 ம், 'அசோட்றின்' 60 ம் ...டைகளுக்கு முற்றழிப்பு அளித்திடுக.

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்

**லங்கெம் இலங்கை லிமிட்டெட்**

செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கவி நயம்—11

# ஏழைச்சிறுமியின் ஏக்கம்!

இந்த உலகத்தில் பல நாடுகளில் செல்வர்களும், வறியவர்களும் இருக்கிறார்கள். மாளிகைகளில் வாழ்ந்து பாலும் பழமும் உண்டு செல்வர்களது குழந்தைகள் வாழ்கின்றன. குடிசைகளில் ஒதுங்கி கஞ்சியும் கூழும் உண்டு வறிய குழந்தைகள் தவிக்கின்றன. பெரியவர்களுக்கு வறுமையின் காரணம் தெரியலாம். குழந்தைகளுக்கு செல்வம், வறுமை அதன் காரணங்கள் தெரிய மாட்டா.

சரசுவதி ஓர் ஏழைச்சிறுமி. அவள் தாய் கூலி வேலைசெய்பவள். தகப்பனுரோ இல்லை. சரசு பள்ளிக்கூடம் போவதில்லை. தெருவோரத்தில் உள்ள சின்னஞ்சிறு குடிசைதான் அவள் இருப்பிடம். அவள் தென்னை மரங்களின் நிழலில் விளையாடுவாள். தெருவிலே செல்லும் பெண்கள் அணியும் சேலைகளையும் பார்ப்பாள். பல குழந்தைகளது அழகிய பாவாடை சட்டைகளைப் பார்ப்பாள். தன் கிழிந்த உடைகளையும் பார்ப்பாள். ஏக்கமடைவாள். தனக்கும் அப்படி நல்ல பாவாடை சட்டைகள் வாங்கித் தன் தாய் ஏன் தருவதில்லை என்று நினைப்பாள்.

ஆனால் தாயைக் கேட்கப் பயம். ஒருநாள் நுணிந்து கேட்டுவிட்டாள். தன் மனத்திலே அடங்கியிருந்த ஆசைகள்-ஏக்கங்கள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டாள்.

சரசுவதியின் ஏக்கங்கள் அழகியபாடலாக வெளிவருகின்றன. அவள் தன் தாயைப் பார்த்துக் கேட்கிறாள். பசியிலும் பார்க்க பாவாடை சட்டைகள்தான் குழந்தையைக்கவருகின்றன. அதனால் அதைப்பற்றியே முதலில் கேட்கிறாள்.

அம்மா இங்கே
வா அம்மா
அழகாய்ச் சிறுவர்
தெருவினிலே
சும்மா போவார்
வருவோராய்த்
தொடர்ந்து செல்வார்
பலரைப் பார்
முடித்துச் செல்வார்
பலர் அம்மா

ஏன் என் தலையில்
பூ இல்லை
ஏன் என் சட்டை
கிழிந்திருக்கு?
போன வருஷத்தின்
பிறகு
புதிய உடையும்
தைத்ததில்லை

தாய்க்கு அப்போதுதான் மகளின் ஏக்கம் தெரிகிறது. அந்தக் குழந்தை சொல்வது உண்மை. ஒரே ஒரு சட்டை. அதுவும் போன வருடப்பிறப்புக்குத் தைத்த சட்டை. தாய் தங்களது வறுமையைப்பற்றிச் சொல்ல வாயெடுக்கிறாள்.

அதற்குள் சரசுவின் கேள்விகள் தொடருகின்றன. உடையைப்பற்றிச் சொன்னவள் இப்போது தங்கள் குடிசையில் உள்ள உணவைப்பற்றியே சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

பக்கத்து வீட்டுச் சிறுவ
ரெல்லாம்
பலகாரங்கள்
உண்கின்றார்
மிக்க நல்ல பழத்தொடு
பால்
வேண்டிய மட்டில்
புசிக்கின்றார்

ஏன் எம் வீட்டில் பால்
இல்லை?
இட்டலி தோசை வகை
யில்லை
பானம் பருக ஒன்று
மில்லை
பச்சைத் தண்ணீர்
குடிப்பதல்லால்
கஞ்சி யொருநாள்
கூழொருநாள்
காய்கறி யோடு
சோறொருநாள்
மிஞ்சும் ஒருநாள் வெறுஞ்
சோற்றை
மென்று தின்பதும்
ஏனம்மா?

"பானம் பருக ஒன்றுமில்லை, பச்சைத் தண்ணீர் குடிப்பதல்லால்" என்றவரிகளும், "மிஞ்சும் ஒருநாள் வெறும் சோற்றை மென்று தின்பதும் ஏனம்மா?" என்றவரிகளும் வறுமையின் கோர நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இப்படிக் கேட்ட குழந்தைக்கு தாயால் ஒரு பதில்தான் சொல்லமுடியும் அவர்கள் செல்வர்கள், நாங்கள் வறியவர்கள். அவர்களைப் போல எங்களால் வாழ முடியுமா? என்பதுதான் பதில். அதையே அந்தத் தாயும் சொல்கிறாள்.

தாய் கூலிவேலை செய்த அலுப்பில், தெருவில்பத்துப் பேர் போவார்கள், வருவார்கள். அதற்கென்ன உனக்கு? என்று கேட்கிறாள். சரசு அப்போதுதான் தன் மனக் கருத்தை வெளியிடுகிறாள்.

பட்டுச் சேலை பளபளக்க
பசும் பொன் நகைகள்
கலகலக்க
மொட்டும் பூவும்
கூந்தலிலே

கூலி வேலை செய்துனக்கு
கூழும் சோறும் தருகின்
றேன்
மேலோர்போல நாமிருக்க
விரும்பலாமா? கண்
மணியே.

மாதமுடிவில் சம்பளத்தை
வாங்கி வரும்
போதுனக்குப்
போதுமான தின்பண்டம்
புதிய சட்டை தந்திடு
வேன்.

வறுமையை வேறொரு கோணத்தில் சித்திரிக்கும் இந்தப்பாடலை எழுதியிருப்பவர் காமாட்சி ஸ்ரீநிவாசன். இப்படியான பாடல்களை இளமைப் பருவத்திலே சொல்லிக்கொடுத்தால் பிற்காலத்தில் குசேலோபாக்கியானம்போன்ற நூல்களில் வரும் பாடல்களை மாணவர் நன்கு இரசிப்பர். குழந்தைகளுக்கு ஏழைகளின்மீது இரக்க உணர்ச்சியையும் ஏற்படுத்தும். இந்த எட்டுப் பாடல்களையும் நீங்களே ஒருசேர வாசித்துப் பாருங்கள். இப்பாடல் உள்ள நூல் குழந்தைப்பாடல்கள் கிறிஸ்துவ இலக்கிய சங்கம், பார்க் டவுண், சென்னை என்பது நூல்கிடைக்கும் முகவரி

—இரசிகமணி கனக. செந்திநாதன்—

மாணவ மாணவிகளே!

நீங்கள் அனுப்பும் கட்டுரை, கவிதை மற்றும் விஷயங்களுடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புமாறு வேண்டுகிறோம். கூப்பனோடு வரும் விஷயங்கள் மட்டுமே கவனிக்கப்படும்.

மாணவர் மலர்

பெயர் ..................................................

விலாசம்: ..................................................

..................................................

..................................................

பாடசாலை: ..................................................

..................................................

..................................................

கையொப்பம் வகுப்பு ஆசிரியர்/அதிபர்

சிந்தனைச்சுருள்-7

# ஆசிரியர் நமது குரு

ஆசிரியர் நமது குரு! கல்வியை மட்டுமல்ல ஒழுக்கம், கடமை, அன்பு, பண்பு, பக்தி, வாய்மை இன்னோரன்ன பல உயரிய பண்புகளை எமது உள்ளத்திலே பதிய வைக்கும் ஆசான். நடைமுறையிலே அவற்றை நாம் கடைப்பிடித்து ஒழுகவைக்கும் உத்தமர்! அத்தகையோரை நாம் மதித்து விசுவாசமாக நடக்கவேண்டியது நமது கடன். அவர்கள் நிறைந்த மனத்துடன் ஊட்டும் கல்விதான் எங்களை மனிதனாக்குகிறது.

கல்வியூட்டும் ஆசானை நாம் மதிக்க வேண்டியது மட்டுமல்ல, பயபக்தியுடன் நடக்கவேண்டியதும் நமது தலையாய கடனாகும். பயமும் பக்தியும் உள்ள இடத்தில் தான் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவமுடியும். ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள இடத்தில்தான் கல்வி வளர்ச்சி பெறமுடியும்.

இப்பொழுதெல்லாம் மாணவர்கள் கல்விக்கூடம், விளையாட்டு மைதானமென நினைக்கிறார்கள். ஆசிரியரின் சொற்கள் எட்டிக்காயாக அவர்கள் உள்ளத்தில் கசக்கிறது. ஆசிரியரையே துரும்பாக மதித்து எதிர்க்கவும் துணிந்துவிடுகிறார்கள்.

இவையெல்லாம் நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்வதற்கு வழிகளாக அமையுமேயல்லாது நல்ல பாதையைக்காட்டாது.

எனவே-

இதை நினைவில் நிறுத்தி- அவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும், போதிக்கும் பாடத்தில் கவனமெடுத்தல் வேண்டும், வீட்டுப்பாடங்களைக் கூடுமானவரை செய்தல்வேண்டும்.

வகுப்பில் வீணாகச் சத்தமிடுதலோ, மற்றப்பிள்ளைகளுடன் வீண்வார்த்தை பேசுதலோ அடிபடுதலோ மாணவர்களுக்கு அழகில்லாத செயல்கள். நாம் கல்வி கற்கத்தான் பாடசாலைக்கு போகிறோமே தவிர வீண் பொழுதுபோக்கவல்ல அதை உணர்ந்து நடப்போமாயின் நாம் சீரிய கல்வி பெற்று சிறப்புடன் வாழமுடியும்.

— நீலா

# நானிலம் போற்றும் நந்தாப் பெருமை மிகு நாவலர்

— புலவர் சிகாமணி வ. மு. இரத்தினேஸ்வரன் —

இவ்வுலகந் தோன்றிய காலம்முதல் மக்களுந் தோன்றியுள்ளார். மக்கள் ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு அறிவிக்கப் பல மொழிகள் தோன்றின. தமிழும் தமிழ்மக்கள் பேச உதவிற்று. இறைவராகிய சிவபெருமான், 'ஆரியத்துடன் தமிழும் உடன்கூறிக் காரிகையார்க்குஅருள்செய்தார், இலக்கண இலக்கிய நூல்கள் பல தமிழன்னையின் அணிகளாக விளங்கின. ஏட்டுப் பிரதிகளாக அறிந்தோர் அந்நன்னூல்களைப் பின்னோர் பாதுகாத்தனர். அச்சுப் பொறிகள் தோன்றின.




நூல்களும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலாகசி முதலியன தோன்றின.

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே ஏடுகளில் புராணங்கள், வேறு இலக்கிய இலக்கணங் கற்றோரும்வைகினர்

நூற்றுண்டுகளுக்கு முன் (1822) அளவில் பரசமய கோளரியும், சைவசித்தாந்த பானுவுமாகிய நல்லூரில் ஆறுமுகன் ஆருட் பிழம்பாக ஒருஆண்மகவு தோன்றியது. அப்பேரருட் குழந்தையே ஆறுமுகநாவலராவர். ஆரியம், ஆங்கிலம், சீரிய செந்தமிழ் முதலிய பன்மொழிகள் ஆறுமுகனார் கற்றுத் தேறினர். சேனுதி

(14- பக்கம் பார்க்க)

பஞ்சதந்திரக்கதை

## தந்திரமும் அறிவுமிருந்தால் தடுத்துநிறுத்தலாம்

-- சோமசன்மா -

காக்கையொன்று மரக்கிளையில் முட்டை இட்டது
கரியநாகம் தினம்குடித்து மகிழ்ந்திருந்தது.
ஏக்கம்கொண்டு ஆணும்பெண்ணும் இளைத்து
நின்றது
எதிரில் வந்த நரியினிடத்தில் நிலையைச்
சொன்னது.

தந்திரத்தில் சிறந்தநரி அந்த நாகத்தை
தடியினாலே அடித்துக்கொல்லும் வழியைச்
சொல்லிற்று
அந்தவழியே சிறந்ததென்று காகம் எண்ணிற்று
அரசமகள் குளிக்கும் நேரம் பார்த்திருந்தது.

குளிக்கமுத்து மாலைகழற்றி சுவரில் மாட்டினள்
குறித்த நேரம் பார்த்து காகம் முத்துமாலையைக்
களிப்புடனே தூக்கக்கண்டு அரசகுமாரியும்
காவலரை நோக்கிக் கூச்சல்போட்டு அழைத்
தனள்

காகம்பறந்து செல்வதையே கண்டகாவலர்
கழியும் இரும்பும் தூக்கிக்கொண்டு விரட்டிச்
சென்றனர்.
நாகம் இருக்கும் புற்றிலந்த முத்துமாலையை
நன்குபார்க்கப் போட்டுக்காகம் பறந்து
சென்றதே.

முத்துமாலை தேடச்சென்றோர் புற்றைத்
தோண்டவே
மூர்க்கத்தோடு நாகம்சீறி படமெடுக்கவே
புற்றைச்சுற்றி இருந்தமக்கள் போட்ட அடியினால்
பொல்லா நாகம் தலைநசுங்கி உயிரிழந்ததே.

தந்திரமும் அறிவுமிருந்தால் எந்த எதிரியும்
தலையெடுக்கா விதத்தினிலே தட்டி நிறுத்தலாம்
எந்தவழியும் அறிந்திடாமல் இருக்கும்தற்குறி
ஏய்ப்பவர்க்கே அடிபணிவான் இதனை நீயறி.

# எங்கள் அப்பா

—ச. தங்கமாமயிலோன் —

அல்லும் பகலும் நமக்காக
அயரா துழைக்கும் அப்பாவே
சொல்லும் பொருளுஞ் சேர்ப்பதற்கு
சோர்வு படாதவர் அப்பாவே

கற்றல் வேண்டும் நாமென்றே
கனரக நூல்களை வாங்கிவந்தே
நிற்றல் வேண்டும் அதன்படியே
என்று உரைப்பவர் அப்பாவே

சுற்றஞ் சூழல் என்றெல்லாம்
சூழ விருந்தே உண்பதற்கு
முற்றுந் துறந்த முனிவரையும்
முகமன் சொல்வார் அப்பாவே

நினைத்த படியே நடவாமல்
சினத்தை நெஞ்சிற் கொள்ளாமல்
அனைத்தும் அன்பால் ஆகுமென
அறைவர் தினமும் அப்பாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிகள் கருமத்தைக் கவர்ந்த அன்றைய விளையாட்டுக்கள்

இன்று நாம் மேலைத் தேசங்களின் நெருங்கிய தொடர்பால் அவர்களது விளையாட்டுக்கள் பலவற்றில் மோகம் கொண்டு நம் பண்டைய விளையாட்டுகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டோம். பண்டைய கவிகளின் செய்யுள்கள் சிலவற்றில் இருந்து நமது பண்டைய மகளிரின் சிறந்த விளையாட்டுகளைக் காணக் கூடியதாக இருக்கிறது.

கண்பொத்தி ஆடல், பல்லாங்குளி ஆடுதல், சிற்றில் அமைத்தல், பாண்டி ஆடுதல் போன்ற பல விளையாட்டுகள் பல கவிஞர்களின் கருத்தைக் கவர்ந்துள்ளன. தம் மனத்தைக் கவர்ந்த இவ்விளையாட்டுக்களை அக் கவிஞர் பெருமக்கள் நகைச் சுவையோடு நயம்பட உரைத்துள்ளனர்.


கருத்தாளமும் கவிநயமும் நகைச்சுவையும் கொண்டு பெண்களுக்கே இயல்பாயுள்ள குறும்புத் தனத்தையும் எடுத்துக் காட்டும் செங்கழுநீர், விநாயகர் பள்ளு என்னும் பிரபந்தத்தில் உள்ள ஒரு செய்யுள் இவ்விளையாட்டுகளில் ஒன்றைப் பற்றிச்சுவைபடக் கூறுகிறது.

சின்னஞ்சிறிய அழகியபெண்கள் தங்கள்சின்னஞ்சிறுகைகளால் சிறுவீடு அமைத்து அதில் குடிபுகுந்து அங்கு சமையல்வேலை செய்கிறார்கள். புல்லு, கல்லு, மண் முதலியவற்றைக் கொண்டு கறி சோறு ஆக்கி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இவ் வேளையில் இச்சிறு பெண்களுக்கு குறும்பில் சிறிதும் தோற்காத குறும்புக்காரப் பிள்ளையார் தன் தொந்தி வயிற்றைத் தூக்கவியலாது தூக்கிக்கொண்டு குறுங்காலால் குறுநடை நடந்து சிறுமிகள் செய்த சிற்றில் நோக்கி வந்தார். இவரைக் கண்ட இக்குறும்புச் சிறுமியர் அவரது யானைத் தலையையும்தொந்தியையும் தொங்கும் துதிக்கையையும் குறள் கால்களையும் கண்டு சிரிப்பையடக்கவியலாது சிரித்துவிட்டனர்.

பிள்ளையாருக்கு ச்சிறுமியர்மேல் கோபம் வந்துவிட்டது. அவர்களைப் பழிக்குப் பழிவாங்க எண்ணி அவர்களது சிறுவீட்டை தன் குறள் காலால் சிதைக்க விரைந்தார்.

அப்போது அச்சிறுமியர் அவரைத் தடுத்து செங்கழுநீர் சிறுவரே எங்கள் சிறு வீட்டை அழிக்காதீர். நாம் உம்மைப் பார்த்து சிரிக்கவில்லை. வீட்டுக்கு விருந்தாளி அவசியம் எனச் சிந்தித்த வேளையில் உம்மைச் சந்தித்ததையிட்டு சிரித்தோம். தேடாமலே விருந்தாளி கிடைத்ததையிட்டுச் சிரித்தோமேயல்லாமல் ஒருநின் கரிமுகம்போல முகமும் பூதப்பெருவயிறும் முடங்கும் குறட்டாள்நகு நடையும் இருந்தவாறு நோக்கி நகைத்திட்டேம் அல்லேம் ...ஆதலால் '... ...கலைசைச் செங்கழுநீர்ச்சிறுவா சிற்றில் திதையேலே ......' என வேண்டினர்.

இதிலிருந்து பண்டைய நம் தமிழ் மக்களின் விளையாட்டுக்கள் எவ்வளவு பிரபல்யம் அடைந்தனவாக நம் கவிஞர் உள்ளத்தைத் தொடும்அளவுக்கு இருந்தன வென்பதும் புலப்படுகின்றது. இத்தகைய விளையாட்டுக்கள் நம்மவர் மத்தியில் வெகுவாக அருகிவிட்டன. தற்போதைய போட்டா போட்டி மனப்பான்மையுள்ள மேற்கத்திய விளையாட்டுக்களிற் பலவற்றைக் குறைத்து இவற்றைத் திரும்பவும் நமது சமுதாயத்தில் புகுத்தினுல் மகிழ்ச்சியும் பலனும் அடையலாம்.



25-11-70ல் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய மகிழ்ச்சியினுல் போலும் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைசேர்ந்த அமிர்தசொரூபன் செல்வநாயகம் ஆனந்த சொரூபனுக இங்கு காட்சியளிக்கிறுர்.

## குறும்புச் சுடர்

தயாரிப்பு: குணம்

# சர்வரோக நிவாரணி

## வேத காலம் முதல் இருந்து வரும் அரிய பூண்டு வெங்காயம்!

பழையகாலம் தொட்டே வெங்காயத்தின் குண தோஷங்களை நம்மவர்கள் அறிந்திருக்கிறுர்கள். பழைய சமஸ்கிருத நூல்களில் வெங்காயத்துக்கு 'ப்லாண்டு' என்ற சொல் வழங்குகிறது. புராதன எகிப்து நூல்களிலும் வெங்காயத்தின் தன்மைகளை விவரித்திருக்கிறுர்கள்.

### பாலைவனத்து அருமருந்து

பாலைவன தாகத்துக்குஅருமருந்து வெங்காயம். கோடை வெப்பம் காரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்குமே வெங்காயத்தை அரபு நாட்டினர் பயன்படுத்துகிறுர்கள். அராபிய அழகிகள் முகப் பொலிவு மிளிர இதைச் சாராயம் அல்லது கள்ளில் வேகவைத்துச் சாப்பிடுகிறுர்கள். அந்த நாட்டு கிராமப்புறங்களில் பல வியாதிகள்- சருமநோய், காதுவலி, வயிற்றுக்கோளாறு ஆகியவை குணமாக வெங்காயச்சாறு பயன்படுகிறது.

இந்தியாவிலும் நாட்டு வைத்தியர்கள் இந்த வைத்திய முறையைக் கையாண்டு வந்தார்கள். 1927-ம் ஆண்டில் பம்பாய் நட்காணி அன்ட் கம்பெனியார் வெளியிட்ட இந்திய மருத்துவப் பொருளகராதியில் வெங்காயத்தின் பலவகை மருத்துவப் பயன்களைத் தந்திருக்கிறுர்கள் ஜீவசத்துக்கள் நிறைந்தது இந்த வெங்காயம்.

### காசநோய்க்கு அருமருந்து

இத்தாலிய டாக்டர்கள் ஆராய்ந்து கண்ட முடிவின்படி காசநோய்க்கு அருமருந்து வெங்காயம். ரஷ்ய டாக்டர்கள், வெங்காயத்தில் நோய்க் கிருமிநாசினி ஆற்றல் இருப்பதாகக் கண்டிருக்கிறுர்கள். பச்சையாகக் குதப்பித் தின்றுல் பல்லில் இருக்கக்கூடிய கேடுதரும் பாக்டீரியகிருமிகளை அழிக்க வல்லது வெங்காயம். கொடிய நாற்றத்துடன் மூச்சுவிடுவதைத் தவிர்க்கவும் வெங்காயம் உதவும்.

டாக்டர்

- என். விச்வாஸ் -

### இதய நோய் தீர்க்கும்

பிரிட்டனிலுள்ள ராயல் விக்டோரியா இன்ஃபர்மரி நிறுவனம் ஆராய்ந்து வெளியிட்ட முடிவின்படி தினமும் காலையில் சிற்றுண்டியுடன் வேகவைத்த வெங்காயத்தையும் சேர்த்துவந்தால் இதய நோய் வராமல் தடுக்கலாம் எனத் தெரிகிறது.

### நூல்களில் வெங்காய மகிமை

ஆயுர்வேத நூல்களில் வெங்காயத்தின் குணதோஷங்களை ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறுர்கள் 'ப்ளாண்டு' கபத்தை வளர்க்கும். வாயுவைக் சமனப்படுத்தும். உணவோடு உட்கொண்டால் ஊட்டம் அளிக்கவும் ஆரோக்கியத்துக்கு உதவவும் சுவை கூட்டவும் வல்லது இலகுவில் ஜீரணம் ஆகாது''

(சரகஸம்ஹிதா 27—172

'வெங்காயம் தலைக்கும் இதயத்துக்கும் சக்தி அளிக்கும். மயிர் கொட்டுவது, நரை விழுவது, தலை வழுக்கை ஆகியவற்றைத் தடுக்கும், இரத்த விருத்தி உண்டாக்கும். எண்ணெய்ச்சத்து உடையது. ஜீரணசக்தி உண்டாக்கும். உடலின் வெம்மையைத் தணிக்கும் எலும்புகளுக்கு வலிமைதரும், மூட்டுக்களைத் திடப்படுத்தும், கேசத்தை வளர்க்கும். இரத்த சுத்தி செய்யும், குஷ்டம், குன்மம், மேக நீர் வியாதி, கபக்கட்டு, வாத ரோகம், வலிப்புநோய், மூலரோகம், ஜலதோஷம், தொற்று நோய்-இவற்றைச் சமனப்படுத்த வல்ல ரசாயனமாகும் வெங்காயம்.''

(அஷ்டாங்கஹ்ருதயம்)

## உப்பு அதிகரித்தால்

எப் பலகாரத்துக்கோ, பட்சணத்துக்கோ உப்பு அதிகமாகச் சேர்த்துவிட்டால் என்ன செய்வது? தண்ணீர் அல்லது பாலை ஊற்றிச் சரிப்படுத்திவிடுவாதா? சிலர் புளிச் சாற்றையே ஊற்றுவது வழக்கமாகிவிட்டது. இனி அதுபோல் செய்யாமல் சர்க்கரை கொஞ்சம் சேர்த்துவிட்டால் அது உப்பைத் தின்றுவிடும். சர்க்கரைக்கு உப்பைத்தின்ன வல்ல சக்தியுண்டு.

## திருவரு ..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நன்கு வருணித்துக் காட்டுகின்றது. அது வருமாறு:-

'வண்ணார்பண்ணையிலுள்ள த. இராகவப்பிள்ளை, கு. செல்வநாயகம் பிள்ளை என்னுமிருவராலே கட்டுவிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் தெற்கு வீதி மடத்திலே, பவவைகாசி மீ 20-ந் திகதி திங்கட்கிழமை மூலநட்சத்திரத்திலே, திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் குருபூசையும், அக்கோயில் வசந்த மண்டபத்திலே பிரசங்கமுஞ் செய்யப்பட்டன'.

'கந்தசுவாமிகோயிற் றிருவிழாக் சமீபித்தபடியால், தேவாரத்திருக் கூட்டச் சிறப்பையும், தேவாரம்முதலியவை திருவிழாக் காலத்திலே சுவாமிக்குப் பின்னுக ஓதுவதாற் சனங்களுக்குண்டாகும் கடவுட் பத்தியையும். இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் ஓதுவார் சிலரை அழைப்பித்து, திருவிழாக் காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்குவீதி மடத்திலே புண்ணியவான்கள்சிலரைக்கொண்டு மாகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங் கொண்டருளும்பொழுது. சுவாமிக்குப் பின்னுக அவர்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக்கொண்டுவந்தார். இவர்கள் தமிழ்வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக் கண்ட பிராமணர், தாங்களும் வந்து சுவாமிக்குப்பின்னுக வேதம் ஓதுவாராயினர்கள். அவரும் விபூதி உத்தூளனஞ்செய்து, திரிபுண்டரந்தரித்துத் தலையிலே சிரமாலையும், கழுத்திலேகண்டிகையும், கையிலே பௌத்திரமுந் தரித்து யாவருக்கும் பத்தியை விளைக்கத் தக்க சிவவேடப் பொலிவோடு திருக்கூட்டத் தலைவராய் நின்றுர். அத்திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் 16000 திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்புக்கொப்பிடலாம்.

3 வருடத்தின்பின் நூற்றுண்டுவிழா வெகு சிறப்பாக இங்கே நிகழும். இந்த இடம் அழகிய கட்டிடங்கள் அமைந்ததாய் குருகுல வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள், புராண படன வகுப்புக்கள், சைவப் பிரசாரப்பயிற்சி வகுப்புக்கள் கொண்டதாய் மிளிருமென்பது பூரணநம்பிக்கை அப்பொழுது நாவலர் பெருமானின்ஆத்மசக்தி மாகாசாந்தியெய்தி நாவலர் பணிச் சபைக்கு நல்லாசி வழங்கும். என்றும் இளையோனை திருமுருகன் திருவருள் கைகூடுவதாக.

[நாவலர் குருபூசை நல்லை நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றபோது பண்டிதமணி சி, கணபதிப் பிள்ளை நிகழ்த்திய உரை].

## சமநீதி வழங்கும் ஆறு

சுவிட்சர்லாந்து ஒரு அமைதியான நாடு. அமைதியாக வாழ்ந்து வந்திருக்கும் வாழவிரும்பும் நாடு. இரு உலகப் போர்களிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்று நடுநிலை வகித்தநாடு அந்த நாட்டின் மக்களிடம் மாத்திரம் இநதப் பண்பு இருப்பதாக எண்ணவேண்டாம், அங்கு பாயும் ஓர்ஆறு கூட இந்தப்பண்பை சமநீதிக்கொள்கையைக் கடைப்பிடிக்கிறது நோயான் என்னும் ஆறு இரு திக்குகளில் பாய்கிறது. பாம்பாப்பின்ஸ் என்னும் நகரின் அருகே அந்த ஆறு இரு சிறு பிரிவுகளாகப் பிரிகிறது. அவற்றில் ஒன்று தென்திக்கில் சென்று மத்தியதரைக்கடலில் கலக்கிறது. மற்றென்று வட திசையில் திரும்பி வட கடலைத் தழுவுகிறது. அதன் சமநீதிப் பண்பை என்னென்பது!

## பார்த்தாவின் பாததூளி

பெண் மணிகளுக்குப் பர்த்தாவின் பாததூளி மிகவும் உயர்வுடையது. புருஷனைப் பின்பற்றுதல் பெண்களின் உத்தமமான தர்மம். புருஷரைவிடப் பெண்களுக்குத்தான் இதனுல் அநுகூலங்கள் அதிகம். அவர்களுக்குக் கண்ணுக்குத் தெரிந்த தெய்வமாகப் பர்த்தா இருக்கிறுர். பர்த்தாவின் உருவத்தில் அவர்கள் ஸ்வாமியைத் தரிசிக்கிறுர்கள். 'பசுமாட்டில் ஸ்வாமியைத் தியானம்செய்' என்பார்கள். கோபூஜை செய்வது மாட்டுக்காக அல்ல. அதற்குள்ளே ஈசுவரன் இருப்பதாக ஐதிகம். அதனுல், மாட்டுக்குக்கொம்பு கோணலாக இருந்தாலும் கருப்பாக இருந்தாலும் நாம் அதைக்குறையுள்ளதாக எண்ணுவதில்லை. பூஜை செய்கிறேம். இதுபோல் ஸ்திரீகளுக்குப் பர்த்தாவினிடத்தில் ஈசுவரன் இருக்கிறுர். ஆகையால், ஸ்திரீகள் பர்த்தாவின் குணத்தை- குணம் நல்லதா கெட்டதா அவன் அழகுள்ளவனுக இல்லையா என்று பாராட்டாமல் சேவை செய்ய வேண்டும். இதுபோல் சிஷ்யர்களுக்குக் குருவினிடத்தில் ஈசுவரன் இருக்கிறுன்.

— ஆச்சார்ய ஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஐந்து வருடங்களுக்குமுன் தான் ஒரு இலக்கியப் பித்தனாக இருந்தேன். இப்போது எனக்கு வயது நாற்பது. பதினெட்டு வயதிலிருந்தே இலக்கியத்துறையில் ஆர்வமூற்றேன்.

இலக்கியக் கலையின் அறிவு ஒரு கத்தியைப் போன்றது. கூர்மை அதிகம். மழுங்கினாலும் பயன்படாது. அதிகக் கூர்மை பெற்றிருந்தாலும் மழுங்கிவிடும். நடு நிலையாக இருந்தால்தான் அது பயனளிக்கும். அப்போது என் அறிவு அதிக கூர்மையோடிருந்தது. அதே பைத்தியமாக அலைந்தேன். பல பத்திரிகைகளுக்கும் எழுதி வந்தேன். மூளை ஏதாவது ஒரு துறையில் முக்கிய பங்கெடுத்து உழைக்கின்றபோது அதனால் இயக்கப்படுகின்ற மனம் வேறு எதிலும் நாட்டம் கொள்வதில்லை. அதனால் அப்பொழுது குடும்ப ஆசைகள் தூரத்தே எட்டி நடைபோட்டன. பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காகவே சரோசாவை மணம் செய்தேன். இளமைப் பூரிப்பில் துலங்கிய சரோஜா என்னிடமிருந்து அடிக்கடி எதையோ எதிர்பார்த்தாள். நானோ எதையோ எண்ணிப் பறந்து கொண்டிருந்தேன்.

எதையும் நுணுக்கமாக அவதானித்து ஆராய்ந்தால் தானே அங்கு 'கலை' ஒரு வடிவம் பெறுகிறது. நானும் சரோஜாவும் வீதியிற் போகும்போதும் அங்கு நிகழும் ஒவ்வொன்றையும் அவதானித்து அசையாமல் நிற்பேன் அழகு—அது எங்கே தோன்றியபோதும் பார்த்து லயித்து நிற்பேன். இதனால் நாளடைவில் ஊணை மறந்தேன். உண்மை மனைவி சரோஜாவின் அன்பையும் அவளுக்குத் தரவேண்டிய இன்ப வாழ்வையும் மறந்தேன். என்னுடையபோக்கு சரோசாவுக்குச் சந்தேகத்தையூட்டியது. கூர்மை மழுங்கிய கத்தியைப் போன்றவள் அவள். என் கலையுள்ளம் அவளுக்குப் புரியவில்லை அதை எப்படி விளங்கவைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. நான் எங்கோ தவறான பாதையில் போய்க் கொண்டிருப்பதாகவும் அதனாலேதான் தன்னுடன் முழு அன்புகாட்டி என்னால் நடந்துகொள்ள முடிவதில்லை என்றும் அவள் எண்ணினாள் ஏங்கினாள். மனம் உடைந்து ஒருநாள் அவளாகவே தற்கொலை செய்து கொண்டாள். அதன்பிறகு சிலகாலம், தனிச்சியம் நடத்தினேன். பிறகு ஏதோ ஒரு புதுமையைத்தேடி என் உள்ளமும் உடலும் அலைந்தன. விதவையான பொன்னம்மாவை —கொஞ்சநேரத்திற்கு முன்னால் இங்கு வந்து போனாளே அவளை என் வாழ்க்கையில் இணைத்தேன்.

வயது வளர்ந்தவள் ! அதனால் அறிவும் வளர்ந்திருக்கும். என் வாழ்க்கைக்கு இடைஞ்சல் இராது என்று எண்ணினேன். மூத்திய மரத்திலும் சொத்தை இருக்கும் என்பதைப் பின்னால் உணர்ந்தேன்.

அன்னியன் ஒருவனுடன் அவள் கொண்டிருந்த தொடர்புறவை அறிந்தபோது என்மனம் கொதித்துக் குமுறியது. அன்றே அவளைவிட்டுப் பிரிந்தேன். என் வாழ்க்கையைச் சீரழித்த இலக்கிய அறிவுக்கும் அத்துடன் முழுக்குப் போட்டேன். பகலெல்லாம் உழைத்தவனின் களைப்பு வெய்யில் மங்கி மயங்கத்தான் தெரிகின்றது. எனக்கும் வயது முதிர முதிரத்தான் சென்றுபோனவாழ்க்கையின் அலுப்புத் தெரிந்தது. இறுதிக் கட்டத்திலே இறைவனைப் பற்றிய எண்ணம் எனக்கு எழுந்தது.

# சிறுகதை

ஊரைவிட்டே புறப்பட்டு கோவில்கள்தோறும்சென்று தொண்டாற்றி வருகின்றேன். இதிலே காணும் இன்பம், இதுவரையும் நான் கண்டதில்லை.

0 0 0

ரயில் ஓடிக்கொண்டிருந்தாற்போல் தொடர்ச்சியாகச் சொல்லிமுடித்த பரதேசி ஒரு பெருமூச்சு விட்டார். அவர் முகத் தோற்றத்தில் எதுவித வித்தியாசமும் தென்படவில்லை, பத்திரிகைகளைப் புரட்டினார்.

'என்ன தம்பி நாலைந்து நாள் பத்திரிகைகளும் ஒன்றாக இருக்கின்றனவே' என்றார்.

'ஓம் வழக்கமாக எனக்குப் பத்திரிகை தருபவன் பல தொல்லைகள் காரணமாக நான் போகாததால் எல்லாவற்றையும் சேர்த்துவைத்து இன்று கொடுத்தான்' என்ற நான் கோவில் உள் வாசலைப் பார்த்தேன். முருகக் கடவுளின் உருவம் அமைந்த திரைச்சீலை தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு அறிவாளியின் அனுபவங்களைச் சேர்த்து எங்களுக்குக் கொடுத்த கடவுளை எண்ணி வியந்தேன்; 'இந்தப் பெண் ஏன் இப்படி ஆனாள்' என்று அவரிடம் கேட்டபோது.

'அப்பம் என்றால் பிட்டுக் காட்டவேண்டுமா மக்கள்? நல்ல முறையில் வாழ்ந்தால் ஏன் இப்படி வரப்போகிறது. இளமைத் துடிப்பும் உடலின் மினுமினுப்பும் இருக்கும்வரைதான் குருத்தோலை. அது குறைந்து போனால் யாருக்கும் இந்தக் கதிதான்' என்றுகூறிமௌனமாகச் சிரித்தார்.

இதன்பின் சற்று நேரத்துக்குள்ளாக நானும் விக்னுவும் அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டோம். வழி நெடுகிலும் என் உள்ளம் ஏனோ அந்த மனிதரைப் பற்றியே வட்டமிட்டது. அழுக்குப் படிந்த சிப்பியும் அது அளிக்கும் முத்துமே என் நினைவில் தோன்றின.

(யாவும் கற்பனை)

## தமிழ்நாட்டுக் கோவில்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள முடியவில்லை, மறந்தேபோய்விட்டார்கள். எங்கேயோ எந்த ஊரிலோ இருந்து புதுசாக வந்திருக்கும் ஆளைப் பார்ப்பது போலப் பார்க்கிறார்கள். இந்நிலை கிராமமக்கள் மத்தியில் ஒரு வகையில் எனக்குச் சௌகரியமாகக்கூட இருந்தது என்றே சொல்லலாம். ஊர் நடவடிக்கைகளை, புதிய மாறுதல்களை, காலப் பிரவாகத்தின் சுழியோட்டங்களினால் தோன்றியிருக்கும் அதிசயங்களை இன்னமும் என் நினைவில் உயிர் துடிக்கும் இந்தப் பழைய கிராமத்தில் பிறர் நம்மை அவதானிக்காமலே மறைந்திருந்து பார்க்கலாமல்லவா? (தொடரும்





## ஆரம்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வாவது முக்கியம்


இன்றைய குழந்தைகளுக்காக விசேஷமாகத் தயாரிக்கப்படுவதும் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படும் நவீன பாலுணவுதான் பெலார்கன்
நன்கு சமன் படுத்தப்பட்டது, ஜீரணிக்கக் கூடியது. அதிகப்படியான வைடமின்கள் கொண்டதுமான பெலார்கன் குழந்தைக்கு முக்கியமான ஆரோக்கிய வாழ்வை ஆரம்பத்திலேயே கொடுக்கும். பிறந்த நாள் முதல் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர உதவுவதுடன் குழந்தைக்கு தொற்று நோய் பிடிக்காமலும் பாதுகாக்கிறது பெலார்கன். அதனால்தான் பெலார்கன் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது.

# பெலார்கன்

ஆரோக்கியமான குழந்தைகளை மேலும் ஆரோக்கியமாக்குகிறது.

NESTLÉ

ZENITH




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் நடக்கக் கூடிய சம்பவங்களின் தொகுப்பு!

நாடக விமர்சனம்:

## வெண்ணிலா

கவின்கலை மன்றம் அளித்த பி. எஸ். ராமச்சந்திரனின் 'வெண்ணிலா' என்ற சமூக நாடகம் ஹவ்லக் டவுன் லும்பிணி அரங்கில் மேடையேறியது.

ராஜு, வெண்ணிலா தம்பதியினர் இன்பகரமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ராஜுவும் அவனது நண்பன் பாலுவும் தெருவீதியில் சென்றுகொண்டிருந்த சமயம் குடிவெறியில் விழுந்துகிடந்த பழைய நண்பன் விக்டரை ராஜுவின் வீட்டிற்குத் தூக்கி வருகின்றனர்.

தான்கெட்டழிந்து போவதற்கு யார் காரணமாக இருந்தாளோ. அதே வெண்ணிலாவை ராஜுவின் இல்லக்கிழத்தியாகச் சந்திக்கிறான் விக்டர்.

தங்கள் இன்ப வாழ்க்கைக்கு இடையூறுக் வரவேண்டாமென விக்டரிடம் மன்றாடுகின்றாள் வெண்ணிலா. அவனும் அவர்களது வாழ்க்கைப்படகில் துளை விழுந்துவிடத்தான் காரணமாக இருந்துவிடக் கூடாதென்பதற்காக இனிமேல் வெண்ணிலாவைச் சந்திப்பதில்லையென்ற திடமான முடிவோடு வெளியேறுகின்றான், ஆனால் இவர்களது சம்பாஷணையை மறைந்திருந்து கேட்ட பாலு, வெண்ணிலா களங்கமுற்றவள்என ராஜுவிடம் கோள்மூட்டி விடுகிறான். அதனால் அக்குடும்பத்தில் சூறுவளி சுழன்றடிக்க ஆரம்பிக்கிறது.

ஆத்திரத்தில் அறிவிழந்த ராஜு வெண்ணிலாவை நன்கு அடித்துவிட்டு விக்டரைத் தேடி ஓடுகின்றான். டாக்டர் வீட்டில் விக்டரைச் சந்திக்கிறான். அவர்களிருவருக்குமிடையில் பலத்த வாக்குவாதம் நிகழ்கின்றது. கைகலப்பு நேர்ந்துவிடாமலிருக்க இடையில் குறுக்கிடுகின்றார் டாக்டர். அவரது அறிவுரைகளும் விக்டரின் கூற்றுக்களும்ராஜுவின் ஆத்திரத்தை நீக்கி விடுகின்றன. வீட்டிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பைக் கேட்டு எல்லோரும் அங்கு விரைகின்றனர்...

தான் களங்கமில்லாதவள் என்பதைத் தன் இறப்பின் மூலம்தான் வெளிப்படுத்த முடியும் என எண்ணிய வெண்ணிலா தன் வாழ்க்கைப் பயணத்திற்கே முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றாள். கதறிக் கலங்குகின்றான் ராஜு. அவனால் வேறு என்ன செய்யமுடியும்?

வீண் சந்தேகங்களும் அவசர புத்தியும் கொண்டபலர் இன்றும் நம்மிடையே வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ராஜுவின் வாழ்க்கை ஒரு படிப்பினையாக அமையட்டும்.

வாழ்க்கையில் நடக்கக்கூடிய பல சம்பவங்களை அழகாகச் சித்தரித்துக் காட்டியிருந்தார் கதாசிரியர் பி. எஸ். ராமச்சந்திரன்.

விக்டராகத் தோன்றிய ஏ. ராஜபாண்டியன், வேலைக்கார முத்தையாவாகத் தோன்றிய எம். செல்வராஜா ஆகியோர் மிகவும் சிறப்பாக நடித்தனர்.

மற்றும் சுசில்குமார், க. கார்த்திகேசு, கே. கே. சுந்தரராஜா. க. ஜெகநாதன், எம். எச். எம் சாபி ஆகியோரும் இந் நாடகத்தில் நடித்தார்கள்.

வெண்ணிலா நாடகத்தின் போது ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற ஒரேயொருவர் உண்டென்றால் அவர்தான் செல்வி ஜெயா. வெண்ணிலா நாடகத்தின் தரம் உயர்வதற்குக் காரணமாக அமைந்தவரும் அவரே.


வெண்ணிலாவாகத் தோன்றி தனது சிறந்த நடிப்பாற்றலை வெளிக்கொணர்ந்த செல்வி ஜெயாவிடம் சிறு குறை காணப்பட்டது. சில இடங்களில் அவர் ஏனோ கஷ்டப்பட்டுப் பேசியதைப்போலத் தோன்றியது. நாடகம் நடிக்கின்றேன் என்ற உணர்விலின்றும் விடுபட்டு இயற்கையோடிணைந்து அவர் நடித்தால் ஒரு சிறந்த நட்சத்திரமாக மிளிருவார் என்பதில் சந்தேகமில்லை

குலசேனகமகேயின் ஒப்பனை, டி. எஸ். சமாத் அவர்களின் காட்சி அமைப்பு ஆகியன நன்ருக இருந்தன.

நாடகமன்றங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவன்— தமிழ் நாடகக்கலை வளரவேண்டுமென ஆவலுடையவன் என்ற காரணத்தினால் இந்நாடகத்தில் காணப்பட்ட ஒருசில தவறுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமென எனக்குத் தோன்றுகிறது.

தன் மேல் சந்தேகம் கொண்ட கணவனுக்கு, தான் முன்பு விக்டரைச் சந்தித்த சம்பவத்தை எடுத்து

(14-ம் பக்கம் பார்க்க)



நாடறிந்த நல்ல கலைஞர் சின்னமணி நா. கணபதிப்பிள்ளை தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார். வில்லிசையிலும் நாடகத்துறையிலும் சக்கைபோடு போட்ட கலைஞர் கணபதிப்பிள்ளை அச்சுவேலி கிராமசபைத் தேர்தலில் 9-ம் வட்டாரத்துக்குப் போட்டியிடுகிறார்.

தமிழகத்தில் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், புரட்சி நடிகர்எம் ஜி ராமச்சந்திரன் ஆகியோரைப்போன்று இவரும் கலைத்துறையோடு நின்றுவிடாது தேர்தல்களத்திலும் குதித்து மக்களுக்குச் சேவைசெய்ப முன்வந்திருக்கிறார். நல்லவர்; சமூகத்திடையே சமரசத்தை ஏற்படுத்த துடியாய்த் துடிப்பவர். சமூகத் தொண்டரான இவர் கலைவாணர் வில்லிசைக்குழுமூலம் வில்லிசையில் புதுமை செய்பவர்.

கலைத்துறை எப்படி இவர் சேவையைப் பெற்றதோ அதேபோன்று பொதுமக்களும் பெறுவார்கள்.

— ஈ. கே. ஆர்.



[திருநெல்வேலி கலைக்கோவில் நாட்டிய நிறுவன மாணவி செல்வி பவளராணி பரராஜசிங்கத்தின் சிங்கார அபிநயத் தோற்றம்.]

இலங்கையிலுள்ள சோவியத் தூதுவர் தலைமையில் திருநெல்வேலி கலைக்கோவில் நாட்டிய மன்றத்தினரின் நாட்டியவிழா அடுத்தமாதம் முதலாந் திகதி நடைபெறவுள்ளது. இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நாட்டியவிழாவில் கலைஞர் வேல் ஆனந்தனும் மாணவர் கோஷ்டியினரும் நாட்டிய நாடகம், அபிநயம் முதலானவற்றை நிகழ்த்துவர்.

உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தலைமை தாங்குவார்.

# நகைச்சுவை நடிகை மனோரமாவின் அனுபவம்

நான் எந்தப் படத்தையும் ஒரு தடவைக்கு மேல் நிச்சயம் பார்க்கமாட்டேன். அப்படிப் பார்த்தால் ரசிக்காது என்பதால் தான்! ஆனால் வஹிதா ரஹ்மான் நடித்த 'நீல் கமல்' படத்தை இரண்டு தடவை பார்த்தேன். வஹிதா அந்தப் படத்தில் பிரமாதமாக நடித்துள்ளார். ஒவ்வொரு காட்சியிலும் அவர் நடிப்பை ரசித்துப் பார்த்தேன். நான் ஒரு முறை இலங்கைக்குப் பாவதற்காக ஏர்போர்ட் போயிருந்தேன் அப்போது வஹிதா பம்பாயிலிருந்து வந்திருந்தார். அவருக்கு நன்ருகத் தமிழ் தெரியும். அவரை எனக்கு அறிமுகமில்லை. என்ருலும் நான் அவர் ரசிகை ஆயிற்றே! அதனால் வலுவில் சென்று அறிமுகப்படுத்திக்கொண்டேன். நான் 'நீல் கமல்' படத்தைப்பற்றி சொன்னவுடன் 'நான்கூட நீங்கள் நடித்த 'தில்லானு மோகனும்பாள்' பார்த்தேன். நல்லா நடிச்சிருக்கீங்க' என்று என்னைப் பாராட்டினர் வஹிதா. நான் அவரைப் பாராட்டப்போக அவரோ என்னைப் பாராட்டுகிருர். எனவே அன்று எனக்கு இரட்டை மகிழ்ச்சி ஏற்பட்டதில் வியப்பில்லை!

**பயம்**

வேட்டைக்காரன் படத்தில் நான் புலியைக் கண்டு நடுங்குவதாக ஒரு காட்சி வருகிறது. அது வெறும் நடிப்பல்ல. உண்மையாகவே எனக்கு மிருகங்களுடன் நடிக்கப் பயம்தான்! குறிப்பாக குதிரை என்ருல் எனக்கு அலர்ஜி!

காரணம்?

யானைப்பாகன் ஷூட்டிங் ஊட்டியில் நடைபெற்றபோது குதிரைமீது சவாரி செய்துகொண்டிருந்த நான் சறுக்கி விழுந்து கையில் அடிபட்டுக்கொண்டேன். தொடர்ந்து மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்துகொண்டேன். அதிலிருந்து சாதாரண குதிரையைக் கண்டால்கூட எனக்குப் பயமாகப்போய்விட்டது.

சமீபத்தில் அதே ஊட்டியில் 'டில்லி மாப்பிள்ளை' படத்திற்காக என்னைக் குதிரையில் ஏறச் சொன்னர்

(14- பக்கம் பார்க்க)

# கலை அரங்கம்

நாடக விமர்சனம்

## 'இன்னல் காத்த அண்ணல்!'

நாடகக் கலை உலகுக்குப் பெண்களும் பெருமை கூட்ட முடியும் என்ற உண்மையை அண்மையில் ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி மாணவிகள் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றிய 'இன்னல் காத்த அண்ணல்' எனும் புராண நாடகத்தைப் பார்த்த போது உணர்ந்தேன். இந் நாடகத்தின் கதை, வசன நட்டுவாங்கப் பொறுப்புக்களைச் சைவப்புலவர் செல்லத்துரை ஏற்றிருந்தார்.

வால்மீகி இராமாயணத்தைக் கதையாகக் கொண்ட இந்நாடகத்தின் கதைப் போக்கினை இரசிக மகாஜனங்கள் ஊகிக்க முடியாது திணறியதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். தவிர வசனத் தெளிவின்மையும், கத்திப் பேசவேண்டும், என்ற இராமாயண காலக் கொள்கையும் ரசிகர்களைப் பழி வாங்கி விட்டன.

புதுமுகங்களைத் துணிந்து மேடையில் நடமாடவிட்ட நட்டுவாங்கத்தாரைத் தைரியமாகப் பாராட்டலாம்.

இராமராக நடித்தவரின் எழிலுக்கும் வேஷப் பொருத்தத்துக்கும் சீதையாக நடித்தவரின் வேஷப்பொருத்தம் ஈடுகொடுக்க முடியவில்லை. மண்டோதரியாக நடித்தவர் அழுவதற்காகவே பிறந்தவர். சூர்ப்பனகையின் மூக்கு அறுபடும் காட்சி அபாரம்! (உண்மையாகவே அறுந்து விட்டதா என்ன?)

**மேடையமைப்பு**

மேடையமைப்புப் பல இடங்களில் சுடர் விட்டது. சூரிய உதயக் காட்சியும், முனிவர்கள் தவமியற்றும் பாஞ்சாலைக் காட்சியும் குறிப்பிடத்தக்கவை. காட்சியமைப்பினை திரு. சிவப்பிரகாசம், கணேஷ் பஞ்சு, யோகா ஆகியோர் கவனித்திருந்தனர்

மௌத்தத்தில் துணிகரமான முயற்சி

வளருவதற்கு நிறைய வழியிருக்கிறது!

— கணேஷ்

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

(13-பக்கத் தொடர்ச்சி)

விளக்குகின்றுள் வெண்ணிலா. இது சினிமாப்பணியிலான திருப்புமுனைக்காட்சியொன்றின்மூலம் காட்டப்பட்டது.

வெண்ணிலா விக்ரைச் சந்தித்தாள். அதனைத்தான் அவள் கணவனிடம் எடுத்துக் கூறமுடியும். அவள் விக்டரைச் சந்தப்பதற்கு முன்பதாக அவனும் பாலுவும் சந்தித்துப் பேசிக்கொண்டவைகளை அவள் கண்டோ கேட்டோ இருக்கமுடியாது. ஆகவே அவர்கள்சந்திப்பைக் கணவனிடம் எடுத்துக்கூறவும் முடியாது. இதிலிருந்து அந்தத் திருப்புமுனைக் காட்சியின்போது பாலு விக்டரைச் சந்தித்த கட்டம் தவறுனது. தவிர்த்திருக்கப் பட்டிருக்கலாம் எனச்சொல்லத் தோன்றுகிறது.

பல நாடகங்களில் அனுபவம் பெற்றவரான திரு. ஜே. பி. றொபட் இந் நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார்.

நாடகத்தில் காணப்பட்ட ஒரு சில தவறுகளைத் தவிர்த்திருந்தால் கவின்கலை மன்றத்தினரின் வெண்ணிலா சிறந்ததோர் படைப்பாக உருவாகியிருப்பாள்!

—வ. அ. தங்கவேலாயுதம்

## நகைச்சுவை

(13-பக்கத் தொடர்ச்சி)

கள். அந்தக் குதிரை பார்வைக்கு கழுதைபோலத்தான் சாதுவாக இருந்தது. இருந்தாலும் முன்னர் எங்கு கைமுறிந்ததோ அந்த வீட்டியில். அதைப்போலவே ஒரு குதிரையில் படப்பிடிப்பு என்றதும் நான் கலவரமடைந்ததில் ஒன்றும் வியப்பில்லை. நான் நினைத்தபடியே அந்தக் குதிரை வேகமாக ஓட ஆரம்பித்தது. நான் 'ஐயோ ஐயோ' என்று சப்தம் போட்டு ஒருவழியாகக் கீழே இறங்கியபோதுதான் எனக்கு உயிர் வந்தது.

### பக்தி

நான் எல்லாக் கோயிலுக்கும் போவேன். இந்தக் கடவுளைத்தான் கும்பிடுவேன் என்று கிடையாது. கடவுள் ஒருவர்தான் அவரை அவரவர்கள் தங்கள் வடிவத்தில் கண்டுகளித்தார்கள் என்பது என் முடிவு. திருமலை தென்குமரி படப்பிடிப்புக்கு போனதன்மூலம் பல முக்கிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதில்எனக்குப் பரம திருப்தி.

## நானிலம்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ராய முதலியார். சரவண முத்துப் புலவர் முதலிய கலைக்கடல்களில் ஆறுமுகனுகிய கலைமேகம் பருகிப் பருகிச் செந்தமிழும் வேறு மொழிகளும் ஆகிய அமிழ்து நீரைப் பண்படச் சொரிந்தது. இக்காலம் நாவலர் திருவுருவை நல்லூரின் தென்பால் பாருங்கள்.

### இலக்கிய வளம்

கந்தபுராணம், பெரிய புராணம், கோவிற்புராணம் திருவிளையாடற் புராணம், முதலியன பார்க்க.

### வசனத்திறமை

பெரியபுராண சூசனம், உபோற்கதம் முதலியன காட்டும் சைவதூஷ பரிகாரம் முதலியன சைவமதத் தாபன நூல்களாகும். தொல்காப்பியம், சேனுவரையம், இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம் முதலிய இலக்கணத் திறமை துலக்கும். திருக்குறள், சைவசமயநெறி முதலியவை ஆராயச் சித்தத் துவ வித்தகர் என்பது புலப்படுத்தும். இத்தகைய உத்தம சித்தவிடுத்தி நூல்களைக் கற்று மேன்மையடைய தமிழ் அன்பர்கள் முன்வருவார்களாக.

# உள்ளத் தெளிவும், ஆனந்தமும் தருவது காயத்திரி மந்திரம்

**சத்திய சாயிபாபாவின் பிறந்ததினம் 23-11-70:ல் பல இடங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. புனித ஆத்மாவின் ஆனந்தத்திற்கும் மகிழ்விற்கும் காரணமாய் இருப்பது காயத்திரி மந்திரம். முக்குணவசத்தால் முனிவரும் திரிவர் என்பது பெரியோர் வாக்கு அம்முக்குணங்களைக் களைந்து உள்ளத்தில் தெளிவையும் ஆனந்தத்தையும் மகிழ்வையும் தரும் காயத்திரி மந்திரத்தை அதன் ஆழமான உட்பொருளை உணர்ந்து முன்னேரமும் செய்து வருமாறு சத்தியசாயிபாபா இக்கட்டுரையில் அறிவுறுத்துகிறார்.**

உண்மையில் சந்தியாஎன்றால் என்ன? 'சாம்' என்றால் நல்லது. 'த்யான்' என்பதிலிருந்து த்யா வந்தது. ஆகவே சந்தியா என்பது சரியான தியானம் அல்லது கடவுள்மீது உள்ளன்புவைத்துச் செய்யும் தியானத்தைக் குறிக்கும். கடவுள் மீது தன் கவனத்தை ஒருமுகமாகச் செலுத்துதல் என்பதே இதன் பொருளாகும். மனத்தின் செயல்களை அடக்கி கடவுள்மீது மனத்தைச் செலுத்தவேண்டும். இவ்விதசெயலில்ஒருவன்வெற்றி பெற்றால் முக்குணங்களிலிருந்து (சாத்வீகம், ராஜசம், தாமதம்) அவன் தப்பிக்கொள்வான். ஒருவன் தன்னிடத்தில் எழும்பும் இயற்கைத் தூண்டுதல்களைச் சரியான வழியில் செலுத்தி இறைவனை வணங்க முயற்சிக்க வேண்டும். இதுவே மனிதன் கடவுளை வணங்குவதில் முதல் செய்ய வேண்டிய கடமையாகும்.

இயற்கையின் நியதிப்படி, காலைப்பொழுதில் சாத்வீகக்குணமும், மத்தியானப் பொழுதில்ராஜசக் குணமும், அந்தி நேரமாகிய மாலையில் தாமதகுணமும் ஏற்படுகின்றது. உலகில் இருந்து கிடைக்கும் தாக்குதல்கள் அமுக்கங்களிலிருந்து சௌகர்யமான தூக்கம் கொண்டு அதிலிருந்துமனம் விழிப்பு அடைந்ததும். மனமானது தெளிவாகவும் அமைதியாகவும இருக்கிறது. இந்தக் காலைப் பொழுதே கடவுளைத் தியானிப்பதற்குரிய நேரமாகும். இந்தத் தியானத்தில் நிறைந்த பயன் கிடைக்கும். இதை எல்லோரும் அறிவார்கள். இதனாலேயே பிராதக சந்தியா விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விதமான பொருள் நிறைந்த தன்மைகளை அறியாததினால், இயந்திரப் போக்கில் சடங்குகளைச் செய்துவருகின்றனர். ஏனென்றால் நம் முன்னோர்கள் இதற்குரிய சட்டங்களை வகுத்துவிட்டனர். இவற்றினை உள்பொதிந்த ஆழமான கருத்துக்களை அறிந்தும் சந்தியாவந்தனத்தைச் செய்வதே மனிதனின் இரண்டாவது கடமையாகும்.

நாளாந்த வளர்ச்சியில் இயற்கையில் சக்திமிகுந்த ரஜோகுணம் மனிதனை இளகச்செய்துவிடுகிறது. நாளாந்த வேலையிலும் கடும் உழைப்பிலும் மனிதன் ஈடுபடுகிறான். அவன் மதிய உணவு உண்பதற்கு முன் திரும்பவும் கடவுளைத் தியானிக்கவேண்டும். தான் செய்யும் வேலையையும் அதனால் கிடைக்கும் பயனையும் கடவுளுக்கே அர்ப்பணம்செய்ய வேண்டும். இவ்விதமான நன்றியுடைய நினைவுகளுக்கும், பக்திச்செயல்களுக்கும் பின்பு அவன் தன் உணவை உட்கொள்ளலாம் மத்தியான வணக்கத்தில்பொருள் (மத்தியான்ஹிகம்) இதுவே. இவ்வித வணக்க முறையினால் ராஜச குணம் கட்டுப்படுத்தப்பட்டு தாமசகுணம் மேலெழுந்து நிற்கும். இந்நிலையை அடைவதே மனிதனின் மூன்றாவது கடமையாகும்.

இதன்பின் மனிதன் மூன்றாவது குணமாகிய தாமசத்தைப் பெற்றவனாய் இருக்கின்றான். மாலை வந்ததும் வீட்டுக்கு விரைந்து சென்று வயிறு நிறைய உண்டு நித்திரைக்குச் செல்கின்றான். ஆனால் அவனுக்காக இன்னொரு கடமை காத்திருக்கின்றது. உண்டு உறங்குவது சோம்பேறிகளின் வேலையாகும். இந்தக் குணங்களின் இழி தன்மைகளைத் தியானமூலம் நீக்குவதற்கு [illegible]த்தை எடுக்க வேண்டும். இதற்கு [illegible] படுவாரோடு சேர்ந்து இறைவனின் புகழ்சேர் குணங்களைப் பாடிப் பரவி, நல்ல குணங்களைப் பண்படுத்திக்கொள்ள வேண்டும் தங்களுடைய ஒழுக்கத்தை நல்ல செயல்களினுல் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே மாலை நேர சந்தியாவந்தனமாகும்.

### ஜீவன் முக்தர்கள்

ஆகவே நிறைந்த பயிற்சியினுல் மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். தியானத்தால் பெறும் ஆனந்தத்தாலும், உலக நிகழ்ச்சிகளை மறக்கும் மகிழ்ச்சியாலும் இந்தப் பயிற்சியைப் பெறவேண்டும். அப்படி நாங்கள் செய்துவந்தால் சுகமான தூக்கத்தினுல்பெறும் சௌகர்யத்தைவிட மேலான சுகத்தை நாம் பெற முடியும். இந்த ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் ஒருவர் உணரலாம். எல்லோராலும் உணரப்படலாம். இதனை நீங்கள் பகுத்தறிவைக்கொண்டு உணரலாம்.

இவ்வித தன்மைகளை அடைந்த மனிதன் உயர்ந்ததான சந்தியாவந்தனத்தை ஒரு நாளைக்கு மூன்று முறை செய்துவந்தால் அவன் எப்பொழுதும் பிரகாசமுடையவனுய் இருப்பான். அவன் விரும்புகின்ற எல்லாவற்றையும் அடைவான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், இவற்றிலிருந்து விடுபட்டவனுக இருப்பான். இவ்விதமானவர்களையே ஜீவன் முக்தர்கள் என்பர்.

இதை ஒருநாளாந்த செய்கையாகக் கருதாமல் கவனத்தோடு செய்துவர வேண்டும். இவ்வித செயல்களுக்குள் இருக்கும் ஆழமான கருத்தில் பொதிந்திருக்கும் உட்பொருளை அறிந்து. இச்செயல்கள் செய்யப்பட்டுவர வேண்டும், காயத்திரி மந்திரத்திலுள்ள உண்மைகளை ஒருவன் தெளிவாகப் பற்றிக்கொள்ள வேண்டும். ஆத்ம சொருபமாய் பிரகாசமாய் விளங்கும் உண்மைப்பொருளுடன் கலந்து ஒன்றுகவேண்டும். இவற்றின் உண்மைப் பொருளை விளங்காதவர்களே காயத்திரி மந்திரத்தைப் புறக்கணிக்கின்றனர்.

### காயத்திரி கருத்து

காயத்திரி என்ற சொல்லின் உண்மையானபொருள் என்ன? இன்றைய நாளில் இதன் பொருளை யாராவது அறிய முற்படுகின்றனரா? இந்தச் சொல் தெய்வமாகவோ சூத்திரமாகவோ கருத்தைத்தரும் காயத்திரி பிராணன், இந்திரியங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கிறது. இக்காயத்திரி மந்திரத்தைப் பாடுவோரை அது காக்கும். பூஜிப்பவர்களைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பவர்களைப் பாதுகாக்கும். இந்தத் தெய்வாம்சம் பொருந்திய மந்திரமே விஸ்வாமித்திரர்போன்ற ராஜரிஷிகளை பிரம்மரிஷிகளாக்கியது. வேதமாதா தன்னை வணங்குபவர்கள், வேண்டும் வரங்களையெல்லாம் ஈர்ந்தருளுவாள். இந்த வேதமாதாவை பிராமணர்கள், தர்மசூத்திரங்கள் ஆகியவற்றில் புகழ்ந்து கூறப்பட்டுள்ளனர். தர்ம சூத்திரங்கள், பிராமணங்கள் ஆகியவற்றை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்வீர்களானல் இதை நீங்கள் இலகுவில் அறிந்துகொள்வீர்கள்'

(நன்றி: பவர்ன்ஸ்ஜேர்னல்-தீபாவளிமலர்)

## — சத்திய சாயி பாபா —

# அப்பிள் அனுப..

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

'இன்றைக்கு எமது பயணம் படுதோல்வி. மூன்று பேர் வெளிக்கிட்டாலே இப்படித்தான். ஒன்றும் முற்றுப் பெருது' என்று எனக்குள்ளேயே எண்ணிக் கொள்கிறேன். வெளியே சொல்லவில்லை. இதுகள் எல்லாம் அந்தக்காலத்துச் சிந்தனைகள். இந்தக் காலத்துக்கு ஒத்து வராதவை. அமெரிக்கர்கள் மூன்று மூன்று பேராய்ச் சந்திரனுக்குச் சென்று சாதனை நிகழ்த்திவிட்டுத் திரும்பி வந்து விட்ட காலத்தில் இதுகளைப்போய் வெளியே சொன்னல் அடிக்க வருவார்கள்.

இப்படி நான் எண்ணினேனே இல்லையோ அடித்தது யோகம். உங்களுக்கென்ன அப்பிளே வேணும் என்றுகேட்டபடியே குறுக்கிட்டாள் மெனிக்காவைக் கூப்பிடச் சென்ற அந்தப் பக்கத்து வீட்டுப்பெண்.

'இது விடிய விடிய இராமர்கதை விடிஞ்சாப்போலேப்பா வேறை என்னத்துக்கெணை வந்தனுங்கள். விடுப்புப் பார்க்கவே' என்று புகைந்தேன் ஒரு புகை. எனக்குள்ளேயே. ஏனென்றால் மனுஷியைக் கேட்டுப் பிரயோசனமில்லை. மனுஷிக்குத் தமிழ் விளங்காது.எனக்குச் சிங்களம் தெரியாது. கொஞ்சம் கொஞ்சம் புளுவான். என்றாலும் அந்தச் சிங்களத்தைக் கொண்டு தமிழ் ஆட்களோடு என்றால் வெளுத்து வாங்கலாம். சிங்களவரோடு சரிக்கட்டக் காணுது.

'அப்பிளே வேணும்என்று அந்தப்பெண் கேட்குதா?

'ஓம் ஓம் ஏன் அப்பிள் கிடக்கே' என்ருர் நண்பர்,

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெற்றி தோல்வி பற்றி எனக்கு அக்கறையில்லை"

## மனுதார் ஏஜண்டு சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி "வாக்குச் சீட்டுக்கள் இரண்டாவது தடவை எண்ணப்பட்டபோது மனுதாரின் வாக்குகளில் வித்தியாசம் எதுவும் இருக்கவில்லை. 4-வது எதிர் மனுதார் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் வாக்குச் சீட்டுகளைக்கொண்ட கட்டுகளில் 2 சீட்டுக்கள் கூட இருக்கக் காணப்பட்டது. 1-வது எதிர்மனுதாரான மாட்டினின் வாக்கு சீட்டுக் கட்டொன்றில் 1 வாக்கு நிராகரிக்கப்பட்டது."

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப வழக்கில் சாட்சியமளித்த 3-வது எதிர்மனுதாரான உதவி அதிகாரி ஏச். ஆர். அமிர்த் மேற்கண்டவாறு கூறினர்,

அமிர்த் மேலும் கூறியதாவது வாக்கு எண்ணப்படும் போது அபேட்சகர்களும், ஏஜண்டுகளும் இருந்தனர். வாக்குகள் முதலில் 50 சீட்டுகளாகக்கட்டப்பட்டு, பின் 500 சீட்டுகளாக கட்டப்பட்டன. ஜி.ஜி.பொன்னம்பலம் 4-30 மணிக்கு எண்ணப்பட்டபின் சென்ருர். 5-15 மணிக்கு வாக்குகள் திரும்ப எண்ணப்பட்டது 6-40 மணிக்கு வாக்குகள் இரண்டாவதுதடவை எண்ணப்பட்டுமுடிந்தது.

1-வது எதிர்மனுதாரின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த வி. நடராசா கூறியதாவது: நான் இன்று சாட்சியமளிப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை எனக்கு இங்கு வந்தது ஆச்சரியமாக இருக்கிறது. துரையப்பா இந்தியாவில் இருக்கின்ருர். என்னுடன் கடிதத்தொடர்பு வைக்கவில்லை. அவருடைய சுகம் பற்றி எனக்குத்தெரியாது. முதல்தடவை எண்ணப்பட்டதுபற்றி நான் எவ்வித புகாரும் செய்யவில்லை. நான் அதில் திருப்தியடைந்திருந்தேன். மறுமுறை எண்ண வேண்டுமா என்று உதவி அதிகாரி கேட்டார். துரையப்பா எண்ணும்படி சொன்ஞர்.

வழ: துரையப்பா கேட்டிராவிட்டால் திரும்பக் கேட்டிருக்கமாட்டீர்?- நான் அது பற்றி கதைக்கவில்லை;

வழ: நீர் முதல் தடவை எண்ணப்பட்ட போது திருப்தியடைந்தீர்? -ஆம்.

4-வது எதிர்மனுதார்சார்பில் ஆஜரான அட்வக்கேட் எம். மோதிலால்நேரு சாட்சியமளித்த நடராசாவை குறுக்குவிசாரணை செய்தார்.

வழ' நீர் தேர்தல்பற்றி ஆர்வமாக இருக்கவில்லை!- தேர்தலில் யார்வெற்றி பெறுவார்கள் என்பதுபற்றி நான் அக்கறைப்படவில்லை.

நீதி: மனுதாரின் ஏஜண்டுகளுக்கு நீர்தான் பிரதம ஏஜண்டாக இருந்தீர்?-ஆம்.

நீதி: உமக்கு அக்கறையில்லாவிட்டால் மற்ற ஏஜண்டுகளுக்கு உம்மிலும் பார்க்க குறைவாக அக்கறை இருந்திருக்குமா?-எனக்கு அக்கறை இல்லை.

நீதி: மனுதாரின் நண்பர் என்ற முறையில்அங்குஇருந்தீர்?- ஆம்

வழ: முதல்தடவை வாக்குகள் எண்ணப்பட்' பின்தான் பொன்னம்பலம் வெளியேறிஞர்? -இல்லை.

வழ:4வதுஎதிர்மனுதாரின் ஏஜண்டுகள் இரண்டாவது தடவை வாக்குகள் எண்ணப்பட்டபின் வெளியேறிஞர்கள்?-இல்லை.

நீதி: தேர்தலில் அக்கறையில்லாவிடில் உமக்கு வாக்குகள் திரும்ப எண்ணவேண்டும் என்று எண்ண எப்படி யோசனை வந்தது? - துரையப்பாவுடன் கதைத்த போது.

நீதி: அவருடன் கதைத்த பின் அந்த யோசனை வந்தது?- ஆம்.

நீதி: அவர் உமக்கு அந்த யோசனையை கொடுத்தாரா? - இருவரும் கதைத்தோம்.

நடராசா மேலும் கூறியதாவது: எனக்கு அரசியலில் அக்கறையில்லை. அவரின் நண்பன்என்றமுறையில் என்கடமையைச்செய்தேன். வெற்றிதோல்விபற்றிக் கவலையில்லை,

'வாக்குகள்எண்ணப்பட்டபின் என்ன மனநிலையில் இருந்தீர் என நீதியரசர் கேட்டபோது, சந்தோஷமாக இருந்தேன்' என நடராசா கூறினர்.

......


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய் சங்கர் — சுந்தரராஜன்
வாணிஸ்ரீ சந்திரகாந்தா நடித்த
நேர்வழி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், போயா நாட்கள் 10-30
ஸ்பை இன் ரோம்
(SPY IN ROME)- விஜிதி

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன் நடித்த
மாட்டுக்கார வேலன்

5வது வெற்றி வாரம்!
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி





சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
மற்றும் பலர் நடித்த
உயர்ந்த மனிதன்

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளில்
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
முத்துராமன் — வாணிஸ்ரீ
மற்றும் பலர் நடித்த
கண்ணன் என் காதலன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—பத்மினி நடித்த
தில்லானா மோகனம்பாள்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-30-6-30,10-00
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

REGAL
Jaffna
Daily 4-45,7&9-45p.m.
Poya days 4 shows
Michael J. Pollard
in
JIGSAW
(Adults only)

மஞேகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
ஹந்தபான
(சிறந்த சிங்களப்படம்)


## தாக்கப்பட்டாராம்

இமையாணன் வெள்ளி

ரோட்டில் நின்ற ஒருவரை காரில்வந்த ஒருசிலர் தாக்கிவிட்டு மறைந்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம் உடுப்பிட்டியில் நடந்துள்ளது.

உடுப்பிட்டி வல்லையில் தொண்டமானுறு - நெல்லியடி வீதியில் நெசவுசாலைக்கு அண்மையில் நடந்த இச் சம்பவத்தில் தாக்கப்பட்டு காயத்திற்குள்ளான உடுப்பிட்டியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதுசம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.


# வரி விளம்பரம்

## தேவை

ரைப்பிஸ்ட்:

ஆங்கிலம், கணக்குப் பதிவியலில் நல்ல அறிவுள்ள ஆண்/பெண் ரைப்பிஸ்ட் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது விண்ணப்ப முடிவு திகதி: 10-12-70. குகநேசன், 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2535

## விற்பனைக்கு

காணி:

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆ. சின்னத்துரை (துரை) இராசகாரியர்லேன், மானிப்பாய் வடக்கு. 2532

காணி:

யாழ்ப்பாணம், அரியாலையில், கண்டிவீதிக்கு அருகாமையிலும் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட, குடிதண்ணீர், மின்சாரம், பாடசாலைகள், சந்தை முதலிய சகல வசதிகளும் அமைந்த ஒவ்வொன்றும் இரண்டு பரப்பு அல்லது அதற்கு மேற்பட்டதாகவும் உள்ள 20 துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லான்ட் ரேட்ஸ் (Land Trades), 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2534

யாழ்ப்பாணம் -நல்லூரில் பெரிய வளவும், புதியவீடும் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கிடைக்கும். தொழிற்சாலைகள் - பண்ணைகளுக்கு தகுதியானது. எழுதுங்கள். வெஸ்டன்றேட்ஸ், தபால்பெட்டி-54,யாழ்ப்பாணம். 2356

வாடகைக்கு / குத்தகைக்கு வீடு:

விசாலமான வீடு யாழ்ப்பாணத்திற்கு ஐந்து கட்டைக்குள் வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை. தபால்பெட்டி 67, யாழ்ப்பாணம் 2531

## வகுப்புகள்

ரை அன் டை (Tie&Dye) பட்டிக் (BATIK), ஸ்கிறீன் பிறின்டிங்(SCREEN PRINTING), ஹான்ட் பெயின்டிங் (HAND PAINTING) வகுப்புக்கள் நடைபெறும். விபரங்களுக்கு: காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை ஜோதி அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2527


## மரம் நாட்டு விழா

ஊரதீவு,வெள்ளி

வேலணைக் கலைமகள் இளைஞர்விவசாயக் கழகத்தினரும், வெலணை மத்திய இளைஞர் விவசாயக் கழகத்தினரும் மரம் நாட்டுவிழாவொன்றை வேலணையில் நடத்தினர்.

இவ்விழாவில் அமெரிக்க நான்கு எச்கழகத்தைச் சேர்ந்த சாம் சுவாங் என்ற இளைஞரும் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு கே. நடராசாவும் யாழ்ப்பாணம் மாவட்ட இளம் விவசாயிகள் சங்க அமைப்பாளர் திரு. கே. ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்து கொண்டனர். திரு. வி. எஸ். கனகரத்தினம் தலைமையில்விழா நடைபெற்றது.

— —

## பட்டிமன்றம்

ஊரதீவு, வெள்ளி

வேலணை மத்திய மகாவித்தியாலய சிரேஷ்ட கலாவிருத்திச் சங்க ஆதரவில் மேற்படி வித்தியாலயத்தில் "கைகேயி கயமைத்தனமுள்ளவளா?" என்ற பொருள் பற்றிய பட்டிமன்றம் ஒன்று நடைபெற்றது

செல்வி தா. இராசேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இப்பட்டி மன்றத்தில் 'கைகேயிகயமைத் தனமுள்ளவள்' என இ. சுகுமாரன் சொ. அரியலிங்கம் ஆகியோரும் 'கயமைத்தனம் அற்றவள்' எளபொ. மாணிக்கவாசகர் கா. பூபாலசிங்கம் ஆகியோரும் வாதிட்டனர்,

## பிரியாவிடை கூட்டம்

முல்லைத்தீவு.வெள்ளி

வவனியா பிரதம கல்வி அதிகாரியாக இருந்து இளைப்பாறிய திரு. சி. ஏ. ஞானசேகரத்துக்கு அளித்த பிரியாவிடை வைபவத்திற்கு முல்லைத்தீவு வட்டாரக்கல்வி அதிகாரி திரு. டபிள்யூ ஆர். அருளையா தலைமைதாங்கினுர் வவனியாமாவட்ட கல்வியதிகாரி திரு. த. நடராசா உட்படப் பல ஆசிரியர்கள் திரு. ஞானசேகரத்தின் சேவையைப் பற்றியும் குணதிசயங்கள் பற்றியும் பேசினர்கள் திரு. ஞானசேகரம் நன்றி தெரிவித்துப் பேசினர்

......

## தபால் அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி. வெள்ளி

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த பஜார் என்னும் பகுதியில் உபதபால் நிலையம் ஒன்றை அமைக்கும்படி பருத்தித்துறைக் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளைக் காரியாலயம் தபால் தந்தி மந்திரிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதாமாதாக்களை உடைமையே பெரும்பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

சோம்பலே தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம். நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள் முறையே பெரும்பான்மையும், நமது நற்சார்பு தீச்சார்புகளால் ஆகும்.

நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல்வேண்டும்; பயில்வோமாகில், மேலே பெருந்துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.

— நாவலர்




### முக்கிய அறிவித்தல்

1971-ம் ஆண்டுக்குரிய கலண்டரை 31-12-70-ம் திகதிக்கு முன்னதாக பின் வருவனவற்றில் ஏதேனும் ஒரு பகுதியை அனுப்பி பெற்றுக்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

(1) 50 மில்க்வைற் நீல சோப் மேலுறைகள்

(2) 10 பார்சோப் மேலுறைகள்

(3) 10 சலவைப்பவுடர் மேலுறைகள்

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

தபால் பெட்டி இல 77 யாழ்ப்பாணம்.


# இலங்கை புத்தக கண்காட்சி!

## பெப். 4-ல் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் திறக்கிறது

கொழும்பு, வெள்ளி

இலங்கையரின் படைப்புகளைக் கொண்ட புத்தகக் கண்காட்சியொன்றை அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் கிளை ஒழுங்குசெய்து வருகின்றது. இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4-ம் திகதி இக்கண்காட்சி திறந்து வைக்கப்படும்.

இத்தகவலை அனைத்துலகத் தமிழாராய்ச்சி இலங்கைக் கிளைச் செயலாளர் வண. பிதா தனிநாயகஅடிகள் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும், வெளிநாட்டிலும் 1947—1970 இடைப்பட்ட காலத்தில் இலங்கையரால் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களை உள்ளடக்கியதாக இப் புத்தகக் கண்காட்சி அமையும் என்றும் இக்கண்காட்சியில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நூல்கள் இடம் பெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடகம், கல்வி, நாவல், வரலாறு, இலக்கியத் திறனாய்வு, தத்துவம், கவிதை, மதம் ஆகிய துறைகளைச் சேர்ந்த நூல்கள் இக்கண்காட்சியில் இடம்பெறும்.

இத்துடன் உயர்வகுப்புகளுக்கு எழுதிய நூல்களும், மொழி பெயர்பு நூல்களும் இதனுள் அடங்கும்.

நூல் ஆசிரியர்கள், பதிப்பாளர்கள், விநியோகத்தர்கள் ஆகியோரை இரு நூல் பிரதிகளைக் கண்காட்சிக்கு அனுப்பிவைக்கும்படி அனைத்துலகத் தமிழராய்ச்சிக்கழக இலங்கைக்கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

1947—1970 இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட ஆங்கில நூல்களில் ஒரு பகுதியும், தமிழுடன் தொடர்புகொண்ட பிறமொழி நூல்களும் இக்கண்காட்சியில் இடம்பெற இருக்கின்றது. இலக்கியவரலாறு, சட்டம், தத்துவம் சமயம் ஆரம்பக் கண்காட்சியாக இருப்பதினால் முக்கிய பிரசுரங்கள், சஞ்சிகைகள் முதலியனவும் இக்கண்காட்சியின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தகங்களை அனுப்ப விரும்புவோர் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக அனைத்துலக தமிழாராய்ச்சிக்கழகம், இலங்கைக் கிளை, 6, கிளன் ஆப்பர் பிளேஸ், கொழும்பு-4 என்ற விலாசத்திற்குஅனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் வானொலி நிலையம் அவசியம் தேவை

### ஒலிபரப்பு கமிஷன் முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன விசாரணைக் கமிஷன் நேற்று யாழ் செயலகத்தில்வைத்து சாட்சியங்களைப் பதிவுசெய்தது. திரு. வி. சி. ஜெயசூரியா தலைமையில் செல்வி எல்வின் பெர்ணண்டோ திரு. எம்.ஏ.டி. சில்வா ஆகியோர்சாட்சியங்களைப் பதிவிசெய்தனர்.

வடமாகாணஅரசாங்கஅதிபர் திரு.விமல் அபயசேகரா, யாழ்நகரமேயர் திரு.ரி எஸ். துரைராசா, வடபகுதிகல்வியதிபர் திரு சங்கரலிங்கம், திரு சீனிவாசகம் ஆகியோர் உட்படப் பலர் சாட்சியமளித்தனர். யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலி நிலையம் அமைக்கவேண்டுமென்று இதில் சாட்சியமளித்த பலரும் வற்புறுத்தினர்.

## அரவிந்தர் சின்னம்

### ஒரிசாவில் இடம்பெறும்

சென்னை, நவ. 27

ஒரிசாவிலுள்ள ஜகத்சிங்பூரில் அரவிந்தரின் புனிதச் சின்னங்கள் வைக்கப்படவுள்ளன.

டிசம்பர்மாதம் 5-ம் திகதி புதுச்சேரியிலிருந்து அரவிந்தரின் புனிதச் சின்னங்கள் சென்னைக்கு காரில் எடுத்து வரப்படும். சென்னையிலுள்ள அரவிந்தர் மணி மண்டபத்தில் பொதுமக்களுடைய தரிசனத்துக்காக அரவிந்தரின் புனிதச் சின்னங்கள் வைக்கப்படும்.


ஈழநாடு

சாதாரண வருடம் கார்த்திகை மாதம்

13-ந் திகதி [28-11-70]


## எல்லாம் நன்மைக்கே!

கொழும்பிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த சிட்டகாங்குக்கு இம்மாதம் முதல்வாரத்தில் புறப்பட்டுச்சென்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் வங்க கடலிலே பழுதுபட்டு ஓடமுடியாமல் தத்தளித்தது.

பத்துநாட்கள் இப்படித் தவித்ததில் உணவு, குடி தண்ணீர் எல்லாம் முடிந்தன. பின்னர் ஒரு டச்சுக் கப்பல் அதன் உதவிக்கு வந்து, சென்னைத் துறைமுகத்தில் பத்திரமாகச் சேர்த்ததாயும், கப்பல் பழுதுபட்டதும்கூட நன்மைக்கேயென்றும், இன்றேல் சிட்டகாங் சென்று சூருவளியில் சிக்கி சர்வநாசமடைந்திருக்கக்கூடுமென்றும் கப்பல் தலைவர் உட்ஸயிட் என்பவர்கூறி, ஆறுதலடைகின்றார்.

இச்சம்பவம் நமக்கெல்லாம் ஒரு பாடமாகும். வாழ்க்கையில் சிற்சில இன்னல்களும் சோதனைகளும் ஏற்பட்டதும், நாம் மனம் உடைகின்றோம். இனி என்ன நேருமோ என்று அஞ்சுகிறோம். 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்பதையும் இறைவன் கருணாமூர்த்தியாதலால், நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற முழுநம்பிக்கை நமக்கு வருவது அரிதாக உள்ளது. தொட்டதற்கெல்லாம் அஞ்சி அஞ்சிக் கூசுகின்றோம்.

மேற்குறித்த கப்பல் தலைவரின் அனுபவத்தையும் நமது வாழ்க்கையின் முன் அனுபவங்களையும் சற்றே சிந்தனை செய்துபார்த்தால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற நம்பிக்கையையும் மனஉறுதியையும் பலப்படுத்தி நமது வீண் பயங்களைப் போக்க அவை பெரிதும் உதவுவதாக இருக்கும்.

## இந்தோனேஷியாவில் திருவாசகமணி

சென்னை, நவ. 27

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் இந்தோனேஷியாவிற்கு விஜயம் செய்துள்ளார். இந்தோனேஷியாவில்உள்ளமேடான் நகர் மகாமாரியம்மன் கோவில் ஸ்தாபன இந்து சமயத் தலைமைப் பீடத்தின் அழைப்பின்மீது அவர்அங்கு சென்றுள்ளார். இந்துசமயம், சைவசமயம், தமிழின் பெருமை முதலியவை பற்றி திருவாசகமணி இந்தோனேஷியாவில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பாலித்தீவுக்கும் திருவாசகமணி சென்று அங்குள்ள இந்து கலாச்சாரத்துடன் தொடர்பான சரித்திரச் சான்றுகளையும் சின்னங்களையும் ஆராயவிருக்கிறார்.

— —


## கேலி செய்கின்றனராம்

தாவடி, வெள்ளி

கொக்குவில் - குளப்பிட்டி சந்தி ஊடாகப்பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவிகளை சந்தியில் கூடி நிற்கும் இளைஞர் கோஷ்டி கேலிசெய்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.


இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வைமன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர்மாதம் 28ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## ரமழான் குரலொலி



"ஒரு மனிதன் மரணித்து விட்டால் அவனது நற்கிரியைகள் அனைத்தும் தொடர்பற்றுப் போய்விடுகின்றன. மூன்று கருமங்களிலிருந்து கிட்டும் பலனைத்தவிர.

அவையாவன: தொடர்ந்து நடைபெறும் தர்மம். பிரயோசனம் பெறப்படும் அறிவு. மாண்டுபோனவனுக்காக பிரார்த்தனை புரியும் நல்ல மகன்.

(நபிமொழி; கூறுபவர்: ஆபூஹுரைரா (றழி) ஆதாரம்: முஸ்லிம்)

மனிதன் சேர்த்து வைத்த பணத்தினால் அவன் மறைந்தபின் பங்குதாரர்களிடையே அடிதடி. ஆனால் பொதுஜன உபயோகத்திற்காக கட்டிய கிணறு அல்லது சத்திரம்; உருப்படுத்திய நூல் அல்லது மாணவன். பெற்றுப் பக்குவமாய் வளர்த்துவிட்ட நல்லமகன். இம்மூன்றினாலும்தான் அவனுக்கு புகழும் கீர்த்தியும் இறையருளும் இறந்தபின் கிட்டுகின்றது. பணம் தூங்கி விடுகின்றது.

நல்லறிவும் நன்மகவும் என்றும் நிகழ் அறமும் பின்னின்று அளிப்ப பயன்

மௌலானா உமர் ஹசரத்

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம், ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-45 | 6-05 | 12-20 | 3-22 | 5-53 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-13 | 4-30 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org